BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

ORU PAPER

Paper - 04 Issue - 83 07 Friday December 2007

விற்பனைக்கல்ல

• நீங்கள் வீடு வாங்க, வியாபாரம் வாங்க கடன் தேவையா?
• வியாபார, ஆயுள்க் காப்புறுதிகள் செய்ய வேண்டுமா?
• உங்களுக்கு தேவையான Tax Advice, வியாபார ஆலோசனைகள் மற்றும் அனைத்துவகை Accountancy Servicesகளுக்கும் நாட வேண்டிய இடம்...

Forward Consultants
1, Lancelot Road, Wembley HA0 2AJ Tel: 0208 900 9052




VISION TRAVEL & TOURS
உலகின் அனைத்து இடங்களுக்கும் மலிவான விலையில் பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்வதற்கு.....
SHIPPING | TRAVEL & TOURS | AIRFREIGHT TO WORLDWIDE
Part of Serendip Lanka Travels
Tel : 020 8772 7991-2 Fax : 020 8772 7993

உங்கள் வீட்டை உடனடியாகவோ சடுதியாகவோ விற்க வேண்டுமா ?
TO SELL YOUR HOME IMMEDIATELY OR QUICKLY
CALL FREE 7 DAYS A WEEK 0800 008 6714
HIP TEAM 1
We arrange for our clients FREE & QUICK VALUATION-HIP-CONVEYANCING

Hot Fares - Economy
Colombo from £335 + Taxes
Dubai from £205 + Taxes
Madras from £300 + Taxes
Bombay from £237 + Taxes
Delhi from £300 + Taxes
Hong Kong from £370 + Taxes
Cairo from £241 + Taxes
IATA
Please call us on
020 8866 6006
020 8866 6011
Cheapest tickets Worldwide
United Travel Ltd
428, Rayners Lane, Pinner, Harrow, Middlesex, HA5 5DX

ABBEY TRAINING. NET
✓ OFF Licence/ Restaurant வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் அனைவருக்குமான Personal Licence எடுத்து தருவோம் அத்துடன்
✓ NCPLH CERTIFICATE COURSE
✓ Supervisor Course For OFF Licence and Restaurants (DPS)
✓ உங்கள் வியாபார ஸ்தாபனத்துக்கான புதிய off licence / restaurant premises licence எடுத்து தருகிறோம்.
✓ LIFE IN THE UK - பிரித்தானிய பிரஜா உரிமைக்கான வகுப்புகள்
✓ எல்லா Course களையும் தகுதிவாய்ந்த விரிவுரையாளர்களுடன் நடத்துகிறோம்.
38 London Road, Tooting SW17 9HP
தொடர்புகொள்ள: Thavanessan
020 8640 9900 / 07956 913 164 / 07960 665 575

RAJA& CO SOLICITORS
10 Upper Tooting Road, Tooting Bec
London SW17 7PG
Tel: 020 8772 4900 Fax: 020 8682 9425
We provide following Legal Services:
Conveyancing:-
Buying and Selling
Houses Flats & Business
Criminal Cases
Civil Litigation
Family
Immigration
We hold Legal Aid Franchise in Immigration & Crime

LONDON ACCIDENT CLAIMS LIMITED
70 Windmill Road, Croydon, CR0 2XP
Had an accident - Not your fault
Driver / Passenger - within last 3 years
• Personal Injury Compensation (eg. back, neck & Shoulder pain etc)
• Repair / Total Loss Value of your vehicle
• Loss of Earnings
• Hire Care for Mini Cab Drivers
• Replacement Car = Credit Hire (terms & Conditions apply)
Your Premium will not be affected
NO WIN - NO FEE
Tel: 020 8665 7667 Fax: 020 8684 7177
Mob: 07950 953 514 Call Free: 0800 032 6798

Mortgagelink
The National Mortgage Network
Why Rent... When You can Buy?
எந்த விதமான Deposit இல்லாமல் வீடு வாங்க வேண்டுமா?
வாடகை வீடுகளில் வசிப்பவர்கள் சொந்தமாக வீடு வாங்கி வாழ விரும்புகிறீர்களா? கவலை வேண்டாம்
தற்போது கீழ்கண்ட இடங்களில் வீடுகள் கைவசம் உள்ளன.
Mitcham, Thornton Heath, Peckham, South Norwood, Croydon, Eastdown Park, Streatham, Sydenham, Penge, Catford.
Mob: 07930 626 585 | Tel: 020 8946 5566
Your home is at risk if you do not keep up repayments on a mortgage or other loans secure on it.

சிங்கம் தமிழ்க் கடை
உங்களுக்குத் தேவையான மரக்கறி வகைகள், மளிகைப் பொருட்கள், மற்றும் அனைத்து வகையான மதுபான வகைகள் மலிவான விலையில்...
Red Lion Wine Shop
Tel: 0208 297 8778
184 Hither Green Lane, Lewisham, SE13 6QA
Opening Hours: 7 days a week 7 am to 12pm
parking space available

M. ஜெகன்
Tel: 0208 606 8693
KV பணபரிமாற்றல் சேவை
தேசன் கடை உட்புறமாக
217, The Broadway, Southall, Middx, UB1 1NB

## ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்




# Chakalaka

International Butchers

தென் ஆபிரிக்காவின் திறமான வகை வகையான இறைச்சிகளுக்கு...

Lamb, Poultry, Pork, Beef, Venison, Game, Biltong, Droewors, Sosaties...

Free delivery Merton & Putney for orders exceeding £50

Exotic variety of Game in stock: Kudu, Spring-bok, Ostrich, Crocodile, Kangaroo, Zebra....

Retail or Wholesale.

T: 020 8788 2959
M: 07511 259 738

Opening Hours
Mon to Sat 8am till 8pm & Sunday 10am till 3pm

Chakalaka International Butchers,
10 Montfort Place,
Southfields, SW19 6QL

---

## தரமான சேவை நிறைவான கட்டணம்

ACCA

- ☑ Tax Returns - Buy to Let properties
- ☑ Tax Returns - HSMP Visa Holders
- ☑ Solicitors Accounts / Bank Reconciliation
- ☑ VAT Returns / Payroll / PAYE
- ☑ Company Formation
- ☑ CGT & Death Tax Advice
- ☑ Business Plan & Cash-flow Forecast

Qualified & experienced accountancy professionals
Free initial visit to your premises and consultation
Practical training for students & Book keepers

# J K ACCOUNTANTS

CALL: **0208 553 9891**

Chartered Certified Accountants - Chartered Management Accountants

845A Romford Road, Manor Park, London E12 5JY - Email : jkaccountants@talktalk.net

---

*A two partners Solicitors firm, local to you, delivering your legal matters in a friendly and cost effective means.*

# Coulsdon Solicitors

*Regulated by the Solicitors Regulation Authority*

- Conveyancing – Buying / Selling, freehold / Leasehold, Residential / Commercial and Remortgages
- Landlord & Tenants
- Wills & Probates
- Immigration & Nationality Law – Work Permit, Student Visa, Settlement Visa, HSMP, Long Stay and Visit Visa
- Matrimonial & Family Law – Separation & Divorce, Financial Settlement, Injunction
- Litigation
- Criminal Defence
- Powers of Attorney



Please contact us on **0208 660 0810** to book an appointment for a " free " initial consultation

*Language capablity Tamil, English, Malayalam*

160 Brighton Road, Coulsdon, Surrey, London CR5 2NE
E-mail:info@csolicitors.com

---

வாடிக்கையாளரின் ஏகோபித்த வேண்டுதலுக்கிணங்க Mitchamல்
எங்கள் சேவையை ஆரம்பித்துள்ளோம்.

# Grand opening
## on 14/12/07

CLOCKWISE PROPERTY SERVICES

## CLOCKWISE PROPERTY SERVICES

Residential Sales | Lettings & Management | Mortgage | Insurance

குறைந்த முதலீட்டில் வீடுகள் வாங்குவதற்கும் குறைந்த
வட்டியில் கடன் வசதிகள் பெறுவதற்கும்

வீடுகள் வாங்கவும் சிறந்த பராமரிப்புடன்
வாடகைக்கு எடுக்கவும், விடவும்...

415 B London Road, Mitcham, Surrey, CR4 4BJ
Tel. 02086460891, 0208090 8427, Mob 07961 981 278
Email: clockwiseproperty@gmail.com
Web: www.clockwiseproperty.co.uk

---

# ANGELS

Mortgages + Loans
Sales + Lettings
Insurance + Building Insurance

## Properties and Financial Services Ltd.

**Commercial Mortgage**
**Decision – Same day**

# 5% - 10%
## Deposit paid

- ☑ Repossessions stopped
- ☑ Mortgage/Loan cleared
- ☑ Eviction stopped
- ☑ Urgent cicrcumstances




74 Lee High Road
Lewisham SE13 5PT
Tel: 020 8852 1683
Fax: 020 8852 1621
email: info@angelsproperties.co.uk
web: www.angelsproperties.co.uk

# தூவல்



## ரசிக்கும்படியான எழுத்து

சலுசலாக் காலத்தை எங்கள் கண் முன்னால் கொண்டு வந்த சிறிக்கு பாராட்டுக்கள்.

அவர் எழுதுகின்ற பெரும்பாலான விடயங்கள் நாங்களும் அனுபவித்தவை தான். ஆனால் சின்னச் சின்ன விடயங்களையும் ரசித்து வாசிக்கக் கூடிய விதமாய் நகைச்சுவையும் சேர்த்து தரும் அவரின் எழுத்துப் பாணி மிக மிக அருமை.

— *சுதன் / ஹறோ*

## மனிசன் பாவம்

பாவம் அந்த மனிசன் காசுக்கு ஆசைப் பட்டு தடம்புரண்டு போய் இப்ப போற இடத்திலை எல்லாம் அலைச்சல் பட்டுக் கொண்டு திரியுது.

நீங்கள் பிற்சா தின்னிற கதையைச் சொல்லி அந்த மனிசன்ரை வயித் தெரிச்சலைக் கூட்டிறியள்.

அவருக்கு ஜெயிலுக்குள்ளையும் வேறை சாப்பாடு கிடைக்கிறதாக் கேள்வி

— *ராஜன் / வெம்பிளி*

## வீர வாழ்த்துக்கள்

தாயகம் காப்போரின் தாள்
பணிவோம்

நேயமுடன் அவர் நினைவை
நெஞ்சில் பதிவோம்

என்ற முகப்பு வரியுடன் சென்ற ஒரு பேப்பர் வந்திருந்தது. அதனை வாசித்த போது எனக்கு அழுகை வந்தது. மாவீரர் நினைவையும் இப்படி வித்தியாசமாயப்போற்ற ஒரு பேப்பரால் தான் முடியும்.உள்ளேயும்

வீரர்கள் ஒருபோதும் வீழ்ந்ததில்லை

வித்தான அவர் நினைவு
ஓய்ந்ததில்லை

என்றும்

நெஞ்சினில் நெருப்பேந்தி
வந்தவரே
வெஞ்சமரில் வெற்றியைத்
தந்தவரே வீரவணக்கம்

என்றும் மாவீரர் நினைவைப் போற்றியிருக்கிறீர்கள். முகப்பில் பிரசுரித்த புகைப்படத்தை இன்னும் தெளிவாகப் போட்டிருந்தால் இன்னும் இதயம் அழுதிருக்கும். மாவீரர் நினைவைப் போற்றியதற்காக ஒரு பேப்பருக்கு என்னுடைய வீர வாழ்த்துக்கள்

— *அருணன் / சூரிச்*

## என்ன தான் நடக்கிறது

பாகிஸ்தானில் பேவஸ் முஸ்ராபை விட மோசமான ஆட்சியை சிறிலங்காவில் மஹிந்த ராஜபக்ச செய்து கொண்டிருந்தாலும் முஸ்ராபைத் தான் அப்படிச் செய். இப்படிச் செய்யாதே என்று சர்வதேசம் ஆட்டிப் படைக்கிறார்கள். ஏன்

—*செல்வரத்தினம் / லூசியம்*

## மூட நம்பிக்கையை ஒழிப்போம்

ஆசிரியர் குழுவிற்கு வணக்கம்

தங்களின் ஒரு பேப்பர் ரை அண்மையி;ல பாரிசில் படிக்கக் கூடியதாக இருந்தது.

தங்கள் தாயகத்தை விட்டு வெளி நாட்டிற்கு வந்துள்ள தமிழர்கள் மூட நம்பிக்கைகளையும் மூட்டை கட்டிக் கொண்டுவந்து கடைபரப்பிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கண்டு வேதனைப்பட்டேன்

தந்தை பெரியாரின் கருத்துக்கள் எவ்வளவு அவசியம் என்பதைத் தங்களின் ஒரு பேப்பரில் படித்த போது மனதுக்கு ஆறுதலலக இருந்தது.

காலமெல்லாம் நம்பிய கடவுள்கள் கொஞ்சம் கண்திறந்து பார்க்காததால் தானே செத்தோமா பிழைத்தோமாவென்று கடல் கடந்து வர வேண்டிய நிலமை. இதை உணரச் செய்ய வேண்டியது நியாயமான உணர்வு படைத்தவர்களின் கடமையாகும்.

— *முகுந்தன் / பாரிஸ்*

## பிராமணியம் மவுசு கெடும்

தமிழ் ஈழம் உதித்து விட்டால் தமிழ் நாடும் பிரிந்திடுமாம். என்ன விதமாகக் கதை கட்டுகிறார் இந்த இந்திய ஆலோசகர்கள் என்னும் பிராமணக் கூட்டம். தமிழ் உணர்வை வளரவிட்டால் பிராமணியத்தின் பம்மாத்து அம்பலமாகி அது ஓரங்கட்டப் படும் என்ற உள்பயம்தான் அவர்கள் பயம்

— *பிரபா / மொன்றியல்*

## பாலா அண்ணா எங்கே?

தாயக அனுபவங்களை நகைச்சுவை சேர்த்துத் தந்து கொண்டிருந்த கடந்ததும் நடந்ததும் பகுதியை கடந்த சில வாரங்களாகக் காணவில்லையே? அவரை எங்கேயிருந்தாலும் தேடிப் பிடித்து மீண்டும் எழுத வையுங்கள். அந்த நகைச்சுவை ததும்பும் எழுத்துக்களை மீண்டும் பார்ப்பதற்கு ஆவலாயிருக்கிறோம்.

— *சிந்தியா / மிச்சம்*

## வடுக்களை களையுங்கள்

ஐயா, உங்களின் மாதமிரு முறை மலரும் இதழ்கள் தேய்ந்து வளரும் நிலவுபோல் அல்லாது எப்பவுமே முழுமதியாய் எமக்கெல்லாம் தகவல் ஒளி தருகின்றது.

ஆனாலும் சில வடுக்கள் இருக்கத் தான் செய்கிறது. சற்றுக் கவனம் செலுத்துங்கள். அவையெல்லாம் மறைந்து விடும்.

— *சந்திரன் / லெஸ்ரர்*

## புலுடா வேண்டாம்

நாம் இப்போது 21ம் நூற்றாண்டில் உள்ளோம். அறிவியல் எவ்வளவோ வளர்ந்து விட்டது. இன்னும் பறக்கும் தட்டுக்கள் பற்றி ஏன்தான் புலுடா விடுகிறீர்கள்.

மிகை ஒலி வேகம் பெரிதல்ல. அதுபோல் பன்மடங்கு வேகத்திற் வந்தாலும் பல ஆயிரம் ஆண்டுகள் எம் பக்கத்து வீட்டிலிருந்து (நட்சத்திரம்) வருவதானாலும் தேவைப் படும். தயவு செய்து உப்புடியான புலுடாக்கள் விட வேண்டாம்.

— *மதி / குறோய்டன்*

## பேய்க் காட்ட வேண்டாம்

கருணா அம்மானுக்கு ஒரு கடிதம் நன்றாக இருந்தது. நீங்கள் சொல்வது நூற்றுக்கு நூறு உண்மை. தலையில் இருந்து விழுந்து போன மயிர் தான் கருணா.

அவருக்கான தீர்ப்பை தமிழீழ மக்கள் மன்று வழங்கி விட்டது. எல்லாம் சரிதான். ஆனால் யாரைப் பேய்க்காட்டப் பார்க்கிறீர்கள்

எழுதியவர் பெயர் பூபாலப் பொடியார் என்றிருக்கிறது. போடியார் என்றது மட்டக்களப்பில் வழங்கும் சொல். ஆனால் எழுத்து நடை யாழ்ப்பாணத் தமிழில் இருக்கிறது. ஒன்றுமே புரியவில்லை

— *பாலா /சவுத் ஹோல்*

## மொட்டையாக ஏன்?

பல நல்ல விடயங்களைத் தருகின்ற ஒரு பேப்பரின் சென்ற இதழில் மொட்டைக் கடிதம் என்றொரு விடயத்தைப் பிரசுரித்திருந்தீர்கள். தயவு செய்து அதனை உடனடியாக நிறுத்தி விடுங்கள். அல்லது மற்றவர்கள் தங்களுக்கு பிடிக்காதவர்கள் மீது வஞ்சம் வஞ்சம் தீர்ப்பதற்கு அதனைப் பயன்படுத்திக் கொள்வார்கள் இது உங்களுக்குத் தான் கெட்ட பெயரைக் கொண்டு வரும்

— *சரவணன் /ஜெர்மனி*

# கொழும்புக் கடிதம்

எல்லாரும் எப்படியிருக்கிறியள் எண்டு சுகம் விசாரிக்கிற நிலமையிலை நான் இஞ்சை இல்லை.

சட்டத்திலை ஒரு விதி இருக்குதாம். ஒருவன் குற்றவாளி எண்டு நிரூபிக்கப்படும் மட்டும் அவனைக் குற்றமற்றவனாத் தான் கருத வேணுமாம்.

ஆனால் இண்டைக்கு கொழும்பிலை நிலமை தலைகீழாக் கிடக்கு. தமிழனாப் பிறந்தால் குற்றவாளி. பிறகு தான் விசாரணை அது இது எல்லாமே எண்டு சொல்லிப் போட்டு ராணுவ ஆட்சி நடக்குது. இதை ஏனெண்டு கேட்பாருமில்லை.

அங்காலை பாகிஸ்தானிலை அவசர காலச் சட்டம் போட்டாச்சு எண்டதும் விழுந்தடிச்சுக் கொண்டு இது முறையோ இது தகுமோ எண்டு கூக்குரல் போடுற சர்வதேச பொலிஸ் காரர் எல்லாம் இலங்கையிலை வருசக் கணக்கா நாங்கள் இந்த அவசர காலச் சட்டத்தாலை படுற அவஸ்தைகளைப் பற்றி மூச்சே திறக்கிற இல்லை.

இதிலை ஆகலும் கவலையான விசயம் கொஞ்சக் காலத்துக்கு முதல் நாங்கள் எல்லாரும் தமிழர் நாங்கள் எல்லாரும் ஒத்துநிக்க வேணுமெண்டு சொல்லி கிழமைக் கொருக்கால் வன்னிக்குப் போய் வந்த கூட்டம் இப்ப மஹிந்தரிட்டைப் போய் எங்கடை ஆக்களை மட்டும் வெளியிலை விடுங்கோ இல்லாட்டி எங்கடை ஆக்கள் நாங்கள் உங்களுக்கு சப்போர்ட் பண்ணிறதுக்கு கோவப் படுவினம் எண்டு சொல்லித் திரியினமாம்.

ம்ம்ம்... இதுகளை ஆரிட்டைப் போய்ச் சொல்லுறது.

என்ரை மச்சான் முறையான ஆள் ஒராள் வெளிநாட்டிலை இருந்து ரெண்டு மாச லீவிலை வந்து என்ரை வீட்டிலை தான் நிண்டவர். அப்ப அவர் அடிக்கடி சொல்லுவார்

"கொழும்பென்ன சொர்க்க புரி மாதிரிக் கிடக்குது. வெளிநாடுகளெல்லாம் பிச்சை வாங்கவேணும். 'அவங்களுக்குத்' தான் ஒற்றுமையா இருக்கத் தெரியாமல் சும்மா அடிபடுறாங்கள் எண்டு.

அவரையும் அண்டைக்கு சொப்பிங் எண்டு வெளிக்கிட்ட இடத்திலை அள்ளிக் கொண்டு போய் பூசாவிலை தீன் ஊண் இல்லாமல் மூண்டு நாள் வைச்சிருந்திட்டு விட்டவங்கள்.

வந்தவர் இப்ப சொல்லுறார். தான் வெளிநாட்டுப் பாஸ்போட்டைக் காட்டவும் முறைச்சுப் பாத்துக் கொண்டே ஏத்தினவங்களாம். கடைசியா ஞானம் வந்து ஒரு விசயத்தைச் சொன்னார்

"நாங்கள் நிம்மதியா இருக்க வேணுமெண்டால் எங்களுக்கெண்டு ஒரு நாடு கட்டாயம் வேணுமண்ணை"

போற போக்கைப் பாத்தால் மஹிந்தவே தமிழீழம் கிடைக்க வழி செய்து விடுவார் போலை கிடக்குது.

தப்பிக் கிப்பி இருந்தால் பிறகு கதைக்கிறன்.

*கொழும்பான்*

MONEY IN MINUTES TO SRI LANKA




இலங்கைக்கான பணமாற்றுச் சேவை

நம்பிக்கை நாணயமிக்க மிகத் துரிதமான சேவை

குறிப்பிட்ட அதே நாளில் பணத்தை அங்கு பெற்றுக்கொள்ளவோ அன்றி அங்குள்ள உங்களது எந்த வங்கிக் கணக்கிலும் வைப்பு செய்ய கூடியதான வசதிகள்.

HSBC · COMMERCIAL BANK · HNB · PEOPLE'S BANK · SEYLAN BANK LIMITED · SampathBank · BOC BANK OF CEYLON

Head Office : 125 - 127 Bramley Road, Oakwood, London N14 4UT

Transfer Hotline
020 8886 4488
www.cecfastcash.com

PAY AT
BARCLAYS

நீங்கள் எங்கிருந்தாலும் உங்கள் பணத்தை பாதுகாப்புடனும் விரைவுடனும் அனுப்ப அருகில் உள்ள BARCLAYS இல் பணத்தை வைப்புச் செய்த பின் எம்மை அழையுங்கள்

| | | |
|---|---|---|
| A/C NAME | : | C.E.C.LTD |
| A/C NO | : | 70713945 |
| SORT CODE | : | 20-36-47 |
| BRANCH | : | HANOVER SQ. |

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, DECEMBER 07, 2007, ISSUE 83

## தீர்வு, அனைத்துலக சமூகத்தின் கைகளில்...

இலங்கைத்தீவில் தேசிய இனங்களுக்கிடையிலான முரண்பாடு என்பது ஒரு உள்நாட்டுவிவகாரம் என இன்னமும் யாராவது கூறிக்கொண்டிருப்பார்களேயானால் அவர்களையிட்டு நாம் சிரத்தை கொள்ளத் தேவையில்லை. இருப்பினும் தங்களது வசதி கருதி சில நாடுகள் இன்னமும் இப்படிக் கூறி தங்களது பொறுப்புக்களை தட்டிக் கழித்துக் கொண்டு மறுபுறம் சிறலங்கா அரசுடன் உறவுகளைப் பேணி தமது வர்த்தக, பிராந்திய நலன்களை பேணிவருகின்றன.

இப்பிரச்சனையானது சர்வதேச அரங்கில் விவாதிக்கப்படும் விவகாரமாக இருக்கின்ற போதும், பொருளாதார இராணுவ மேலாதிக்கத்தைக் கொண்டுள்ள வல்லாதிக்க நாடுகள் சரியான அணுகுமுறையை கொண்டிருக்கவில்லை என்பதே இப்போதுள்ள சோகம். இங்கு அவை யார் பக்கம் சார்ந்து செயற்பட வேண்டும் என்பதல்ல, அவை மனிதவுரிமைகள், யுத்தவிதிகள் என சர்வதேச விதிமுறைகளின்படி நடந்து கொள்ள வேணடும் என்பதே ஈழத் தமிழர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

இக்கருத்து நிலையை ஒட்டியதாகவே தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களது மாவீரர்தின உரை அமைந்ததில் வியப்பெதுவுமில்லை. ஆண்டுக்கொருமுறை அவர் வழங்கும் இந்த கொள்கை விளக்க உரையானது இம்முறை சர்வதேச சமூகத்தை, குறிப்பாக மேற்கத்தைய வல்லாதிக்க நாடுகளை நோக்கியதாக இருந்தது. அவர் அதிரடியான அறிவிப்பு எதனையும் செய்யவில்லை. மாறாக அரசியல் முதிர்ச்சியுடன் இராசதந்திர நடைமுறைகளை பின்பற்றுவதாகக் காணப்பட்ட அவரது உரையானது, உருவாகும் தேசத்திற்கு அங்கீகாரத்தை வேண்டி நிற்பதாக இருந்தது.

ஒருதலைப் பட்சமான தனிநாட்டு பிரகடனத்தை அவர் வெளியிடுவார் அல்லது சிறிலங்கா அரசுடன் செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்பாட்டிலிருந்து விலகும் அறிவிப்பை வெளிவிடுவார் என எதிர்பார்த்தவர்களுக்கு வேண்டுமானால் தலைவரது உரை ஏமாற்றத்தை கொடுத்திருக்கலாம். ஆனால் அவரது உரையில் ஆழப்பொதிந்திருக்கும் கருத்துக்களை உலகத் தமிழினம் உள்வாங்கிக் கொள்ளுமானால், விரைந்து செயற்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

சிறிலங்கா அரசு மீதோ, சிங்களத் தலைவர்கள் மீதோ தலைவர் கவனம் செலுத்தவில்லை. அதற்கான அவசியமும் இப்போது இல்லை. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தில் உள்ள நியாயத்தன்மையை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ள வேண்டும் என்பதே அவரது கோரிக்கையாக இருக்கிறது. சிறிலங்கா அரசை புறந்தள்ளிவிட்டு சர்வதேச சமூகத்தின் முன்வந்துள்ளமையானது தமிழீழ போராட்டம் இறுதிக்கட்ட நிலைக்கு சென்றுவிட்டது என்பதை உணர்த்துவதாகவே உள்ளது. இங்கு அரசியல் நேர்மையுடன் சர்வதேச சமூகம் செயற்படும் எனின் இலங்கை தீவில். இரண்டு தேசங்களாக நிரந்தர அமைதி தோன்றுவதற்கான வாய்ப்பு ஏற்படலாம்.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*கனடாவிலும் ஐரோப்பாவிலும் நடைபெற்ற எழுச்சி நிகழ்வுகளில் உங்களை சந்திக்கக் கிடைத்ததில் மகிழ்ச்சியாயிருக்கிறம். இத்தனை சனத்திரளிலும் எங்களைத் தேடி வந்து **ஒரு பேப்பர்** பற்றி விசாரித்தற்கும் உங்கள் கருத்துக்களை வெளிப்படையாகவே குறிப்பிட்டமைக்கும் எங்களது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.*

*இன்னொரு விடயத்துக்கும் நாங்கள் நன்றி சொல்ல வேண்டும். அதைச் சொன்னால் நாங்கள் விலாசம் காட்டுறம் என்று நினைக்க வேண்டாம். சுத்தி வளைக்காமல் சொன்னால் கதை இதுதான், பிரித்தானியாவில் இயங்கும் அனைத்துலக அரசு-சாரா நிறுவனமொன்று இலங்கையர்களது ஊடகங்கள் பற்றி (தமிழ், ஆங்கிலம், சிங்களம்) புலம்பெயர்ந்த இலங்கையர்களிடையே நடாத்திய கருத்துக்கணிப்பில் வாசகர்களது அபிமானத்தில் **ஒரு பேப்பர்** முன்னணி வகிப்பதாக அந்த நிறுவனம் ஒரு அறிக்கை மூலம் தெரிவித்துள்து. அவர்களது கருத்துக் கணிப்பின்படி 93 சதவீதமானவர்கள் **ஒரு பேப்பர்** ரை படிப்பதாக தெரிவித்திருக்கிறார்கள். மற்றய ஊடகங்களினது பெறுபேறுகளைக் கூறி அவர்களுக்கு எரிச்சல் மூட்டாமல், உங்களுக்கு நன்றி சொல்லி நிறுத்திக் கொள்கிறோம்.*

*இன்னொன்றையும் சொல்லோணும் இந்த நிறுவனத்தில் எங்களுக்கு தெரிஞ்சாக்கள் ஒருத்தரும் வேலை செய்யிறதில்லை.*

***ஒரு பேப்பர்** ரில் விளம்பரங்கள் பிரசுரிப்பது தொடர்பில் சில விளக்கங்களை தர வேண்டியிருக்கிறது. பத்திரிகை பிரசுரிப்பது, விநியோகிப்பது, பணியகத்திற்கான செலவீனம் என ஏகப்பட்ட விடயங்களுக்கு பணம் தேவைப்படுகிறது. ஒரு ஓசிப் பத்திரிகை இவற்றுக்கு முகம் கொடுக்கிறது விளம்பரங்கள் மூலம் பெற்றுக் கொள்ளும் வருமானத்திலிருந்து மட்டும் தான். எனவே இலவசமாக விளம்பரங்களை பிரசுரிப்பது என்பது இயலாத காரியம் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். என்ன செய்யிறது **ஒரு பேப்பர்** ரிலை விளம்பரம் போடுற எல்லாருமே எங்கடை கூட்டாளியாளாய்த்தான் இருக்கினம். அவயளின்ரை முகத்தை முறிக்கிறது கஸ்டமாய்த்தான் இருக்கு.*

*யாழ்ப்பாணம் ஹட்டன் நசனல் வங்கியில் ரூபாயிலை அடிச்ச கொள்ளைப் பணம் இவ்வளவுக்கும் கரைஞ்சிருக்கும் என்பதும், எங்களுக்கு காசு கருணை காட்டிறவர் எண்டு சொல்லப்படுகிற ஆளும் உள்ளுக்கை கம்பி எண்ணிறதாலை, விளம்பரப் பணத்திலைதான் நாங்கள் பேப்பர் அடிக்கிறம் எண்டது உங்களுக்கு இப்ப விளங்கியிருக்கும். இன்னும் இதுகள் விளங்காமல் இருக்கிற ஆக்களை விட்டுடிடுவம்.*

*மீண்டும் சந்திப்போம்.*

***ஒரு பேப்பர்** காரன்கள்+காரிகள்*

EDITORIAL

# Rule of Law

This week the *National Post* (a Canadian newspaper) has reported about the story of a Mr Kasturiarachchi, a former Sri Lankan Police chief. Apparently this retired chief after serving his motherland for decades quit Mother Lanka in 2002 and "came to Canada to escape the past".

According to the *National Post* this Sinhalese gentleman is soon to be deported from Canada because he was complicit in war crimes in Sri Lanka.

Press statement by the Canada Border Services Agency (CBSA) talks about "a fair and consistent application of the law," and "cases where there is evidence of crimes against humanity must be pursued, no matter the perpetrator." Thus as a former Sri Lankan police chief, the CBSA says, Mr. Kasturiarachchi is to blame for "systematic" and "widespread" abuses committed by the force "on a regular ongoing basis" thus the removal of this Sinhalese war criminal from Canadian soil.

We, the Tamil Expatriates welcome the action of the CBSA.

We agree that by virtue of his membership and activity with the institutionally racist Sri Lankan Police Force, he shared in its common purpose or objectives thus he was therefore complicit in the commission of crimes against humanity.

We absolutely agree with the statement of the CBSA and as a community, we will do every thing possible to help the CBSA.

In the meantime we hope that other countries such as the USA and the European Union will apply a fair and consistent application of their laws when it comes to the Sri Lankan officials retired or not. And in cases where there is evidence of crimes against humanity, that these will be pursued, no matter the perpetrator.

## Double Standards

Last week the Sri Lankan Air Force (SLAF) bombed a Tamil radio station. This air strike on the Voice of Tigers, located near Kilinochchi in the Tamil North killed nine civilians, including three of the station's employees. Around ten civilians were wounded. Later the SLAF said that the air force had destroyed the "clandestine Tiger terrorists' radio station."

The pro-Sinhalese Colombo media was very proud of this SLAF attack and made appreciative comments in its coverage.

The Switzerland based International Humanitarian Fact-Finding Commission (created under Protocol I of the Geneva Conventions) states that "deliberate attacks against journalists and infrastructure belonging to or used by the press constitute a serious violation of international law. Journalists have the right to perform their role in territories where fighting is taking place."

Thus according to International Law this attack on the Tamil radio station was a war crime.

Apart from the Reporters Without Borders (RSF) and UNESCO, the United Nations agency mandated to defend freedom of expression and press freedom, no international institution or country has condemned this vicious war crime.

On the same day, seven Tamil school girls were killed in an attack by the Sri Lanka Army (SLA) Deep Penetration Unit (DPU). They were on their way to a rural first aid training course. These Tamil children were killed on the spot.

Everyone including the Colombo media ignored these horrible murders. All international institutions including the United Nations Children's Fund (UNICEF) who are supposed to work for children's rights, their survival, development and protection, ignored this atrocity.

The next day a bomb went off in a down town Colombo fashion store. At least seventeen people were killed and another thirty three were seriously injured in this savage incident. The majority of the victims were Sinhalese civilians. The GOSL has blamed the Tamils for this savagery.

Immediately condemnations were put out by many.

We, the Tamil Expatriates were horrified by this attack, but at the same time perceive the behaviour of the international community as cruel indifference towards the attack and suffering of Tamil civilians.

We accuse the international community of double standards.

We have been warning the international community for years of the possible dangers and the consequences of the appeasement of the murderous Sri Lankan regime.

These incidents place Sri Lanka at yet another crossroads on the seemingly short road from savagery to civilisation. It seems that the international community continues to take multiple short cuts and wrong turns on its journey in Sri Lanka policy making.

Several of the earth's most powerful nations continue to appease GOSL, while decades of hatred are boiling and overflowing into acts of horror.

At this juncture the case of Mr. Kasturiarachchi in Canada and the actions of CBSA give some hope to us. We sincerely believe that other nations' institutions will take note and do the same.

We are poised, we hope, on the brink of some new world order in which torture, rape and murder would be so condemned, so punished that even powerful nations would not risk the recriminations, and petty nations like Sri Lanka could not entertain the idea for a moment.

## International Reality

At the same time the realists among us warn of continual cruelty and indifference by the international community towards Tamils. Instead of pursuing a fair vision, the powerful interests and big nations will continue to look the other way when it comes to the Tamils, they say.

There is no political will or long-range wisdom to take risks and grasp the moment in Sri Lanka, we feel. In this way, permission continues to be granted by the international community, not only to the officials like Mr. Kasturiarachchi, but also to the opportunistic Sri Lankan politicians to oppress and kill.

But still there is hope. Public opinion, even on a world scale, changes all the time -- from communism to land mines, we see mental landscapes transformed before our eyes. Thus, there is a chance, at this critical juncture, to make the law of the jungle so unpopular that the world will be changed for good.

# அப்பாவிகள் என நிரூபிக்கப்படும் வரை தமிழர்கள் இங்கு பயங்கரவாதிகளே !

'பிரஜை ஒவ்வொருவரும் அவர் சட்டத்தின் கீழ் குற்றவாளி என்பது ஐயத்துக்கு அப்பால் நிரூபிக்கப்படும் வரை அப்பாவியாகவே கருதப்பட வேண்டும்' என்பதுதான் பொதுவான சட்டவிதி? ஏற்றுக் கொள்ளப்பட்ட முறைமை இயற்கை நீதி.

ஆனால் தலைநகர் கொழும்பிலும் புற நகரங்களிலும் தமிழர்கள் என்பதற்காகவே ஆயிரக்கணக்கில் ஆட்கள் கைது செய்யப்படுவதையும், அரசு 'பயங்கரவாதிகள்' எனக் குறிப்பிடும் விடுதலைப் புலிகளுக்கும் இவ்வாறு கைது செய்யப்படுவோருக்கும் இடையில் தொடர்புகள் ஏதும் இல்லை என்பது நிரூபிக்கப்படும்வரை இவ்வாறு கைது செய்யப்படுவோர் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுவதையும் நோக்கும் போது தமிழர் விவகாரத்தில் மட்டும் மேற்படி இயற்கை நீதி மாறிவிட்டதோ என்ற சந்தேகம் எழுகின்றது.

இந்தக் கைதுகளை நோக்கினால் 'தமிழர்கள், அவர்கள்' அப்பாவிகள் என்பது நிரூபிக்கப்படும் வரை பயங்கரவாதிகளாகக் கருதப்பட வேண்டியவர்கள்' என்ற புதிய நீதிச் சித்தாந்தத்தில், 'அற நெறித் தத்துவத்தில்' தென்னிலங்கைச் சிங்கள அரசு செயற்படுகின்றது என்பது தெளிவாகத் தெரிகின்றது.

தமிழர்கள் என்பதற்காக ஆட்கள் கைது செய்யப்படுவதும்

இவ்வாறு கைது செய்யப்பட்டோர் தடுத்து வைக்கப்பட்டு, விசாரிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர் என அரசுத் தரப்பில் அறிவிக்கப்படுவதும்

இந்தப் 'புதிய சட்டமுறைமை' நடை முறைக்கு வந்துவிட்டது என்பதையே உறுதிப்படுத்து கின்றன.

தென்னிலங்கை அரசுத் தலைமையின் புதிய கண்டுபிடிப்புச் சித்தாந்தத்தின் கீழ் செயற்படுத்தப்படும் இத்திட்டத்தின்படி காரணம் ஏதுமின்றி அள்ளப்படும் தமிழர்கள், தடுப்பு முகாம்களில் அனுபவிக்கும் சித்திரவதைகள், தொல்லைகள், தொந்தரவுகள், கஷ்டங்கள் சொல்லுந்தரமன்று.

கண்மூடித் தனமாகத் தமிழ் மக்கள் கைது செய்யப்படுவதைக் கண்டித்துள்ள சுதந்திர ஊடக இயக்கம் இத்தகைய கைதுகள், தடுத்து வைப்புகள், தொந்தரவுகள் போன்ற மனித உரிமை மீறல்களைத் தடுப்பதற்கு பிரேரிக்கப்பட்டிருக்கும் சர்வதேச ஆலோசனை ஒன்றையும் இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்டியிருக்கின்றது.

தென்னிலங்கை அரசுத் தலைமையின் புதிய கண்டுபிடிப்புச் சித்தாந்தத்தின் கீழ் செயற்படுத்தப்படும் இத்திட்டத்தின்படி காரணம் ஏதுமின்றி அள்ளப்படும் தமிழர்கள், தடுப்பு முகாம்களில் அனுபவிக்கும் சித்திரவதைகள், தொல்லைகள், தொந்தரவுகள், கஷ்டங்கள் சொல்லுந்தரமன்று.

கடந்த ஒக்டோபரில், சித்திரவதைகள் தொடர்பான ஐ.நா. செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதி மன்பிரட் நெவாக் இலங்கைக்கு வந்திருந்தார். இலங்கையில் விவகாரங்களை அவதானித்த பின்னர், இவ்வாறு தடுப்பு முகாம்களில் பொதுமக்கள் படும் கஷ்டங்களை நீக்கி, அவர்களின் மனித உரிமைகள் பேணப் படுவதை உறுதிப்படுத்த அவர் ஓர் ஆலோசனை தெரிவித்தார்.

'நாட்டில் உள்ள எந்தத் தடுப்பு முகாமுக்கும், எந்நேரத்திலும், முன்னறிவித்தலின்றி, தவறாது சென்று, அங்குள்ள தடுப்புக்காவல் கைதிகளைச் சந்தித்துப் பேசி, சுதந்திரமான மருத்துவ பரிசோதனைகளுக்கு அவர்களை உட்படுத்தி, உண்மை நிலைவரத்தைக் கண்டறிந்து வெளியிடுவதற்கு சட்ட அதிகாரத்துடன் கூடிய சுயாதீனமான செயல்வலுவுள்ள ஒரு தடுப்புப் பொறிமுறை (அமைப்பு) அவசியம். அத்தகைய ஏற்பாடு இல்லாத நிலைமையே குடிமக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. என்று ஐ.நா. பிரதிநிதி வெளியிட்ட கருத்தையே இப்போது சுதந்திர ஊடக இயக்கம் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

அதேசமயம், இந்நாட்டில் நிலவும் மனித உரிமைகள் நிலைப்பாட்டைக் கண்காணிக்கும் ஆணையோடும், எல்லா இடங்களிலும் மேற்கொள்ளப்படும் தடுப்பு நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வதற்கான அதிகாரத்தோடும் கூடிய ஐ.நா. தூதரக அலுவலகமொன்று கள நிலைமையைக் கண்காணிப்பதற்காக அமைக்கப்படவேண்டும் என்றும் அந்த அமைப்பு கோரியிருக்கின்றது.

சிறுபான்மையின மக்களின் கௌரவம், உரிமைகள் ஆகியவற்றை துச்சமாக மதித்துச் செயற்படும் ஓர் அரசின் ஒருதலைப்பட்சமான நடவடிக்கைகளுக்கு எதிராகக் காத்திரமான நடவடிக்கைகளை இத்தகைய அமைப்புகளை செயற்பட அனுமதிப்பதன் மூலமே உறுதிப்படுத்த முடியும் என்றும் சுதந்திர ஊடக இயக்கம் நம்பிக்கை தெரிவித்திருக்கின்றது.

தொடர்ந்து சிறுபான்மையினரான தமிழர்களை அடக்கி, ஒடுக்கி, அராஜகம் புரிந்து, ஆக்கிரமித்து வரும் கொழும்பு அரசு தனது அத்துமீறல்களை சர்வதேச மட்டத்தில் அம்பலப்படுத்தக்கூடிய இத்தகைய ஏற்பாடுகளுக்குத் தானாக இணங்க மாட்டாது என்பது திண்ணம். நாட்டின் இறைமை என்ற புளித்துப் போன காரணத்தைக் காட்டி இத்தகைய கோரிக்கைகளை அது நிராகரித்து வருகிறது. இனியும் நிராகரிக்கும் என்பதும் நிச்சயம்.

மனித உரிமைகளைப் பற்றி அதிகம் அடிக்கடி பீற்றிக் கொள்ளும் சர்வதேசம், அதிலும் குறிப்பாக மேற்குலகம், இந்தக் கோரிக்கைக்கும், அதை நிராகரிக்கும் இலங்கை அரசின் போக்குக்கும் என்ன பதில் கூறப் போகின்றது?

கண்ணாகி

மண்ணாகி காதல்

நிறைந்த

பெண்ணாகி

நின்றதன்றோ

விடுதலை.

Editorial lankadissent.com

# Lessons from Nugegoda

The destruction caused by the Nugegoda parcel bomb, we believe, is an eye-opening chapter in the annals of our national crisis, where 19 innocent lives were lost. Can we console ourselves just by labelling it as another dastardly act of terrorism? No doubt, those gentlemen who faithfully believe in a military solution would definitely rationalize it that way.

This opportunity was not grasped by the rulers in the South as an opening for a negotiated political settlement.

And others from the north, including Mr.Prabhakaran, may have expressed the same sentiment when two days prior to the Nugegoda bomb blast, 13 persons including 11 school girls on their way to participate at Heroes' Day commemorations were killed in a claymore attack in their own territory, alleged to have been carried out by Deep Penetration Unit of the security forces or their affiliated paramilitary groups.

Almost for the last five years LTTE did not target any civilians in the south. **Even after President Rajapakse launched a full-scale war against the LTTE and 'liberated' the east from their control, LTTE took extra precautions avoiding any civilian targets** in the south until this week. All their attacks were accurately aimed at security forces as happened at Katunayaka and Anuradhapura air force bases.

By abstaining from striking at civilians in the south, LTTE aspired to influence the international opinion in their favor

This was a progressive characteristic of a guerilla movement that was not alien to some serious traits of terrorism in the past. But this opportunity was not grasped by the rulers in the South as an opening for a negotiated political settlement. Moreover, warmongers jovially interpreted the LTTE's unwillingness or hesitance to strike at civilian targets as impotency.

When there is a cease-fire agreement both sides are prone to breach, while denying the act as a fact or as a violation within the interpretation of the agreement. But with the government air force jets bombing the North and Tiger aircraft bombing the security installations in the South, no party could seriously disclaim the violation. On the contrary, both sides gloated over attacks successfully carried out. That was how the present full-scale war was escalated while nominally holding to a defunct cease-fire by both sides.

By abstaining from striking at civilians in the south, LTTE aspired to influence the international opinion in their favor. That **the international community would take the government to task regarding its belligerence was paramount in LTTE thinking.** But the killing of Thamil Chelvam went almost unnoticed. Even Norway was inordinately late in expressing their condolence. In short, international community used no lever of any effective degree to contain the wrathful aggressiveness of the government.

In short, international community used no lever of any effective degree to contain the wrathful aggressiveness of the government.

That was how Prabhakaran's Heroes' Day commemoration speech became so replete with frustration over inaction of the international community. Most probably, he may have thought that there was no meaning in respecting the rules of the game, named warfare.

A war that is restricted to a real battlefield is rather precise in its military victory or defeat. But a war that cannot be contained within a geographical limits of battlefield is deemed, sooner or later, to engulf the whole country, where nothing short of political sanity would be able to arrest the precipitous fall. For further reference, please look at Iraq.

A war that is restricted to a real battlefield is rather precise in its military victory or defeat

Those who sowed bellicosity for the last two years will now have to reap the heavy burden of not only winning the war as they claim is possible but also protecting the lives of the civilians, not in the North of course, but in the South at least.

Finally, one can hardly fail to notice the name of the shopping complex where the havoc was caused. It is "NO LIMIT".

**Would our future carry a symbolic meaning in that ominous name?**

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:
லண்டன்
சேயோன் - அ.இரவி
மணி - அகிலன்
கனடா
தயா - பொன்.விவேகானந்தன்
பாரிஸ்
சிறி - வண்ணை
ஜேர்மனி
சபேசன் - சுதந்திரா
சுவிஸ்
ரேமன் - சந்துரு
பொறுப்பாசிரியர்
- கோபி -
விளம்பரம்
கௌரி - நிதி - சிந்து
அச்சு
குமார் (ஜெர்மனி)
வடிவமைப்பு
jasmine studio
முகப்பு வடிவமைப்பு
seven zero graphics
விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - கிரி
இணையத்தள வடிவமைப்பு
ரஜீவன்
தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்
நிதி – நிர்வாகம்
உஷா - முருகானந்தன்
வழங்கல்
உதயகுமார்-ராஜு-கரன்



உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)

| | |
|---|---|
| லண்டன் | 020 8640 4604 |
| | 020 8286 9327 |
| பாரீஸ் | 01 7289 8165 |
| சுவிஸ் | 043 500 0277 |

தொலைநகல் (Fax)
020 8640 6972

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
Oru Paper
45'B' Crusoe Road
Mitcham CR4 3LJ
Surrey

மின்னஞ்சல்:
info@orupaper.com

இணையம்:
www.orupaper.com


*'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month. The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*

# ஏழரைச் சனியன்களும் அட்டமத்துச் சனியன்களும்

## சற்று மாறுதலுக்காக

எழுதுவது: **சேயோன்**

கடும் கோபத்துடன் கண்ணை மறைக்கும் ஆத்திரத்துடன் இதனை எழுதுகிறேன். வாயில் தூசணம் வராத குறையாக வார்த்தைகள் வந்து விழுகின்றன. அவ்வளவு கடுஞ்சினம்.

என்னை இயலுமானளவு கட்டுப்படுத்துகிறேன். அதனையும் மீறி வார்த்தைகள் வந்து விழுந்தால் நண்பர்களே என்னை மன்னியுங்கள் என்று நான் கேட்க மாட்டேன். என்னைப் புரிந்து கொள்ளுங்கள் என்று கேட்கின்றேன்.

***ஒரு பேப்பர்*** ஆசிரிய பீடத்தாலும் இரண்டு மூன்று முறை சிறு சினத்துக்கு அல்லது கண்டிப்புக்கும் உள்ளானேன். அதாவது, ஆசிரிய பீடத்திலிருந்து கொண்டு பொறுப்பற்று எழுதினால் அது ***ஒரு பேப்பர்*** ஐ பாதிப்பதாக அவர்கள் ஆட்சேபம்.

அதில் நியாயம் இருக்கலாம். அதுதான் பொறுப்பாசிரியரிடம் சொன்னேன் ***ஒரு பேப்பர்*** இன் ஆசிரிய பீடத்திலிருந்து என்னை நீக்கிவிடுங்கள். அப்பொழுதுதான் என்னால் சுதந்திரமாக எழுத முடியும் என்று.

நான் நம்புகின்றேன் இவ்விதழிலிருந்து நீக்கியிருப்பார்கள் என்று. அப்படி நீக்கப்பட்டாலும் என் பணி தொடரும். இப்பத்தியும் தொடரும். சரி, விசயத்திற்கு வருகிறேன்.

மாவீரர் தினத்தன்று, சிங்களப் படையின் ஊடுருவும் அணி வன்னிக்குள் புகுந்து கிளைமோர் தாக்குதல் நடாத்தி பத்துக்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களைக் கொன்றிருக்கிறது.

சிங்களம் வழமையாக இப்படிச் செய்வதுதான். இந்த மிருகங்கள் எப்பவும் இப்படி இளம் பிஞ்சுகளின் இரத்தைத்தான் ருசி பார்க்கும். அதைவிடுவோம்.

ஆனால் ஆனந்தசங்கரி என்ற எலும்பு பொறுக்கி நாய் ஒன்று எப்படி ஊளையிடுது தெரியுமா?

அப்படி ஒரு தாக்குதலும் நடைபெறவில்லை. இது புலிகளின் கட்டுக்கதை என்று இந்த மாதிரிப் போகுது சங்கரியின் ஊளை ஓலம்.

இன்னொரு நாய் இருக்கிறது டக்ளஸ் என்ற கொழுத்த எலும்புபொறுக்கிநாய். அது சொல்லுது சிறீலங்கா விமானப்படையினர் பொது மக்களைத் தாக்கவில்லை. புலிகளின் இலக்குகளையே தாக்குகிறார்கள். தமிழ்ச்செல்வனின் படுகொலை அதனையே காட்டுகிறது.

உண்மையில் 'இதுகளை' நாய் என்று கூட அழைக்கக் கூடாது. நாய் என்றால் எனக்கு நல்ல விருப்பம். இந்தக் கழுதைகளை வேறு எப்படி அழைக்கலாம்? கழுதை கூடப் பாவம். அது என்ன பாவம் செய்தது? இதுகளை கழுதைகள் என்று அழைப்பதற்கு.

முன்னர் அமிர்தலிங்கம் என்றொரு தமிழ்த் தலைவர் இருந்தார். 1977இல் தமிழீழ ஆணை கேட்டு தேர்தலில் வென்று சிறீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் ஆனவர்.

1978, 1979ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் சிங்கள இராணுவத்தின் அட்டூழியம் அதிகமாக இருந்தது. தமிழ் மக்கள் தாம் தேர்ந்தெடுத்த தலைவர் அமிர்தலிங்கத்திடம் போய் புகார் செய்தனர். அதற்கு தளபதி அமிர்தலிங்கம் என்ன சொன்னார் தெரியுமா?

நுளம்புகளுடன் வாழப் பழகிக் கொண்டது போல் சிங்களப் படையினருடனும் வாழப் பழகிக் கொள்ளுங்கள்??

ஏனைய தமிழ் மக்களைப் போலவே கவிஞர் சு. வில்வரத்தினத்திற்கும் இது கடுங்கோபம் தந்தது. அவரின் ஒரு கவிதையின் சில வரிகள் இப்படி இருந்தன.

நுளம்புக் கடியின் வலியா நுமக்கெலாம்
கொன்று போடும் கொடுமைகள் இங்கெலாம்
கொசுக்கடி போல்வதொன்றா
தலைவரும் அவர்தம் சிறுமதியும்

அமிர் கூடப் பரவாயில்லை இந்தச் சங்கரிச் சனியனின் கதையை கேட்கிறபோது. இந்தச் சனியன்களுக்கு உடம்பில் ஒன்றுமில்லையா? என்ன சொல்லிப் பெத்தார் இந்தச் சனியன்களின் தாயார் (நான் தாயாரை ஒன்றும் ஏசவில்லை. இதுகளுக்கு வந்த கோவேறு கழுதைக் குணத்துக்கு அந்த அம்மா என்ன செய்வார்? பாவம்)

> **ஒரு பேப்பர் இன் ஆசிரிய பீடத்திலிருந்து என்னை நீக்கிவிடுங்கள். அப்பொழுதுதான் என்னால் சுதந்திரமாக எழுத முடியும் என்று சொன்னேன்.**

இதுகள் ஏன் அப்படி இருக்குதுகள்? அடுத்த என் கேள்வி ..................................................
............*(தணிக்கை செய்யப்பட்டுள்ளது)*...........
........................... ........................................
....................................................

வெப்பிராயமும், வேதனையும், கோபமும், ஆத்திரமுமாக குமுறுது மனசு. கோரமாகக் கொல்லப்பட்ட அந்தப் பிஞ்சுப் பாலகர்களின் உடலங்களை படங்களில் பார்த்தேன். வயிறு பற்றி எரிகிறது.

எனக்கே இப்படி என்றால், அந்தப் பாலகர்களின் பெற்றோர்கள் எவ்வளவு துடித்திருப்பார்கள். ஒரு கணம் உணர்ந்து பாருங்கள். ஒரு தாயின் நெஞ்சு இந்தக் கொடுமைகளைத் தாங்குமா?

யாழ்தேவியில் சல்லாபித்துக் கொண்டு போகிற சனியனால் இதை உணர முடியாதுதான். அதற்காக இதுகளை நாம் சும்மா விட்டு வைக்கவும் முடியாது.

சிங்களத்தின் கால்களை நக்கட்டும். வேறெதையாவதையும் நக்கட்டும். அது எங்களது பிரச்சினையல்ல. ..................................................
..............*( தணிக்கை செய்யப்பட்டுள்ளது)* .......
..................................................

# தெய்வத்துள் வைக்கப்படும்

## வள்ளுவர் காட்டும் வழி

எழுதுவது: **இராம. கே. நாதன்**

வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு, வளம் பெறுவதற்கு தொழில் முறையில் எப்படி நடந்து கொள்ளல் வேண்டும் என்பதை வள்ளுவர் காட்டும் வழி என்ற இத் தொடர் கட்டுரைகள் மூலம் கண்டோம்.

இந்த வழிமுறைகள் 2500 ஆண்டுகளின் முன்பே வேறொரு காலகட்டத்தில் வேறொரு சமுதாய அமைப்பின் பின்னணியில் கூறப் பட்டிருந்தாலும் இவை இன்றைய சூழ்நிலையிலும் ஏற்புடையனவாகவே உள்ளன.

வாழ்க்கையின் வெற்றியென்பது வெளிவாழ்வில் மாத்திரமன்றி இல் வாழ்க்கையிலும் தங்கியுள்ளது. ஒருவன் பெரிய கோடீஸ்வரனாக இருப்பினும் அவனது இல் வாழ்க்கை சரிவர அமையாது போகின் அவனது மனதில் நிம்மதி இராது. இல் வாழ்விலும் அவன் சிறந்தவனாக இருந்தால் மாத்திரமே அவனது வெளிவாழ்விலும் அவனால் சிறப்பாகச் செயலாற்ற முடியும்.

எத்தகைய இல் வாழ்க்கை ஒருவனை சிறந்தவனாக வாழவைக்கும் என்பதை திருக்குறளின் இல் வாழ்க்கை என்னும் அத்தியாயத்தில் காணலாம்.

இந்த அத்தியாயத்தில் வரும் முதலாவது குறளை பலவிதமாக உரைப்படுத்தியுள்ளனர். இக்குறளிலே 'இயல்புடைய மூவர்' என்னும் பதம் வருகின்றது.

இதை சிலர் பிரம்மச்சாரிகள், குடும்பஸ்தர், சன்னியாசிகள், என உரைப்படுத்தியுள்ளனர். வேறுசிலர் இதை உற்பத்தி செய்வோர், விநியோகிஸ்தர்கள், நாட்டைக் காக்கும் போர்வீரர் எனவும் வேறுசிலர், பெற்றோர், மனைவி, பிள்ளைகள் எனவும் கருத்துக் கூறியுள்ளனர்.

எவ்வாறாயினும் அறவழியில் நின்று இல் வாழ்க்கை நடாத்துபவர்கள் பிறரை அரவணைத்து நடந்து கொள்ளல் வேண்டும் என்ற கருத்தையே கூறிநிற்கின்றது (குறள் 41).

மேற்கூறுபவர்களை மாத்திரமல்லாது, சமூகத்தில் நலிந்து போனவர்கள். இல் வாழ்க்கையைத் துறந்தோர், வறியவர்கள், அனாதைகள் ஆகியவர்களுக்கும் இல் வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளோர் உறுதுணையாக இருத்தல் வேண்டும். (குறள் 42).

ஒரு நல்ல இல்வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளவனுக்கு ஐந்து தலையாய கடைமைகள் உள்ளன. அவையாவன தனது முன்னோர்களின் பெருமையை நிலைநாட்டுதலும் அதைப் பழுதுபடாமலும் காத்தலும், கடவுள் வணக்கம், விருந்தினரை இன் முகத்துடன் வரவேற்றல், உறவினரைப் பாதுகாத்தல் அத்துடன் தானும் அறவழியில் நடத்தல் ஆகியவையாம். (குறள் 43)

இப்படியாக பிறரைப் பாதுகாத்து அவர்களுக்கு உறுதுணையாக இருக்கும் ஒருவன் இந்த நற்செயல்களையெல்லாம், தீயவழியில் சேர்த்த செல்வத்தைக் கொண்டு செய்வானேயாகில் அதனால் பயனொன்றும் இல்லாது போய்விடும். எனவே அறம் செய்வது முக்கியமாக இருந்தாலும் அப்படி அறம் செய்யப் பொருட்கள் அற வழிகளில் தேடியதாகவும் இருத்தல் வேண்டும். (குறள் 44)

ஒருவன் தன் வாழ்வில் அன்பான உள்ளம் கொண்டவனாகவும், அறம்தழுவிய செயல்களைச் செய்பவனாகவும் வாழுமிடத்து அவன் பிறர் மதிக்கும் பண்புடையவனாக மட்டுமன்றி, அவனுடைய வாழ்க்கை பிறருக்கு பயன் உடையதாகவும், இருக்கும். (குறள் 45)

ஒருவன் உண்மையிலேயே மனநிம்மதியைத் தேடிக் கொள்வதற்கு, அவன் இல்வாழ்க்கையில் இருந்து கொண்டு அறநெறியில் ஒழுகுவானேயாகில் அதுவே போதுமானது. அதைவிடுத்து உலகத்தைத் துறந்து சந்நியாசியாகவோ, ஆச்சிரமங்களையோ அன்றி பிற குருமாரையோ தேடி ஓட வேண்டிய அவசியம் இல்லை. (குறள் 46).

எனவே சந்நியாசிகளாகவோ. அன்றி பிற வழிகளில் மனநிம்மதியையும் சந்தோஷத்தையும் தேடி அலைபவர்களாக இருப்பவர்களிலும் பார்க்க, பிறர் பழிகூறமுடியாத இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டு ஒழுக்க நெறியுடன் வாழ்பவனே சிறந்தவனாகிறான். (குறள் 47)

துறவறம் புகுந்து தவம் செய்யும் ஞானிகளிலும் பார்க்க எவன் தனது இல்வாழ்க்கையை மக்கள் ஏற்றுக் கொள்ளும் வகையாக நடாத்தி அத்துடன் தன்னைச் சார்ந்தவர்களும் நேர்மையான வழியில் நடக்கும் வண்ணம் செய்கின்றானோ அவனது வாழ்க்கையே போற்றுதற்குறியதாகிறது.

மனித வாழ்வின் மற்றைய நிலைகளிலும் பார்க்க, அறவழியில் நின்று இல்வாழ்க்கையில் ஈடுபடும் நிலையே சிறந்தது என்பது வள்ளுவர் கருத்தாகும். (குறள் 48)

இப்படியாக, பிரமச்சாரியம், சந்நியாசம், வனப்பிரஸ்தம். (இல் வாழ்க்கையைத் துறவாத வனவாசி) ஆகிய நிலைகளிலும் பார்க்க, இல் வாழ்க்கை என்னும் நிலை சிறந்ததாக இருப்பினும், அவ் இல் வாழ்க்கை என்பது பிறர் குறை கூறாத விதத்தில் அமைந்திருக்க வேண்டும். ஒருவன் எவ்வளவு தூரம் வெளியில் தருமம் செய்தாலும், அறநெறி தவறி, ஊரார் பழிக்கும் வகையில் இல் வாழ்க்கை நடாத்துவானேயாகில், அந்த இல் வாழ்க்கை சிறந்ததாகக் கொள்ளமுடியாது. (குறள் 49)

எவன் இப்படியான இல்லறக் கோட்பாடுகளுக்கு அமைய ஒழுகி, வாழ்வில் நெறிதவறாது வாழ்ந்து, பிறருடைய துன்பம் கண்டு அதைக் களைய உதவி, சமுதாயத்தில் நலிவுற்றவர்களின் நலம் பேணி, உற்றார் உறவினரை அரவணைத்து வாழ்கிறானோ அவன் தெய்வத்தைப் போன்று மற்றையோரால் மதிக்கப் பெறுவான். (குறள் 50)

# வெல்வதும் விடுதலையுமன்றி வேறொன்றும் இல்லை

மே மாதம் வெளிவந்த 71வது ஒரு பேப்பரில் 'கருணா இல்லாத கருணா குழு' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியிருந்தோம். கருணாவிற்கும் பிள்ளையானிற்கும் சமாதானம் ஏற்பட்டுவிட்டதாக வருகின்ற செய்திகள் பொய்யென்றும், கருணாவை ஒதுங்கச் செய்துவிட்டு, வெளியில் கருணாவே தலைவர் என்று சொல்லிக்கொண்டு 'கருணா குழுவை' பிள்ளையான் தலைமையில் இயங்கச் செய்யும் வேலைகள் நடக்கிறது என்றும் சொல்லியிருந்தோம்.

தற்பொழுது அப்படியே நடந்திருக்கிறது. 'கருணா துரதிஸ்டவசமாக நாட்டில் இல்லாத காரணத்தினால், இயக்க நிர்வாகப் பொறுப்புக்கள் அனைத்தும் பிரதித் தலைவரான பிள்ளையானிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன' என்று 'கருணா குழுவினரின்' அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது. கருணா நாடு திரும்பிய பின்னர் பொறுப்பு மீண்டும் ஒப்படைக்கப்படும் என்றும் அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

**கருணாவை சர்வதேச நீதிமன்றத்தில் விசாரிக்காது தமிழீழ நீதிமன்றத்தில் வைத்து விசாரித்து தண்டனை வழங்குவதே தமிழ் மக்களின் பொதுவான விருப்பமாக இருக்கிறது.**

ஆனால் இதில் பாதிதான் உண்மை. கருணா குழுவின் தலைமைப் பதவி பிள்ளையானிடம் போய்விட்டது. ஆனால் கருணா திரும்பி வந்தால், அந்தப் பதவி மீண்டும் கருணாவிடம் ஒப்படைக்கப்பட மாட்டாது. கருணாவை விரட்டி அடித்து, கருணாவிற்கு ஆதரவான உறுப்பினர்களை கொலை செய்தும், கைது செய்தும் பிள்ளையான் தலைமைப் பதவியை கைப்பற்றியிருக்கிறார்.

கருணா குழுவின் அலுவலகங்களில் இருந்து கருணாவின் படங்கள் கழற்றப்பட்டு விட்டன. கருணா குழுவின் இணையத்தளத்தில் கருணாவின் படம் இருந்த இடத்தில், தற்பொழுது கல்லடிப் பாலத்தின் படம் இருக்கிறது. கருணாவின் விசுவாசிகள் கொல்லப்பட்டு விட்டார்கள். சிலர் தப்பியோடி விட்டார்கள். எஞ்சியவர்கள் பிள்ளையானின் தலைமையை ஏற்றுக்கொண்டு விட்டார்கள்.

கருணா இலங்கைத் தீவை விட்டு தப்பியோடுவதற்கு முன்னதாக வேறு சில மாற்றுத் திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டன. கருணா விசுவாசிகளால் ஒரு திட்டம் முன்வைக்கப்பட்டது. 'ராசிக் குழு' போன்று பிள்ளையான் குழுவை இயங்கச் செய்யலாம் என்று அவர்கள் யோசனை சொன்னார்கள்.

ஈபிஆர்எல்எவ் இயக்கத்தில் இருந்து பிரிந்த ராசிக் தனித்து இயங்கினார். அவருடைய தலைமையில் ஒரு குழு இயங்கியது. அதே நேரம் ஈபிஆர்எல்எவ் இயக்கமும் கிழக்கில் இயங்கியது. இரண்டும் ஒன்றோடு ஒன்று மோதாது, தனித்து இயங்கின. அதே போன்று புளொட் மோகன், ரெலோ வரதன் போன்றவர்களும் தாம் முன்பு இருந்த இயக்கங்களோடு மோதாது தனித்து இயங்கினர்.

அதே போன்று ரிஎம்விபி என்ற இயக்கப் பெயரில் கருணாவும், 'பிள்ளையான் குழு' என்று பெயரில் பிள்ளையானும் தனித்தனியே கிழக்கில் இயங்குவது என்ற திட்டம் முன்வைக்கப்பட்டது. ஆனால் உண்மையில் இத் திட்டம் கருணா குழுவிற்கு பொருந்தாது. கருணா குழு 'இயக்கம்' என்ற நிலையை அடையவில்லை. அடையவும் மாட்டாது. ஒரு இயக்கத்தில் இருந்து பிரிந்து செயற்படுபவர்களை 'குழு' என்று அழைக்கலாம். ஆனால் 'குழு' ஒன்றில் இருந்து பிரிந்தவர்களை என்ன சொல்லி அழைப்பது?

இத் திட்டத்திற்கு பிள்ளையானும் உடன்படவில்லை. கருணாவை அகற்றியேயாக வேண்டும் என்று உறுதியாக நின்று, அதில் வெற்றியும் பெற்றார். இப்பொழுது 'பிள்ளையான் குழுதான்' கிழக்கில் இயங்குகிறது.

தன்னுடைய துரோகச் செயற்பாடுகள் மூலம் கிழக்கில் உள்ள இராணுவத்தினரிடம் தன்னுடைய திறமையை பிள்ளையான் ஏற்கனவே நிரூபித்திருக்கிறார். வரவு செலவுத் திட்ட விவாதம் நடைபெற்ற போது மகிந்தவிற்கும் தன்னுடைய திறமையை பிள்ளையான் காட்டிவிட்டார்.

தமிழ்தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கொலை மிரட்டல் விடுத்தும், நாடாளுமன்ற உறுப்பினர் கனகசபையின் மருமகைனைக் கடத்தி அவரை வாக்களிக்காது விடாது தடுத்தும், கருணாவை விட தன்னால் 'ஏவல் நாய்' வேலையை திறம்படச் செய்ய முடியும் என்று பிள்ளையான் நிரூபித்து விட்டார்.

## அரசியல் அலசல்

அலசுபவர்: **வி.சபேசன்**

இராணுவத்தினரதும், மகிந்தவினதும் பாராட்டைப் பெற்றுள்ள பிள்ளையானை அகற்றி கருணாவால் மீண்டும் தலைமைப் பொறுப்பை ஏற்க முடியுமா என்பது பெரும் கேள்விக் குறிதான்.

கருணா தற்பொழுது பிரித்தானியாவில் இருக்கிறார். அவர் அங்கு அரசியல் தஞ்சம் கோரியிருக்கிறார். விடுதலைப்புலிகளால் ஆபத்து என்று மட்டும் சொல்லி கருணாவால் அரசியல் தஞ்சம் கோர முடியாது. சிறிலங்கா அரசாங்கமும் கருணாவை கொல்ல சதித் திட்டம் தீட்டியதாக வெளிவந்த செய்திகள் கருணாவின் அரசியல் தஞ்ச விண்ணப்பத்திற்கு உதவக் கூடும்.

இதே வேளை கருணா இலங்கையில் மேற்கொண்ட மனித உரிமை மீறல்களுக்காக நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்ற குரல்கள் சில இடங்களில் கேட்கின்றன. சர்வதேச மன்னிப்புச் சபையும், அமெரிக்காவில் இருந்து இயங்கும் மனித உரிமை கண்காணிப்பகமும் கருணா மீது பல குற்றச்சாட்டுக்களை தெரிவித்து, அவரை தண்டிக்க வேண்டும் என்று கோரியிருக்கின்றன.

கருணாவை பிரித்தானிய நீதிமன்றத்திலோ, அல்லது சர்வதேச நீதிமன்றத்திலோ நிறுத்தி தண்டிக்க வேண்டும் என்ற கருத்து பல தமிழ் மக்கள் மத்தியிலும் இருக்கின்றது. கருணாவால் பாதிக்கப்பட்டவர்களை, அது குறித்த முறைப்பாடுகளை செய்யும்படி சில தமிழ் ஊடகங்கள் தமிழ் மக்களிடம் வேண்டுகோளும் விடுக்கின்றன.

ஆனால் இதில் உள்ள பாதகத்தை இவர்கள் உணரத் தவறிவிட்டார்கள். இந்தச் சர்வதேச நாடுகளும், அதன் அமைப்புக்களும் கருணா மீது தெரிவிக்கின்ற அதே குற்றச்சாட்டை விடுதலைப் புலிகள் மீதும் தெரிவிக்கின்றன. இன்று வரை சிறுவர்களை படையில் சேர்ப்பதாகவும், பொது மக்கள் மீது தாக்குதல் நடத்துவதாகவும் பொய்யான குற்றச்சாட்டுக்களை இந்த நாடுகளும் அமைப்புக்களும் விடுதலைப் புலிகள் மீது தெரிவித்து வருகின்றன.

அத்துடன் இன்னும் ஒரு முக்கிய விடயம் இருக்கிறது. கருணா விடுதலைப் புலிகளோடு இருந்த பொழுது செய்த குற்றங்களையும் விசாரிக்க வேண்டும் என்று சில அமைப்புகள் கோரியுள்ளன. இதன் அடிப்படையில் கருணா விசாரிக்கப்படுவது, விடுதலைப் புலிகள் மீது களங்கம் ஏற்படுத்தும் ஒரு செயற்பாடாகவே இருக்கும்.

கருணா விடுதலைப் புலிகளோடு இருந்த பொழுது மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார் என்று நீதிமன்றத்தில் சொல்லப்படக் கூடிய குற்றச்சாட்டு உண்மையில் விடுதலைப் புலிகளுக்கு பாதகமாகவே அமையும்.

கருணா மீது குறிப்பிட்ட மனித உரிமை அமைப்புக்கள் தெரிவிக்கும் குற்றச்சாட்டுக்கள் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டால், அது நாளை அந்த அமைப்புகள் விடுதலைப் புலிகள் மீது தெரிவிக்கும் குற்றச்சாட்டுக்களும் உண்மை என்ற தோற்றத்தை கொடுக்கும்.

கருணா உண்மையிலேயே பெரும் குற்றங்களை இழைத்திருக்கிறார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. கருணா தண்டிக்கப்பட வேண்டியவர் என்பதிலும் யாருக்கும் மறு கேள்வி இல்லை. ஆனால் ஈராக், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் மனித குலத்திற்கு விரோதமாக பெரும் குற்றங்களை இழைத்து வரும் இந்த மேற்குலக நாடுகளின் செல்வாக்குக்கு உட்பட்ட நீதிமன்றங்கள் இலங்கைத் தீவைச் சேர்ந்த ஒருவரை போர்க் குற்றத்திற்காக விசாரிப்பதையிட்டு நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

கருணாவை சர்வதேச நீதிமன்றத்தில் விசாரிக்காது தமிழீழ நீதிமன்றத்தில் வைத்து விசாரித்து தண்டனை வழங்குவதே தமிழ் மக்களின் பொதுவான விருப்பமாக இருக்கிறது.

சிறிலங்கா அரசு சர்வதேச நீதிமன்ற ஒப்பந்தத்தில் கையெழுத்து இடாத காரணத்தினால், சிறிலங்காவை சேர்ந்த கருணாவை சர்வதேச நீதிமன்றத்தில் விசாரிக்க முடியாது என்றும் ஒரு தகவல் கூறுகிறது. ஆனால் மேற்குலக நாடுகள் விதிகளைப் பொருட்படுத்தாது, தமது நலன்களுக்கு ஏற்பவே முடிவு எடுக்கும் என்பதால், எதையும் தற்பொழுது உறுதியாகக் கூற முடியாது.

**கருணா குழுவின் அலுவலகங்களில் இருந்து கருணாவின் படங்கள் கழற்றப்பட்டு விட்டன. கருணா குழுவின் இணையத்தளத்தில் கருணாவின் படம் இருந்த இடத்தில், தற்பொழுது கல்லடிப் பாலத்தின் படம் இருக்கிறது.**

இந்த மேற்குலக நாடுகள் எவ்வாறு அநீதியான வகையில் இலங்கைப் பிரச்சனையை அணுகுகின்றன என்பதை தேசியத் தலைவர் தனது மாவீரர் உரையில் மிகத் தெளிவாகக் கூறி உள்ளார்.

தேசியத் தலைவரின் மாவீரர் தின உரை உலகத் தமிழர்கள், சர்வதேச நாடுகள் என்று இரண்டு தரப்பினரை நோக்கியதாக இருந்தது. சிறிலங்காவிற்கு எந்தச் செய்தியும் சொல்லப்படவில்லை.

தனித் தமிழீழமே உறுதியான தீர்வு என்று முடிவு எடுத்த பிற்பாடு, சிறிலங்காவிற்கு செய்தி எதையும் சொல்ல வேண்டிய தேவையும் எழவில்லை. தமிழீழப் போராட்டத்திற்கு ஆதரவாக உலகெங்கும் வாழும் எட்டுக் கோடி தமிழர்களையும் கிளர்ந்தெழும்படி தேசியத் தலைவர் உரிமையோடு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தப் போராட்டத்தை அங்கீகரிக்கும்படி சர்வதேச நாடுகளை நோக்கி தேசியத் தலைவர் வேண்டுகோள் விடுக்கின்றார். கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இலங்கைத் தீவையொட்டி பல நாடுகளுக்கு அக்கறையும் நலன்களும் இருக்கும் என்பதை புரிந்துணர்வோடு ஏற்றுக்கொள்ளும் தேசியத் தலைவர், ஆனால் தவறான பக்கசார்பு நிலை எடுத்து பல அழிவுகளுக்கு சர்வதேசம் காரணமாகி விட்டது என்று சாடியுள்ளார். அதே வேளை சர்வதேசம் தன்னுடைய நிலைப்பாட்டை மாற்றும்படி கோரிக்கையும் விடுத்துள்ளார்.

நீண்ட கொடிய சமர்களிற் களமாடி அனுபவமும் முதிர்ச்சியும் பெற்ற முன்னணிப் படையணிகளோடும் பன்முகத் தாக்குதல்களையும் நிகழ்த்தவல்ல சிறப்புப் பயிற்சிபெற்ற சிறப்புப் படையணிகளோடும் நவீன படைக்கலச் சக்திகளுடனும் பெரும் போராயுதங்களுடனும் ஆட்பலம், ஆயுதபலம், ஆன்மபலம் எனச் சகல பலத்துடனும் நவீன இராணுவமாக விடுதலைப் புலிகள் வளர்ந்து நிற்கின்றார்கள்.

அறிவுவளம், செயல்வளம், பொருள்வளம், பணவளம் என்று அனைத்துவிதமான பங்களிப்பையும் உலகத் தமிழினம் வழங்கி தமிழீழப் போராட்டத்தோடு இணைந்து நிற்கின்றது.

இந்த நிலையில் தமிழீழத் தனியரசு உருவாவதை யாராலும் தடுக்க முடியாது. ஆகவே சர்வதேசம் தன்னுடைய நிலைப்பாட்டை மாற்றி தமிழீழப் போராட்டத்தை அங்கீகரிப்பதே அவர்களுடைய நலன்களுக்கும் சாதகமாக அமையும். தமிழீழப் போராட்டத்திற்கு எதிரான நிலைப்பாட்டில் சர்வதேசம் இயங்கும் வரை, அதனுடைய ஒவ்வொரு நடவடிக்கை குறித்து தமிழினம் எச்சரிக்கையாக இருப்பது அவசியம்.

நாடும்
மொழியும்
நமதிரு
கண்கள்

ஒரு பேப்பர் ORU PAPER

# மலேசியா: பொங்கி எழும் தமிழர்



**சத்தியன்**

*(ஒரு பேப்பருக்காக)*

அதாவது 1941 ஆம் ஆண்டு முகமத் அலி ஜின்னா பாகிஸ்தான் பிரிவினையைக் கோருவதற்கு முன்னமே தமிழ் நாட்டு விடுதலைக் குரல் ஓங்கி ஒலிக்கத் தொடங்கிவிட்டது.

தந்தை பெரியார், பாவலரேறு பெருஞ்சித்திரனார் போன்றவர்கள் இறுதி வரைக்கும் தமிழ்நாட்டு விடுதலைக் கொள்கையில் உறுதியாக இருந்தார்கள்.

இவர்கள் யாரும் ஈழத்தைப் பார்த்து தங்கள் விடுதலைக் கோரிக்கையை எழுப்பவில்லை. எனவே தனி ஈழம் மலர்ந்தால் தமிழ் நாடும் பிரிவினைக் கோரிக்கையை எழுப்பும் என்று கூறுவது பொருத்தமற்றது.

வங்கதேசம் பிரிந்தவுடன் அதனோடு ஒட்டி இருந்த மேற்கு வங்காளம் பிரிந்து சென்று விடவில்லை.

தமிழீழம், தமிழகம் போன்றே வங்க தேசத்திலும் மேற்கு வங்காளத்திலும் இருப்பவர்கள் ஒரே மொழி பேசும் ஓரின மக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் நாட்டு விடுதலைப் போராட்டம் வேறு. தமிழீழ விடுதலைப் போராட்டம் வேறு. இரண்டுமே வேறு வேறு தளங்கள். தமிழ் நாட்டுப் பிரிவினைக்கு தமிழீழம் ஒரு போதும் காரணமாக இருக்காது.

தமிழீழ எழுச்சி சிங்களப் பேரினவாதத்தின் இராணுவ அடக்கு முறையால் எழுந்தது. தமிழ் நாட்டு விடுதலை எழுச்சி இந்திய வல்லாதிக்கத்தின் சமூக, பொருளாதார, மற்றும் பண்பாட்டு அடக்கு முறையால் எழுந்தது. ஒன்றைப் பார்த்து ஒன்று எழவில்லை.

ஆனால் இரண்டும் காலத்தின் கட்டாயம் என்பதுடன் நூற்றுக்கு நூறு நியாமானவைகளே!

பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்கள் மிக அழகாக இப்பச் சொல்லுவார்

'சிங்களம் ஈழத்தமிழர்களுக்கு கொடுத்தது சாட்டையடி. அதன் வலியை அவர்கள் நேரடியாகவே உணர்ந்து கொண்டதால் அதை எதிர்த்து போராடுகிறார்கள்.

ஆனால் இந்தியம் தமிழ் நாட்டுத் தமிழர்களுக்கு கொடுத்தது மயக்க ஊசி. அதனால் அவர்கள் போராட வேண்டும் என்ற உணர்வே அற்று மயங்கிக் கிடக்கிறார்கள்.'

இந்திய அரசின் இரட்டை நிலை அரசியலுக்கு இன்னும் ஒன்றை உதாரணமாகக் கூறலம்.

காலனித்துவ ஆதிக்கத்தில் இருக்கும் நாடுகளுக்கு மட்டும் தான் விடுதலை வேண்டும் ஆனால் ஒரு நாட்டில் இருக்கும் தேசிய இனங்களுக்கு விடுதலை தரவே கூடாது என ஐ.நா. அளவில் பிதற்றும் இந்தியா, திபத் சீனாவிலிருந்து பிரிவதை விடாப்பிடியாக ஆதரித்தது.

## தமிழீழ எழுச்சி சிங்களப் பேரின வாதத்தின் இராணுவ அடக்கு முறையால் எழுந்தது. தமிழ் நாட்டு விடுதலை எழுச்சி இந்திய வல்லாதிக்கத்தின் சமூக, பொருளாதார, மற்றும் பண்பாட்டு அடக்கு முறையால் எழுந்தது.

இவ்வாறு தலைக்கொரு சீயாக்காயையும் தாடிக்கொரு சீயாக்காயையும் தடவிக்கொண்டு தன்னை ஜனநாயக நாடாக காட்ட முனைகிறது.

எங்களைப் போன்றவர்கள் இந்திய வல்லாதிக்கத்திற்கு எதிரான எனது கருத்துக்களை பதிவு செய்யும்போது தங்களை இந்தியர்கள் என்று கூறிக் கொள்பவர்களும் அதற்கு ஒத்தூதும் நம்மவர்களில் சிலரும் நாம் ஏதோ தமிழீழ விடுதலையையும் தமிழ் நாட்டு விடுதலையையும் ஒரே அலகால் அளக்க முற்படுவதாக புதுக் கரடி விடுகிறார்கள்.

நாம் எங்கே ஒரே அலகால் அளக்க நினைக்கிறோம்? இரண்டும் வேறு வேறு தளங்கள். நாளை தமிழீழம் மலர்ந்தால் அது ஒரு போதும் தமிழ் நாட்டு விடுதலைக்கு வழி சமைக்காது.

அதேநேரம் தமிழ் நாட்டு விடுதலையின் நியாயங்கள் நூற்றுக்கு நூறு சரியானவை. இந்திய அடக்கு முறை, காவேரிச் சிக்கல், பொருளாதார சமநின்மை இப்படி பல்வேறு சமூக பொருளாதார காரணிகள் உள்ளன.

அடுத்து 80 களில் தமிழீழத்தை ஆதரிக்க முற்பட்ட இந்தியா தற்போது அதை எதிர்ப்பது பெரும்பான்மையான தமிழர்களுக்கு ஒரு வித குழப்ப நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. இதையும் சுருக்கமாக விளக்க விரும்புகிறேன்

1980 களில் இந்தியாவின் அயலுறவுக் கொள்கை வேறு. பனிப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலம் அது. அப்போது சோவியத் யூனியன் உலக வல்லரசாக விளங்கியது.

இந்தியா தன்னை அணிசேரா நாடு என்று சொல்லிக் கொண்டிருந்தாலும், இந்திராகாந்தி தன்னை அணிசேரா நாடுகளின் தலைவி என்று கூறிக் கொண்டிருந்தாலும் இந்தியா சோவியத் யூனியனின் தயவோடுதான் இயங்கியது.

தற்போது நிலைமை வேறு. இந்தியா தற்போது எப்படி மாறிவிட்டது தெரியுமா? முழுக்க முழுக்க ஒரு அமரிக்க அடிவருடியாக. அதாவது அமெரிக்காவிலுள்ள மாநிலங்களான அரிசோனா, கலிபோர்னியா, மிஸிஸிப்பி போன்று இந்தியாவும் ஒரு மாநிலம்தான்.

அமெரிக்கா எந்தப் பக்கம் கையைக் காட்டுகிறதோ அந்தப் பக்கம் கையைக் கட்டிக் கொண்டு திரும்பிப் பார்க்கும் ஒரு நாடுதான் இந்தியா.

## இந்தியம் தமிழ் நாட்டுத் தமிழர்களுக்கு கொடுத்தது மயக்க ஊசி. அதனால் அவர்கள் போராட வேண்டும் என்ற உணர்வே அற்று மயங்கிக் கிடக்கிறார்கள்.

இந்தியா என்பது பல தேசிய இனங்களின் கூட்டு. பாரதி பாடியது போல்

'கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம் காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்வோம்'

என்ற அடிப்படையில் அனைத்து தேசிய இனங்களுக்கும் மதிப்புக் கொடுத்து அதில் ஒரு தேசிய இனமான தமிழினத்தின் உரிமைகளை மதித்து. கடல் கடந்த ஈழத்தை ஆதரித்து உண்மையான ஜனநாயகத்தை அது பேணியிருந்தால் நாம் இந்தியாவை நேசித்திருப்போம்.

பாரதியோ, வ.உ.சியோ நேதாஜியோ, பகத்சிங்கோ கனவு கண்ட இந்தியா அல்ல தற்போது இருப்பது.

மாறாக திலகர், அரவிந்தர், மதன் மோகன் மாளவியா, சாவர்க்கர் போன்ற இந்து வெறியர்களின் கனவுத் தேசமாகத்தான் இன்று உருவாகியுள்ளது.

அதனால்தான் இவர்கள் மொழி வழித் தேசியத்தை எதிர்க்கிறார்கள். தமிழீழத்தை எதிர்ப்பதற்கும் இதுதான் காரணம்.

தேசிய இனங்களின் ஒட்டு மொத்த எழுச்சியும் அவர்களுக்குள் ஏற்படும் கூட்டுறவும்தான் ஏகாதிபத்தியத்தை விழுத்தும் வல்லமை படைத்தவை.

லண்டன் South Harrow பகுதியில் Global Video ஸ்தாபனத்தாரின்

மற்றுமோர் புதிய உதயம் Global Fresh Fish



அனைத்து வகையான தரமான இலங்கை இந்திய கடலுணவு வகைகளை மலிவாக நீங்கள் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள் உங்களின் எண்ணம் போல் வெட்டி சுத்தம் செய்தும் தரப்படும்

Opening Time: காலை 9.00 முதல் இரவு 7.00

Tel: 020 8423 9988 Mob: 07895 709 215

**Uniglobe Exchange Ltd.**
300 Northolt Road
South Harrow
HA2 8DU
**Tel: 0208 423 9988**

**Global Fresh Fish**
230 B Northolt Road
South Harrow
HA2 8DU
**Tel: 0208 423 9988**

**Sutha Saloon**
230 C Northolt Road
South Harrow
HA2 8DU
**Tel: 0208 864 4143**

**Global Home Entertainment**
230 D Northolt Road
South Harrow
HA2 8DU
**Tel: 0208 423 7744**

# ROBOT அவசியம் தானா?



பாரிஸ் மாநக்ரத்தில் இயங்கும் வைத்திய நிலையங்களில் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக உபயோகத்தில் உள்ள ROBOTஇன் சேவையை அங்கு சென்றவர்கள் காணக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்திருக்கும். இத்தகைய ஒரு வாய்ப்பு அங்கு சென்ற சமயம் பாரிஸ் 19ல் உள்ள குழந்தைகள் / கர்ப்பிணிகளுக்கான ஒரு சிகிச்சைப் பிரிவில் காணக் கிடைத்தது.

குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட இந்த வைத்திய நிலையத்தின் எந்தப்பகுதிக்கும் தேவைப்படும் மருந்துவினியோகம், உணவுவினியோகம், மாற்று உடைகள் போன்றவற்றை எதுவித சிரமுமின்றி ROBOT மூலம் கையாளப்படும் விந்தையைக் கண்டு பிரமிக்காமல் இருக்க முடியாது. நாளொன்றுக்கு 30/40 மனிதர்கள் செய்யவேண்டிய கடமையை தனியொரு ROBOT மூலம் செய்து முடிப்பதை ஆதாரபூர்வமாக அறியலாம்.

கணனி மூலம் கட்டுப்படுத்தப்படும் இந்த ROBOT 250 கிலோ நிறையுள்ள எடையை மிக லாவகமாக கொண்டு செல்வதோடு LIFT வழியாகவும்,கதவுகள் மூலமாகவும், நடமாடும் மனிதர்களுக்கோ அல்லது குழந்தைகளுக்கோ எதுவித சிரமத்தையும் விளைவிக்காமல் தமக்களிக்கப்பட்ட கடமையைசிறிதளவு பிசகுமின்றி பூரணமாக நிறைவேற்றி வைப்பதை அதிசயமாகப் பார்த்தாலும், இது ஒரு சர்வசாதாரணமான ஒழுங்குமுறையாக இருப்பதைக் கண்டு, விஞ்ஞானத்தின் வளர்ச்சியை வாயாரப் போற்றலாம்.

ROBOT வளர்ச்சி பற்றி ஆராய முற்பட்டால், கடந்தமாதம் LOS ANGELES புறநகர்ப் பகுதியில் நடந்து முடிந்த ஒரு பரீட்சார்த்தக் கார் போட்டிகள் பற்றி குறிப்பிட்டேயாக வேண்டும்.

**தகவல் களஞ்சியம்**

எழுதுவது: **உமா மகாலிங்கம்**

URBANCHALLENGE என்றநிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட போட்டியில், சாரதி இல்லாமல் முற்று முழுதாக தானாக இயங்கும் கார்கள் எதிர்பார்த்தபடியே வெற்றியீட்டியுள்ளன. தானாக இயங்கும் கார் முன்னால் ஒரு பட்டாம்பூச்சி பறந்து சென்றாலே அக்காரின் இயக்கத்தை நிறுத்திவிடுமென்று 2005ம் ஆண்டளவில் எழுந்த சந்தேகம் இப்போது தவிடு பொடியாகிவிட்டதை கடந்த மாதம் நடந்த கார்ப் போட்டி நிரூபித்துள்ளது.

வாகனப் போக்குவரத்துக்கு இசைவான எச்சரிக்கை அடையாளங்களையும், வீதியின் வளைவு நெளிவுகளையும், சந்திகளின் சமிஞ்சைகளையும், தடைகளை ஏற்படுத்தும் இயங்காத வாகனங்களையும், விதிமுறைகளுக்கு முரணாக வீதியில் செலுத்தும் கார்ச் சாரதிகளைக் கவனத்தில் கொண்டு, மிகச் சாதுர்யமாக இயங்கிய (சாரதி இல்லாத) கார்கள் விஞ்ஞான உலகில் சாதனை படைத்துள்ளன.

விஞ்ஞானபூர்வமாக ROBOT வளர்ச்சியை ஏற்றுக் கொண்டாலும், மனிதனின் நடைமுறை வாழ்க்கையில் இவ்வகை கண்டுபிடிப்புகள் பாதிப்பை ஏற்படுத்த இடமுண்டு.

உதாரணமாக, ஒரு நெடுஞ்சாலையில் ஓடிக் கொண்டிருக்கும் தானியங்கிக் காரின் சாரதி, தனது களைப்பின் நிமிர்த்தம் ஓய்வெடுக்கும் நோக்கமாக, தானகவே இயங்கும் நிலைக்குக் காரை அமர்த்திவிட்டு, ஒருபக்கம் சாய்ந்து ஒரு பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தால், அவரோடு பயணம் செய்யும் மற்றவர்களின் மனநிலை எப்படி மாறும் என்பதைச் சிந்திக்க வேண்டும்.

வாகன நெருக்கடி மிகுந்த ஒரு நெடுஞ் சாலையில், பாரமேற்றி வந்த ஒரு பாரிய வாகனம், பக்கத்தில் வந்து நிறுத்தும் போது, அதன் சாரதி ஆசனத்தில் எவரும் இல்லாதிருப்பின், சாரதி ஆசனத்தில் இருக்கும் பக்கத்துக் கார்ச்சாரதிக்கு மன நிலை எப்படி இருக்கும் என்று சற்று சிந்தித்தால், தானாக இயங்கும் கார்களின் பாவனை அவசியந்தானா என்று அங்கலாய்ப்பவர்களும் இல்லாமல் இல்லை.

எனினும் அதன் உபயோகத்தால் ஏராளமான வீதி விபத்துக்களும், மரணங்களும் அதிகளவு கட்டுப்படுத்தப்படுமென ஆதாரபூர்வமாக அடித்துச் சொல்லுகிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

இதுவரைகாலமும் அனுபவித்த ஏகபோக உரிமையான சந்தோசத்தை மனிதர்கள் விட்டுக் கொடுக்கத் தயாரா? பொறுத்திருந்து பார்ப்போம்.

### ஒளி பிரகாசிக்கும் ஒரு தேசம்

சீனாவின் SHANDONG மானிலத்தில் RIZHAO என்ற நகரம் கடற்கரையை அண்டி அமைந்துள்ளது. இந்நகரத்தை 'சூரியப் பிரகாசம்' என்ற பொருள்பட இதன் பெயர் சூட்டப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

3 கோடி மக்களைக் கொண்ட இந்த அழகிய நகரம், முற்று முழுதாக சூரிய ஒளியின் முழுச் சக்தியையும், தமது அன்றாட தேவைக்குப் பயன்படுத்தி வருவதை, அவர்கள் வசிக்கும் கட்டிடங்களின் கூரைகளில் காணப்படும், சூரிய ஒளிக்கதிர்களை உள்வாங்கும் கண்ணாடித் தளங்கள் ஊர்ஜிதம் செய்கின்றன.

சூரிய ஒளிக்கதிர்களால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் அந்நகரத்தின் அதிமுக்கிய தேவைகளை மிகக்குறைந்த செலவில் பூர்த்தி செய்து கொடுக்கின்றது.

இந்நகர வளர்ச்சியின் முன்னேற்றம் காரணமாக, சீனாவின் பல நகரங்களும் இவ்வழியைப் பின்பற்ற முன்வந்துள்ளன. உலகளவில் முன்னெடுக்கப்படும் பசுமைப் புரட்சியிலும் இந்நகரம் முன்னணியில் இருக்கிறது.

வருங்காலத்தின் பிரச்சனைகளை முன்கூட்டியே அறிந்து கொண்டு, புதிதாக அமைக்கப்படும் ஒவ்வொரு கட்டிடத்தின் கூரையிலும், சூரிய ஒளியைக் கவரக்கூடிய கண்ணாடித் தளங்கள் வசதி செய்யப்படுவதாக அறிகிறோம். சீனாவை உதாரணமாகக் கொண்டு, வளர்ந்து வரும் வறிய நாடுகள் இத்தகைய முயற்சியில் ஈடுபடுவது விரும்பத்தக்கது.

நிலத்தின் அடியில் இருந்து பெறப்படும் பெற்றோல், கரி போன்ற இயற்கை வளங்கள் 50 வருட காலத்துக்குள் வற்றிவிடப் போவதை ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கின்றனர்.

அதற்கு மாற்றீடாகக் கண்டுபிடிக்கப்பட்ட தாவரங்கள் மூலம் பெறப்படும் எண்ணெய் வகைகள் மக்களுக்குத் தேவைப்படும் சக்தியை எந்த வகையிலும் பூர்த்தி செய்யப் போவதில்லை.

எனவே சூரிய ஒளிக்கதிர்கள் மூலம் பெறப்படும் சக்தியை எவராலும் உதாசீனம் செய்து விட முடியாது. சூரியனின் ஒளியைக் கூடுதலாக அனுபவிக்கும் நாடுகள் இவ்வரப்பிரசாதத்தைத் தட்டிக் கழித்துவிட முடியாது.

அரசியல் நிலைமை காரணமாக அல்லல்படும் ஈழத்துமக்கள், வருங்கால சந்ததியின் தேவையை முன்னிலைப்படுத்தி, சூரிய ஒளியினால் பெறக்கூடிய அதிக சக்திகளை உற்பத்தி செய்ய முன்வரவேண்டும்.


மக்களின் அமோக ஆதரவைப் பெற்ற . . .

**Ganesha** Cash & Carry



உங்களுக்குத் தேவையான Sri Lankan, Indian, English, Groceries ஆபிரிக்கன் உணவு வகைகள் Fresh meat மற்றும் Off Licence பொருட்களை. . .

ஒரே இடத்தில் . . .

ஒரே நேரத்தில். . .

பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்.

பிரமாண்டமான Parking வசதிகள் எம்மிடம்.



Call:
Tel: **020 8597 9983**
Mob: **07946 058 177**

**Ganesha Cash & Carry**
112, Aldborough Road South, Newbury Park London 1G3 8EZ

# இது அழுவதற்கான நேரமல்ல

'தமிழர் நாம் ஒன்றாய் இருந்தால்
தமிழர் நாம் மூச்சாய் எழுந்தால்
விடுதலை விடுதலை தமிழீழம் தமிழீழம்'

இதனை ஒருமூச்சாய்ச் சொன்ன அரங்க நிகழ்வொன்று இலண்டன் தேசிய நினைவெழுச்சி நாளில் நான் கண்டேன். இருபத்தையாயிரம் தமிழ் மக்களுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்ட மாவீரர் நாள் அது.

எப்பொழுதும் மாவீரர் நாளுக்கு இலண்டனிலேயே மிக அதிகளவிலான மக்கள் கூடுவார்கள். இம்முறை அது வரலாற்றுச் சாதனையாக இருந்தது. இந்த கால் இலட்சம் மக்கள் நிறைந்த மண்டபத்தில் இந்த அரங்க நிகழ்வு என்னுள் சிலிர்ப்பை ஏற்படுத்தியது.

அந்த செவ்வாய் நாள் காலை மழை தூறி இலண்டன் நகரை நசநசக்க வைத்தது. சாம்பல் பூத்த மேகங்கள் நகரைச் சூழ்ந்து இருட்டாக்கின. போக்குவரத்து நெரிசல் மிகுந்த இந்த நாள் காலையில் திக்கித் திணறி அப்பெரும் மண்டபத்தை அடைந்தேன். அப்பிரமாண்டம் என்னை மலைக்க வைத்தது.

கார்த்திகைப் பூவை சட்டைப் பையில் குத்தி உள்ளே வழி விட்டனர், சிவப்பு மஞ்சள் சேலை அணிந்த பெண்டிர். மேடை என் கண்ணுக்கெட்டாத் தொலைவில் இருந்தது. மேடையில் அசையும் உருவங்கள் சின்னதாக இருந்தன. பிரமாண்டமான பத்துத்திரைகளில் ஒன்றில் என் பார்வையை வைத்தேன். முதலில் வந்தது நமது தேசியத் தலைவரின் மாவீரர்நாள் உரை.

தேசம் மீட்கும் போரளிக் குழுத்தலைவனின் முதிர்ச்சியுற்ற ஓர் உரையாக அது அமைந்தது. முக்கியமான பல மையங்களை இவ்வுரை தொட்டுச் சென்றது. சிங்கள பௌத்த பேரினவாதம், சர்வதேச சமூகம், புலம்பெயர் தமிழர், கலையினூடான ஏழுச்சி, என்ற தளங்கள் அவ்வுரையில் இருந்தன. என் நினைவுக்கெட்டிய வரையில் தோழர் மாசேதுங்கின் யெனான் கருத்தரங்க உரையை இது கிளறியது.

தலைவர் ஒன்று சொன்னார்: கலையினூடாக மக்களின் எழுச்சி. மேலும் ஒன்று: ஒவ்வொரு மாவீரர்நாள் உரையிலும் சொல்வார் 'இது அழுவதற்கான நேரம் அல்ல' அவ்வாக்கியம் கூறும் அர்த்தம் என்ன?

மாவீரர்களை நினைந்து அழுவோம், அழுகைவரும் ஆனால் அத்துடன் மாத்திரம் நிறுத்திவிட முடியாது. அதற்கு அப்பால் என்ன செய்ய வேண்டும் என்று சிந்திக்க வேண்டிய தருணம் இது. அழ வைத்தமைக்கான காரணத்தை அறிந்து ஆற்றலுடன் எழ வேண்டியட நேரம் இது. மாவீரர் எதற்காக வித்தாக வீழ்ந்தார்களோ அதற்காக விதையிலிருந்து முளையாக எழ வேண்டிய பொழுது இது. அழுவது மாத்திரம் அவர்களுக்கான அர்ப்பணம் அல்ல. ஆற்றலுடன் எழுவது, ஆகும் காரியம் செய்வது என்பவையும் மாவீரர்களுக்கான அர்ப்பணம். ஓம் மாவீரர் கனவை நிறைவேற்ற எழுச்சி கொள்ள வேண்டும்.

என் சிந்தனையில் இவையெல்லாம் ஓடின. ஆயினும் நான் அழுதேன். 'மொழியாகி எங்கள் மூச்சாகி' என்று புதுவை இரத்தினதுரையின் வரியில் கண்ணனின் இசையில் வர்ண இராமேஸ்வரனின் குரலில் பாடல் ஒலிக்கத் தொடங்கவே என் நெஞ்சு விம்மத் தொடங்கியது. மேலும்

'எங்கே எங்கே உமது விழிகளை இங்கே திறவுங்கள்
ஒரு கணம் உங்கள் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்'

என்ற வரிகள் வருகிறபோது உடைந்து போகிறேன். நன்றாக ஒழுகட்டும் என்று கண்ணை மூடி, எனக்கு நன்கு தெரிந்த மரணித்த போராளிகளை நினைவுக்குள் வைக்கிறேன். இம்முறை என் மைந்தன் என்று நான் தழுவிய சந்திரனை (லெப். கேணல் பாலச்சந்திரன்) மனதுள் வைத்தேன். அந்த மழலைத் தமிழ். '?இரவி மாஸ்டர்' என்று அழைத்த சிரிப்பு.....

'அழுவதும் அதற்கப்பால் எழுவதும்' என்றான எழுச்சி நிகழ்வு தொடர்ந்தது. 'மூச்சாய் எழுவோம்' இது அந்த அரங்க நிகழ்வின் பெயர்.

**இரவி அருணாசலம்**

**எழுதுவது என்னவெனில்**

'மூச்சாக எழுவோம்' அரங்க நிகழ்வு அப்படி ஆற்றுகை செய்யப்பட்டது. கலைஞர்கள் மக்களிலிருந்து பறையைத் தட்டியபடி வருகிறார்கள். மேடையேறுகிறார்கள். உரைஞர் ஒருவர் இவ்வரங்க நிகழ்வின் முன்னுரை பகர்கிறார். பாடல் ஒன்று ஒலிக்கிறது. மகாகாவியின் பாடல் அது

ஆறு நடந்து திரிந்த வயல்கள்
அடைந்து கதிர்கள் விளைந்திட வான்
ஏறி உயர்ந்த மலை ஏதும் இல்லையே
என்று ஒரு கதை சொல்வதுண்டு.
ஏறி உயர்ந்த மலை இல்லை
ஆயினும் இருந்தன தோள்கள்

என்ற பாடல் தமிழரின் வீரத்தை, தீரத்தை, ஓர்மத்தை, உழைப்பை, ஆர்வத்தை, ஆற்றலைச் சொல்லிற்று.

எங்கள் நிலத்தில், எங்கள் மண்ணில் நாங்கள் ஆடினோம், பாடினோம், கூடினோம், கொண்டாடினோம், குதூகலித்து மகிழ்ந்தோம். நாங்கள் தமிழர் என்ற பெருமையில் வாழ்ந்தோம். நமக்கென்றோர் நிலம் இருந்தது. அந்த நிலத்தில் நமக்கென்றோர் வாழ்வு இருந்தது. நாம் பஞ்சம் பிழைக்க வந்தவர்கள் அல்லர். அண்டிப்பிழைக்கவோ ஆரையும் சுரண்டிப் பிழைக்கவோ வந்தவர்கள் அல்லர். வெள்ளைக் கழுகுகளும், சிங்களச் சிங்கங்களும் எம்மை விழுங்கின, விரட்டி அடித்தன, துரத்தின. அதனால்தான் வந்தோம்....

அப்படி அரங்க நிகழ்வின் கதையாடல் சென்றது. மேலும் நான் விபரிக்க விரும்பவில்லை. ஈற்றில் 'எங்கள் நிலம் எமக்கு வேண்டும்' என்று வானளாவிய கோசத்தை அரங்கு கொடுத்தது.

'ஒவ்வொரு கல்லாய் பொறுக்கி அடுக்கி
கட்டிய வீட்டில் கால்கள் பதிக்க
எங்கள் நிலம் எமக்கு வேண்டும்'

இந்த அரங்க நிகழ்வில் தமிழரின் பாரம்பரிய நடனங்களும், சடங்குகளும், பண்பாட்டுக் கோலங்களும் அழகுறக் காட்டப்பட்டன. நிகழ்த்துதல் கலை என்ற வடிவில் செய்திகள் சொல்லப்பட்ட வடிவு அற்புதம். உதாரணமாக நசிக்கப்பட்ட தமிழரின் இரத்தத்தில் தோய்க்கப்பட்ட சால்வையையே அந்தச் சிங்களவன் அணிகிறான்.

மிகுந்த எழுச்சியூட்டுவதாக அமைந்தது இந்த அரங்கு. மாவீரர்களுக்கு வணக்கம் தெரிவிக்கும் இந்த நிகழ்வில் மக்களுக்கு எழுச்சி ஊட்டுவது அவசியமா? என்று யாரும் கேட்கலாம். ஒரு கணம் தயங்காமல் 'ஓம்' என்று சொல்வேன்: தலைவரே சொல்கிறார் 'இது அழுவதற்கான நேரம் அல்ல' மேலும் சொல்கிறார் 'கலைஞர்கள்தான் மக்களை எழுச்சியூட்ட வேண்டும்'

மாவீரர்களுக்கு நாம் கொடுக்கும் வணக்கமும் அர்ப்பணிப்பும், மக்களின் எழுச்சியாகத்தான் இருக்க முடியும். இதனைக் கலைஞர்களால்தான் செய்ய இயலும்.

# ஆதி அம்மா லூசியா? ஏவாளா?

பரிணாமம் என்றால் மாற்றம். உயிரியல் மாற்றத்தை அறிவியல் ரீதியாக ஆய்வு செய்து உருவானது பரிணாமக் கோட்பாடு

ஆதாம் ஏவாள் கதையை நம்பும் அறிவியலுக்கு புறம்பாகச் சிந்திக்கும் பலர் உயிரியற் பரிணாமக் கோட்பாடடை பொய்யாக்க முற்படுகிறார்கள். இவர்கள் வாதமும் அதற்கான ஆதாரங்களும் அனேகமாக வேடிக்கையாகவே இருக்கும்.

எடுத்துக்காட்டிற்கு ஆடை உடுக்கும் வயதை எட்டாத குழந்தைகள் ஒன்றாக விளையாடிக் கொண்டிருந்தார்களாம். ஒரு குழந்தை மட்டும் ஆடை போட்டிருந்ததாம். அதன் ஆடையில் ஒரு ஓட்டை. நிர்வாணமாக நிற்கும் அத்தனை குழந்தைகளும் அந்த ஓட்டையைச் சுட்டிக்காட்டி கேலி செய்தார்களாம்.

அவர்களுடன்தான் அறிவியற் கோட்பாட்டை கேலி செய்பவர்களை ஒப்பிட வேண்டும். அவர்கள் கூற்றுக்கு ஆதாரம் கேட்டால் கையை விரிப்பார்கள், அல்லது ஏதாவது ஒரு புத்தகத்தை ஆதாரம் காட்டுவார்கள் அறிவியலில் மட்டும் ஓட்டைகளை தாராளமாகச் சுட்டிக் காட்டுவார்கள்.

குரங்கிலிருந்து மனிதன் பிறந்தான் என்ற கூற்று எப்படி வந்ததென்று தெரியவில்லை. ஆனால் டாவின் கோட்பாடு குரங்கும் மனிதனும் ஒரேவகை உயிரினத்தின் இரு பிரிவுகள் என்றே கூறுகிறது.

சமுதாயத்தில் பரம்பரை பரம்பரையாக ஏற்படும் மாற்றங்களே உயரியல் பரிணாமக் கோட்பாடு. தனி ஒரு மனிதனோ அல்லது தனி ஒரு உயிரினமோ அடையும் மாற்றத்தை பரிணாமம் என்று சொல்ல முடியாது. அது பல தலைமுறைகளாக நடைபெறும் மாற்றமேயன்றி ஒரு தலை முறைக்கும் அடுத்த தலைமுறைக்கும் இடையில் உள்ள குறுகிய கால மாற்றம் அன்று.

ஒரு உயிர்க் கலமாக உருவான உயிரினம் 350 கோடி ஆண்டுகளில் இன்று இரண்டுகாலால் நடக்கும் மனிதன் நிலைவரை மாற்றம் அடைந்துள்ளது. முதன் முதலில் மனிதன் எப்போ தோன்றினான் என்று கேட்டால் துல்லியமாகப் பதில் சொல்வது கடினம். ஆனாலும் நாளுக்கு நாள் புதை படிவங்களிலிருந்து கிடைக்கும் உயிர்ச் சுவடுகள் இதற்கான விடை ஒன்றும் சிரமமான பணியாக எதிர்காலத்தில் இருக்க முடியாது என்றே சொல்ல வைக்கின்றது.

குரங்கும் மனிதனும் பிறைமேற் என்னும் பிரிவினுள் அடங்கும் வெவ்வேறுவகை உயிரினங்கள். அவற்றுள்மனிதனுடன். நெருக்கமானவை வாலில்லாக் குரங்குகள். கொரில்லா, சிம்பன்சி, ஒறெங் குட்டான் கிப்பன் ஆகிய இந்த நான்கு வகையும் பல அம்சங்களில் மனிதரை ஒத்த தன்மை கொண்டவை. மனிதப் பிரிவோடு இப்போ ஐந்து பிரிவாக உள்ள இந்த இனங்களின் மூதாதை இனமான ஒரு இனம் நிச்சயம் வாழ்ந்திருக்கவேண்டும். அது எந்தக் காலம் வாழ்ந்தது என்று ஆராய்கிறார்கள்.

எப்போ ஒரு உயிரினம் இரண்டு கால்களால் நடக்க ஆரம்பித்து தன் முன் பாதங்களை கைகளாக பல்வேறு தேவைகளுக்கு பயன்படுத்த ஆரம்பித்ததோ அக்காலத்தைக் தான் மனிதனின் ஆரம்பம் என்று சொல்ல வேண்டும்.

புதை படிவங்களிலிருந்து கிடைத்த உயிர்ச் சுவடுகளை ஆராய்ந்த ஆய்வாரள்கள் 32 இலட்சம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஒரு பெண்ணின் எலும்புக்கூட்டை ஆய்வு செய்து மனித ஆரம்பம் என்று தாங்கள் கருதும் தகைமைகள் முழுவதும் அப் பெண்ணிடம் இருப்பதாகக் கூறினார்கள். லூசி என்று அப்பெண்ணுக்கு பெயர் சூட்டப்பட்டது.

அதன் பின் பல உயிற் சுவடுகள் ஆராயப்பட்டதன் விளைவாக ஆதிப் பெண் என்ற பதவி பறிபோனாலும் இந்த ஆய்வின் கதா நாயகியாக இப்போதும் லூசிதான் உள்ளார். அவரின் பின் ஏற்பட்ட பரிணாம வளர்ச்சியே தற்கால மனிதன்.

*சி.மாசிலாமணி*

வியாபாரம் பெருக விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர் அடிக்கவும் விளம்பரம் வேண்டும்.

ஒரு பேப்பர



**Sri Sairam**

Astrology Centre Jothidam

20 Years Experience Specialist in all kinds of Astrology Face Reading & Palm Reading

**Ragulans News Agents**

628 Kingsbury Road, London NW9 9HN
(Opposite Kingsbury Station, Next To Abbey)
Opening Hours: 9 a.m – 7 p.m . 7 Days a Week

Call:

PANDIT **SIVASHANGAR**

**on 07930 691 692 / 07940 185 378**

இந்தியாவில் இருந்து முதன் முறையாக வருகை தந்துள்ள **பண்டித் சிவசங்கர்** அவர்கள் பாபா அருள் கொண்டு கைரேகை மூலம் முகநாடி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களைக் கூறுவார்.

துல்லியமாகக் கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள் கணவன் மனைவி ஒற்றுமை, விசா பிரச்சனை, உடல் நலம், திருமண யோகம், வாஸ்து சாஸ்திரம், தொழில், வியாபாரம், லக்ஷ்மீகர விடயம், கண் திருஷ்டி, கோட் வழக்குகள், வாகனப் பொருத்தம், தமிழ், இந்தி, ஆங்கிலம், கன்னடம், ஆகிய மொழிகளில் சாஸ்திரம் சொல்லப்படும்.

20 Years expert pandit at service. Past, Present and Future of your life, will be read over to you from your Numerology, Face reading, Palm reading & Horoscope reading Prediction in Business, Education, Job, love, Marriage, Family problem, Sickness, Promotion, Visa, Court, Lottery, Money, Removal of enemy.



SPOKEN LANGUAGES: TAMIL, HINDI & ENGLISH.

# இன்னொரு நாடகம்

கடந்த நவம்பர் மாதம் 28ம் திகதி கொழும்பிலுள்ள ஈபிடிபி தலைமையகத்தில். டக்லஸ் தேவானந்தாவை இலக்கு வைத்து நடத்தப்பட இருந்த தற்கொலைக் குண்டுத்தாக்குதல் உரிய நேரத்தில் எடுத்த நடவடிக்கையினால் முறியடிக்கப்பட்டதாக இலங்கை ஊடகங்கள் மட்டுமல்ல சர்வதேச ஊடகங்களும் அதி முக்கியத்துவம் கொடுத்து இச்செய்தியை வெளியிட்டன.

இச்செய்தி குறித்து இலங்கை பாதுகாப்பு அமைச்சும், பிற செய்திஸ்தாபனங்களும் இது புலிகளின் தற்கொலைத் தாக்குதல் என்ற அடித்துக் கூறியிருநதன.

இச்சம்பவம் குறித்து சிறிலங்கா காவல்துறை உயரதிகாரி ஜயந்த விக்கிமரட்னஅவர் கூறியதாவது:

நாரகேன்பிட்டியில் உள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் பொதுமக்களை டக்ளஸ் தேவானந்தா சந்தித்து வருவது வழக்கம். இன்று காலையும் அவரை சந்திப்பதற்காக பொதுமக்கள் அங்கு வருகை தந்திருந்தனர். பொதுமக்களைப் போன்றே பெண் தற்கொலைக் குண்டுதாரியும் அங்கு வரிசையில் நின்றுள்ளார். அவர் போலியோ நோயால் பாதிக்கப்பட்டவரைப் போன்று இருந்தார். அதனால் அவரை சோதனை செய்யாமலேயே பாதுகாப்பு கடமையில் இருந்தோர் அலுவலகத்தின் உள்ளே செல்ல அனுமதித்துள்ளனர்.

எனினும், அந்த தற்கொலைக்குண்டுதாரியை டக்ளஸ் தேவானந்தாவின் பொதுமக்கள் தொடர்பு இணைப்பாளர் ரீபன் பீரிஸ் சோதனை செய்ய முயற்சித்தார். அப்போது அந்த பெண் தற்கொலைக்குண்டுதாரி தனது உடலில் கட்டியிருந்த குண்டை வெடிக்க வைத்தார். இதனால் பொதுமக்கள் தொடர்பு இணைப்பாளர் ரீபன் பீரிஸ் உள்ளிட்ட இரண்டு பேர் படுகாயமடைந்தனர். அவர்களை உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர் என்றார்.

இச்சம்பவம் குறித்து சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார தெரிவிக்கையில், விடுதலைப் புலிகளின் தற்கொலை குண்டுதாரிப் பெண்ணே இத்தாக்குதலை நடத்தியிருப்தாக முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. தொடர்ந்தும் விசாரணைகள் நடைபெறுகின்றன என்றார்.

அதாவது இலங்கை பாதுகாப்பு அமைச்சகம் விடுத்த செய்திக்குறிப்பில் முக்கியமாக கூறப்பட்டதாவது:

1. தற்கொலைக் குண்டுதாரி ஒரு போலியோ நோயினால் பாதிக்கப்பட்ட பெண்.
2. தற்கொலைக் குண்டுதாரியை சோதனை செய்ய முற்பட்ட போதுதான், அக்குண்டுதாரி தன்னில் பொருத்தியிருந்த குண்டை வெடிக்க வைத்தார்.
3. அதனால் ஏற்பட இருந்த பாரிய அனர்த்தம் தவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நடைபெற்று சில நாட்களுக்குள் ஈபிடிபியாலும் இலங்கை பாதுகாப்பு அமைச்சாலும் தற்கொலைத்தாக்குதல் சம்பவத்தின் ஒளித் தடங்கள் வெளியிடப்பட்டன.

என்ன ஆச்சரியம்! இவ்வொளித்தடத்தில் இலங்கை பாதுகாப்பு அமைச்சோ, ஈபிடிபியோ முன்பு தெரிவித்த சம்பவத்தின் சோடனைகள் எதுவுமே இடம்பெறவில்லை என்பதே.

அவ்வொளித்தடத்தில், ஓர் மெல்லிய சேலை உடுத்திய பெண் ஈபிடிபி அலுவலகத்துக்கு வருவதையும், அங்கு நின்ற ஈபிடிபி உறுப்பின சிலர் அவருடன் உரையாடுவதையும், பின் அப்பெண் இன்னொரு உறுப்பினரால், ஸ்ரீபன் பீரிஸ் அவர்களை சந்திப்பதற்காக, ஸ்ரீபன் பீரிஸ் அமர்ந்திருந்த மேசையின் மறு புறத்தில் அமர்த்தப்படுகிறார். அதேசமயம் அப்பெண்ணை அங்கு கூட்டி வந்த உறுப்பினருடன், ஏனைய உறுப்பினர்களும் அவசரமாக அவ்விடத்திலிருந்து வெளியேறுகின்றனர். ஸ்ரீபனுடன் கதைத்து முடித்த அப்பெண் எழுவதும், அப்போது குண்டு வெடித்து அப்பெண்ணின் பாகங்கள் தூக்கியெறியப்படுவதுமாக முடிகிறது.

இவ்வொளித்தடத்துக்கும், முன்பு இலங்கை அரசோ, ஈபிடிபி ஆயுத ஒட்டுக்கும்பலோ வெளியிட்டபடி, அப்பெண் போலியோ நோயினால் பாதிக்கப்பட்டதற்கான அறிகுறிகளோ, அப்பெண்ணை அங்கு நின்ற ஈபிடிபி உறுப்பினர்கள் சோதனை செய்ய முற்பட்டதாகவோ எவ்வித தடயங்களும் இருக்கவில்லை.

மாறாக இக்குண்டுவெடிப்பானது ஸ்ரீபன் பீரிஸ் அமர்ந்திருந்த மேசையில் பொருத்தி வைக்கப்பட்டிருந்த ஓர் சிறிய குண்டினாலேயே மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என சந்தேகிக்கத் தோன்றுகின்றது.

ஏன் இந்த மாறாட்டம்? இதில் உண்மைகள் பல மறைக்கப்பட்டுள்ளனவா? அங்கு நடைபெற்றது தற்கொலை தாக்குதல் இல்லையாயின், இக்குண்டு வெடிப்பின் பின்னணி யாது? கொல்லப்பட்ட பெண் தற்கொலைதாரி இல்லையாயின், இவ் வேள்விக்கு அனுப்பப்பட்ட பெண் யார்? ஏன் இந்த தற்கொலைத் தாக்குதல் நாடகம் அரங்கேற்றப்பட்டது?

இக்குண்டுவெடிப்பின் பின்னனிகள் என்னவாக இருக்கலாம்?

1. இலங்கை அரசின் தமிழ் மக்கள் மீதான அண்மைய காட்டுமிராண்டித்தனங்கள் சர்வதேசத்தின் கடும் கண்டனத்துக்கு உட்பட்டிருந்த நிலையில் அதனை திசை திருப்பி, சர்வதேசத்தின் பார்வையை விடுதலைப் புலிகளின் மேல் போட வேண்டிய கட்டாய தேவை இலங்கை அரசுக்கு இருந்தமையால், இக்குண்டுத் தாக்குதலை, தமது தேவைகளுக்காகவே உருவாக்கி ஒட்டுக்கும்பலை வைத்துச் செய்து இருக்கலாம் அல்லது ஒட்டுக்கும்பலை பலியிட்டும் இலங்கை அரசு செய்திருக்கலாம்.

ஸ்ரீவன் பீரிசை இவ்வுலகிலிருந்து அப்புறப்படுத்த வேண்டிய தேவை ஈ.பி.டி.பி தலைமைக்கு இருந்திருக்கலாம். ஸ்ரீபன் பீரிஸ் இந்திய உளவுத்துறையினருடன் தொடர்புடையவர் என சில இணையங்கள் செய்தி வெளியிட்டிருக்கின்றன. . இந்திய உளவுத்துரையினரால் ஸ்ரீபன் பீரிஸ் மூலம் வரக்கூடிய ஆபத்துக்களைத் முற்கூட்டியே தடுப்பதற்காக, ஈ.பி.டி.பி தலைமை ஸ்ரீபன் பீரிஸை பலிக்கடாவாக்கி இருக்கலாம்.

தற்கொலைதாரி என்று கூறப்படும் பெண்ணுடன் ஒரு ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர் முதலில் உரையாடுவதையும், பின் இன்னோர் உறுப்பினர் ஸ்ரீபன் பீரிஸ் அமர்ந்திருந்த மேசையின் அருகே கூட்டிச் சென்று விட்டு விட்டு அங்கிருந்து விலகுவதையும் பார்க்கையில், இவர்களுக்கு அறிமுகமான ஓர் அப்பாவிப்பெண்ணே ஈ.பி.டி.பி அலுவலகத்துக்கு அழைத்து வரப்பட்டு பலியிடப்பட்டதாகத் தோன்றுகிறது.

கடந்த காலங்களில் பல ஈ.பி.டி.பி இரண்டாம் நிலைத்தலைவர்கள் கொல்லப்பட்டதும், அக்கொலைகள் புலிகளினாலேயே நடத்தப்பட்டதாக ஈபிடிபி தலைமை கூக்குரலிட்டு வந்ததும் தெரிந்ததே. ஆனால் கடந்த சில வருடங்களாக ஈபிடிபியில் இருந்த சில முக்கியஸ்தகர்கள் இலங்கையை விட்டு தப்பியோடி வெளிநாடுகளுக்கு வந்த பின்னர், ஈபிடிபிக்குள் நடைபெற்ற பல மர்ம முடிச்சுக்களை ஒவ்வொன்றாக அவிழ்க்கத் தொடங்கியுள்ளனர்.

ஈபிடிபி ஒட்டுக் கும்பலுக்குள் 'விடுதலைப் புலிகளின் பெயரில்' நடைபெற்ற பல உட்கொலைகளின் காரணகர்த்தா ஈபிடிபி தலைமையே என்பதும் அம்பலமாகியுள்ளது.

கடந்த காலங்களிலும் இதே போன்று தன்னை கதாநாயகனாக்க டக்லஸ் தேவானந்தாவினால் நாடகங்கள் பல அரங்கேற்றப்பட்டிருப்பதும், அவற்றுக்காக பல ஈபிடிபி உறுப்பினர்கள் பலியிடப்பட்டதும் அறிந்ததே. இது ஒரு முடிவற்ற தொடர் கதையே ....

- *சஞ்ஜெயன்*




**Long tek Electronics Europe Ltd**

LONGTEK

உங்கள் பாதுகாப்பான வியாபாரத்துக்கு . . .
கடையைப் பார்ப்பது நாங்கள் . . .
தொழிலைப் பார்ப்பது நீங்கள்!




**Intruder Alarms**

CS 3747 Standard Intruder Alarms For Houses and shops

**Door Access**

All our products on side warranty.
Alarm and CCTV installers get special discount.

Long tek
Price Promisé
**"We will beat any prices"**

**CCTV Distributers**

CCTV installations & Maintenance
Remote Access through the internet
Special Offers cameras & DVRS

12 Bishops Close
Enfield, EN1 3QJ

Mob: **07710 491440**
Tel: **020 8805 0002**

logan@longtek-cctv.co.uk



வாசகர் கடிதம்

# பெயரற்றவர்களுக்கு இடம் வேண்டாம்

ஒரு பேப்பர் காரன் /காரிகளுக்கு

மொட்டைக் கடிதம் என்ற பேரில் மொட்டாக்குப் போட்டு வருபவர்களுக்கு எதற்காக இடம் அளிக்கிறீர்கள்? உள்ளதை நடந்ததைச் சொல்வதற்கு யாரும் அஞ்ச மாட்டார்கள். ஆனால் அதற்கு அச்சப்பட்டு தம் பெயரையே கூறப் பயப்படும் ஒருவரது ஆக்கத்தை உங்களுடைய பத்திரிகையில் பிரசுரிக்கத்தான் வேண்டுமா?

ஒரு பேப்பர் ஐ ஒரு பேப்பர் விடாமல் தொடர்ந்து வாசித்துக் கொண்டு வருகிறேன். நல்ல விடயங்கள் வருகின்றன. ஒரு பேப்பர் ஐ வாசிக்கும் படி பலருக்கு நான் சிபாரிசு செய்வதுண்டு. எல்லோரும் நல்ல பத்திரிகை என்றுதான் கூறுகிறார்கள்.

நீங்கள் அறிந்திருப்பீர்களோ என்னவோ ஐ.ஓ.எம் என்ற நிறுவனம் ஒரு கருத்துக் கணிப்பை நடாத்தியிருந்தது. இலண்டனில் எல்லாப் பிரதேசங்களிலிருந்தும் 200 தமிழ் வாசகர்களைத் தேர்ந்தெடுத்து நீங்கள் அதிகம் விரும்பி வாசிக்கும் தமிழ்ப் பத்திரிகை எது? என்று கேள்வி கேட்டிருந்தது. அதிகமானோர் ஒரு பேப்பர் ஐயே கைகாட்டியிருந்தார்கள். இதோ முடிவுகள்.

விபரங்கள் திரட்டப்பட்டவர்களில்

1. ஒருபேப்பர் - 186 பேர்

2. ஈழமுரசு - 48 பேர்

3. உதயன் - 16 பேர் என்றும் கூறியிருந்தார்கள்

'முதலாவதாக வந்த ஒரு பேப்பர் இற்கும் இரண்டாவதாக வந்த 'ஈழமுரசு' விற்கும் இடையிலேயே அதிக வித்தியாசம் உண்டு. இதற்காக நீங்கள் பெருமைப்படலாம். ஆனால் நீங்கள் சிறுமைப் படத்தக்க மாதிரி அல்லவா நடக்கிறீர்கள்.

முன்னர் ஒரு பேப்பர் இல் ராஜினி திரணகம பற்றிய திரைப்படம் குறித்து மிக நல்ல கட்டுரை வெளியிட்டிருந்தீர்கள். 'ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம்' என்ற சி. புஷ்பராஜாவின் புத்தகம் குறித்து 'ஈழப் போராட்டத்தில் எனது (பொய்) சாட்சியம்' என்ற தொடர் கட்டுரையில் மிகக் காத்திரமாக எழுதியிருந்தீர்கள். இன்னும் பல சிறப்பான விசயங்கள் வந்திருந்தன.

அது மாத்திரமன்றி தமிழின விரோதிகளான டக்ளஸ், சங்கரி, கருணா, என்ற இவர்களை தோலுரித்துக் காட்டும் கட்டுரைகள் பல ஒரு பேப்பர் இல் வெளியாகின. தமிழர் தேசியத்துக்கென வெளிவருகிற ஒரு பத்திரிகைகூட செய்யத் துணியாத காரியத்தை ஒரு பேப்பர் செய்தது.

ஆட்டைக் கடித்தீர்கள், மாட்டைக் கடித்தீர்கள் சந்தோசமாக இருந்தது. இப்பொழுது 'மனிசனைக்' கடிக்க வெளிக்கிட்டீர்களே, அதனைத்தான் என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அதுதான் இந்த அவசரக் கடிதம்.

மொட்டைக் கடிதம் என்ற மொட்டாக்குக்குள் ஒளித்துக் கொண்டு 'விவேகமானவர்கள்' என்று ஒரு மருத்துவரைத் தாக்கி எழுதியிருக்கிறார் ஒருவர். அவருக்கு நீங்கள் களம் அமைத்துக் கொடுக்கிறீர்கள்.

குறிப்பிட்ட மொட்டாக்கு நபர் குறிப்பிடும் வைத்தியர் எவ்வளவு நல்லவர் என்பதனை அவரை அணுகியவர்கள் யாவரும் அறிவர். அவர் மிதித்த இடத்துப் புல்லும் சாகாது. அமைதியாகக் கதைப்பார். காது கொடுத்துக் கேட்பார். இப்படி ஒரு மருத்துவரை நான் எங்கும் காணவில்லை. அவரைப்போய் இப்படிக் குறை சொல்கிறீர்களே.

மற்றது முக்கியமான விடயம். ஒரு மருத்துமனையில் ஒரு நோயாளிக்கு குறிப்பிட்ட ஒரு தொகையை வருடம் ஒருமுறை NHS வழங்குகிறது.உதாரணமாக ஒருவருக்கு 50 பவுண்ட் வீதம் ஒரு மருத்துவமனையில் 1000 மக்கள் பதிந்திருந்தால் வருடமொன்றுக்கு 50.000 பவுண்டினை NHS அந்த மருத்துமனைக்கு வழங்கும். அப்பணத்திலேயே வாடகை, பராமரிப்பு, ஊழியர் சம்பளம், மருத்துவருக்கான சம்பளம் ஆகியன கிடைக்கும். நீங்கள் எழுதியதைப்போல் அதிக நோயாளிகளைப் பார்வையிடுவதால் அதிக பணம் கிடைக்கும் என்றெல்லாம் இல்லை. அப்படியென்று யார் சொன்னது? உங்களுக்குத் தெரியாதது எல்லாவற்றிலும் ஏன் தலையை நுழைக்கிறீர்கள்?.

உந்த மொட்டைக் கடிதத்தையும் மொட்டைக் கடிதம் எழுதுபவர்களையும் ஹீரோவாக்குகின்ற வேலையை விடுங்கள். கம்பீரமாக நிமிர்ந்து எழுதுபவர்களுக்கு மட்டும் இடம் கொடுங்கள்.

ஒரு பேப்பர் என்றால் எங்களுக்கு உயர்ந்த அபிப்பிராயம் உள்ளது. அதைச் சிதைத்து விடாதீர்கள்.

*- மனோகர் / மோர்டன்*

# தவறுக்குத் துணை போகாதீர்கள்

சென்றவார இதழில் பொதுமருத்துவர்களைத் தாக்கி எழுதியிருந்தீர்கள். எனது கருத்து என்னவென்றால் சிலர் தங்களின் தனிப்பட்ட விரோதங்களைக் காண்பிக்கும் களமாக இங்குள்ள பத்திரிகைகளைப் பயன் படுத்துகின்றனர்.

இவ்வாறான கடிதங்களை பிரசுரிக்கும் முன்னர் அச் செய்திகளை நன்கு ஆராய்ந்து பிரசுரிக்க வேண்டும் என்பதே எனது கருத்தாகும். பத்திரிகைகள் சமுதாய மேம்பாடு மற்றும் சமுதாய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துகின்ற நோக்கில் செயற்படுபவை.

இவற்றை சில புல்லுருவிகளின் செயற்பாட்டினால் பிழையாக வழிநடத்தப்படுவது மனம் வருந்தத்தக்க செயலாகும்.

மொட்டைக் கடிதம் எழுதியவருக்கு உண்மையிலேயே அவ்வாறு நேர்ந்திருந்தால் தனது பெயரைக் குறிப்பிட்டே முறைப்பாட்டுக் கடிதமாக எழுதியிருக்கலாம். மேலும் அக்கடிதத்தைப் பார்க்கும் பொழுது எரிச்சல், பொறாமையின் வெளிப்பாடு நன்கே புலப்படுகின்றது.

இவ்வாறான உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிடுவதன் மூலம் எமது மக்கள்தான் சிரமங்களை எதிர்நோக்கப் போகின்றனர் என்பதில் ஐயம் இல்லை.

நம்மவர்கள் எத்தனைபேர் அவர்களிடம் பயன் பெற்று இந்நாட்டில் வாழ்ந்து வருகின்றனர் என்பது இங்கு குறிப்பிட வேண்டிய முக்கிய விடயமாகும்.

அத்துடன் பொது மருத்துவருக்கு ஒரு நோயாளியை பார்வையிடுவதற்கு சுகாதார அமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ள நேரம் 10 நிமிடங்களாகும். இந்த சொற்ப நேரத்தில் அவர்கள் எங்கள் குறைகளைக் கேட்டறிந்து எமக்கு சிகிச்சை அளிக்கின்றனர். உங்களுக்கு நீண்ட நேரம் வைத்தியருடன் கதைக்க வேண்டிய தேவை இருப்பின் முன்னனுமதி பெறும் பொழுது மேலதிக நேரம் வேண்டுமென்று கேட்டுப் பெற்றுக் கொள்ள முடியும்.

பார்க்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களுக்குப் பணம் வழங்கப்படுவதில்லை. எத்தனை நோயாளரைப் பார்த்தாலும் ஒரேயளவு பணமே வழங்கப்படுகின்றது. ஆகவே அவரின் கருத்து முற்றிலும் பிழையானது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

*- பயன் பெற்ற நோயாளி*

# தவறைத் திருத்துங்கள்

ஆசிரியர் அவர்கட்கு,

ஐயா, உங்கள் மொட்டைக் கடிதம் பகுதியில் எங்கள் டொக்ரர் ஐயாவைப் பற்றி வீண் பழி சுமத்தி எழுதியுள்ளீர்கள். கையெடுத்துக் கும்பிடுறன் எங்கள் டொக்ரர் பற்றி அப்படி எழுதாதையுங்கோ.

எனக்கு எப்படித்தான் வருத்தம் வந்தாலும் டொக்ரரிட்டை போய்க் காட்டின உடனை அவர் கதைக்கிற கதையிலேயே அந்த வருத்தம் மாறிவிடும்.

நீங்கள் எழுதியதை வாசித்ததும் மிகவும் கவலையாக இருந்தது. அவரின்ர இடத்திலை இருந்து நாங்கள் இப்ப துார இடத்துக்கு வந்திட்டம். டொக்ரரே சொல்லுவார் "நீங்கள் உங்களுக்கு கிட்டவா இருக்கிற ஜீபியிட்டைக் காட்டுங்கோவன்" என்று. நான் மாட்டன் என்று போட்டேன்.

"உங்களைப் பார்த்த உடனை எனக்கு அரைவாசி வருத்தம் மாறிப்போகுது. உங்களை விட்டிட்டுப் போகமாட்டன்" எண்டு போட்டன். மனிதருள் ஒரு மாணிக்கம் அவர்.

அந்தத் தெய்வத்தைப் பற்றியா இப்படி மொட்டைக் கடிதம் வந்தது. எப்படித்தான் எழுத மனம் வந்ததோ?

*- தெய்வநாயகி (நியூ)மோல்டன்)*

"காருக்கு டயர் அழகு"

புதிய பழைய டயர்கள் மாற்றிக் கொடுக்கப்படும் மற்றும் கார் சேர்விஸ் உட்பட சகல கார் திருத்த வேலைகளுக்கும் எங்களை நாடுங்கள்

- Wheel Balancing
- Wheel Alignment
- New & Second Hand Rims
- Shock Absorbers
- Batteries
- Exhaust
- Brakes
- Services
- MOT Work

British & Foreign Cars

Open 7 Days a Week
Mon - Sat 8:30am - 7pm
Sun 9:00am - 6pm

New & Part - Worn Tyres, Sold and Fitted
Punctures Repaired while you wait

368 High Street North, Eastham, E12 6PH
Tel: 0208 586 08 86, Fax: 0208 470 47 45
Mob: 07956 353 774, T Suresh@ tiscali. co.uk

Continental GOODYEAR DUNLOP PIRELLI

TYRE CHECK
Auto Spares - Accessories

தரமான சேவை! நியாமான கட்டணம்!

THURAI & CO
ACCOUNTING

Comprehensive Accounting & Tax

◆ Personal Tax
◆ Corporation Tax
◆ Value Added Tax
◆ Capital Tax
◆ Business Advice

Tel: 01865 247 109

9A, Arnold Road, Oxford, OX4 4BH

ஒரு பேப்பர் ORU PAPER

உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £25 மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name:

Address:

Postcode:

Telephone:

Email:

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £25 க்கு
"Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலையினையும்,
Oru Paper, 45'B' Crusoe Road, Mitcham,
Surrey CR4 3LJ, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# 'சோ'பா சக்தி

பாமரன்
*(pamaranpress இல்)*

போப் ஆக நினைப்பவன் புரட்சி செய்ய மாட்டான் புரட்சி செய்ய நினைப்பவன் போப் ஆக மாட்டான்

நண்பன் மகேஷ் பரிசாகக் கொடுத்திருந்த அந்த நூலை மீண்டும் ஒரு முறை எடுத்து வாசித்தேன். எத்தனை முறை வாசித்தாலும் சலிப்புத் தட்டாத சுவாரசியமான நடையும் விறுவிறுப்பான ஓட்டமும், வரிகளுக்கும் ஊடாக ஓடுகிற மானுட நேயமும் அனிதா பிரதாப்புக்கே சொந்தமானவை. அப்படி அநேகமுறை படித்த புத்தகம்தான் 'Island of Blood'.

தனது மகன் சுபின் பிறப்பிலிருந்து தொடங்கும் நூல் மெள்ள வளர்ந்து மேற்கு தொடர்ச்சி மலைகளில் பயணித்து ஈழத்தின் கானகங்களில் விரிவடைகிறது.

எண்பதுகளின் பிற்பகுதியில் அவரது ஈழம் நோக்கிய பயணமும் அதில் அவர் சந்தித்த அபாயகரமான சிக்கல்களும், பிரபாகரன் அவர்களுடனான சந்திப்புகளும் நம்மை ஆச்சர்யங்களின் உச்சத்திற்கே அழைத்துச் செல்கின்றன.

ஈழத்தில் 'அமைதி'ப்படையின் வருகைக்கு முன்னும் பின்னும் நிகழ்ந்த அவரது பயணங்கள், போராளிகளது பண்பும் கண்ணியமும் மிக்க நடவடிக்கைகள் என அவர் விவரித்துக் கொண்டே போகும்போது நாமும் அவருடனே பயணிப்பதைப் போன்ற உணர்வைக் கொடுக்கிறது.

தமிழே தகிடு தத்தமான என்னைப் போன்ற ஜென்மங்களுக்குக்கூட எளிதில் புரியக் கூடிய ஆங்கில நடை. அவரது ஆப்கானிஸ்தான் பயணமும் பதற்றம் பற்றிக் கொண்ட நாட்களில் பாபர் மசூதியைச் சுற்றிய செய்திகளும் அவரது சுறுசுறுப்பைக் கண்டு வியக்க வைக்கிறது.

பொதுவாக ஆன்மீகத்தில் நாட்டம் உள்ளவர்கள் பாவங்கள் எல்லாம் செய்து முடித்த பிறகு தான் புண்ணியத்தலங்களை நோக்கிப் பயணப்படுவார்கள். ஆனால் நம்மைப் போன்றவர்கள் எதிலும் தலைகீழ்தானே.

அப்படித்தான் 'கொரில்லா' விஷயத்திலும் நடந்தது. அனிதாபிரதாபுடைய நூலைப் படித்த பிறகுதான் ஷோபா சக்தியுடையதைப் படிக்க நேர்ந்தது.

இலக்கிய இதழ்களில் இருந்து வணிக இதழ்கள் வரைக்கும் அதற்குக் கொடுத்த சிலாகிப்புகள் என்ன? விமர்சன விழாக்கள் என்ன? போதாக் குறைக்கு எந்தப் புண்ணியவானோ நம்ம ரஜினி 'சாரு'க்கு வேறு அதைப் பரிசாகக் கொடுத்த செய்தியையும் படிக்க நேரிட்டது. (காவிரி நீர்ப்பங்கீடு குறித்து அவர் விடுத்த 'தெளிவான' அறிக்கைக்கும் இந்த நூல் வாசிப்பிற்கும் எந்தச் சம்பந்தமும் இருக்காது என நம்புவோமாக?)

யத்தத்தால் பந்தாடப்பட்டு பிரான்சுக்குப் பறக்கிற ஒருவர் அங்கு வதியிட அனுமதி கேட்டு விண்ணப்பிக்கும் விண்ணப்பத்திலிருந்து தான்பட்ட அத்தனை துயரங்களையும் இயக்கத்தின் உள்ளே உள்ள சனநாயகம் அற்ற தன்மைகளையும் மணல் திருடர்களோடு கைகோர்த்து வலம் வரும் பொறுப்பாளர்களும் பற்றி விரிவாகக் கடிதம் ஒன்று எழுத 'மணிக்கணக்கா, நாள் கணக்கா, இப்ப வருசக்கணக்கா தன்ர சேர்ட் பொக்கற்றுக்குள்ள ஒரு கடிதம் கொண்டு திரியிறான்.

முதலில் தெரிஞ்ச அறிஞ்ச ஆக்களுக்கு மட்டும்தான் தலைவருக்கு ஒரு கடிதம் எழுதி வைச்சிருக்கிறதாய்ச் சொல்லிக்கொண்டு திரிஞ்சவன், இப்பப் பார்க்கிற ஆக்கள் எல்லோருக்கும் அதைச் சொல்லித் திரியறான்'

இப்படி தன் 'தலைவருக்கு' கடிதம் எழுதி சட்டைப் பைக்குள் வைத்திருப்பவருக்கு தன் தலைவரின் அஞ்சல் முகவரியோ, ஈமெயில் முகவரியோ எதுவும் கிடைக்காமல் தேடிச் சலித்து, பரிதவித்துப் போய் வேறு ஏதும் வழி கிடைக்காமல் பிரான்சிலிருந்து பறந்து வந்து தமிழகத்தில் இறங்கி புத்தாநத்தத்தில் உள்ள கருப்பூர் சாலைக்குப் போய் 'அடையாளம்' சாதிக்கின் கதவைத் தட்ட அவர், 'இந்தக் கடுதாசி பாணியெல்லாம் வேண்டாம் புத்தகமாகவேபோட்டிடலாம். அப்பத்தான் தலைவர் பார்வைக்குப் போகும்' என சொன்னதன் விளைவே இந்த 'கொரில்லா'.

**ஆன்மீகத்தில் நாட்டம் உள்ளோர் பாவங்கள் எல்லாம் செய்து முடித்த பிறகு தான் புண்ணியத்தலங்களை நோக்கிப் பயணப்படுவார்கள். ஆனால் நம்மைப் போன்றவர்கள் எதிலும் தலைகீழ்தானே.**

ஈழத்து 'கொரில்லா' குறித்து தமிழகத்துக் 'கழுதையின்' சில சந்தேகங்கள்:

1. 'பிணத்தில்கூட கணக்குப் பார்க்கிறவர்கள்' 'மணல் திருடர்களோடு தொடர்புள்ளவர்கள்', 'உட்கட்சிசனநாயகத்திற்கே அர்த்தம் தெரியாதவர்கள்' என ஷோபாசக்தி சரமாரியாகப் 'புகழ்ந்து' தள்ளும் அந்த இயக்கமோ அல்லது அவர்களை ஆதரிப்பவர்களோ நெத்தியடியாய் பதில் சொல்லும் சனநாயகச் சூழல் தமிழகத்தில் நிலவுகிறதா?

2. இயக்கம் கொள்கை ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் சரியான திசையில்தான் செல்கிறது என்று பதில் அளித்தால் அவர்கள் தமிழகத்தின் எந்த மாவட்ட சிறையில் 'வதியிடம்' கோரி விண்ணப்பிக்க வேண்டி வரும்?

3. இந்த நூலை வரைவேற்றவர்கள், அச்சிட்டவர்கள், தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடிய ஒரு சில வணிகப் பத்திரிக்கை ஆகியோரில் ஓரிருவரைத் தவிர ஏனையோருக்கு ஈழப் போராட்டத்தில் எத்தனை பங்களிப்பு இருக்கிறது?

4. நூற்றுக்கு நூறு சதவீதம் அக்மார்க் முத்திரையோடு சிறுபிழை கூட இன்றி 'தேசிய இன விடுதலைப் போராட்டம்' உலகில் எந்த மூலையில் சாத்தியப்பட்டிருக்கிறது?

5. ரொக்கிராஜின் மனித உரிமை காக்கப்பட வேண்டும் என்கிற அதேவேளையில் அவர் விமர்சிக்கும் இயக்கத்தைச் சரியானதுதான் எனச் சொல்பவரது மனித உரிமைக்கு யார் பொறுப்பு?

6. சிறீலங்கா அரசும் 'சோ'க்களும் இந்த நூலை எந்தவிதத்தில் எதிர் கொள்வார்கள்?

7. 1970களிலேயே மலையகத்தின் சிவனு லட்சுமணன் தொடங்கி இன்றைய கணம் வரை முப்படைத் தாக்குதல்களிலும் இன்ன பிற ஆக்கிரமிப்புகளிலும் தங்கள் இன்னுயிரை மண்ணுக்கு உரமாக்கி விட்டுப் போன பல்லாயிரக்கணக்கான போராளிகளிலும் மக்களிலும் எத்தனைப் பேருக்கு இப்படி தமது வலிகளைப் புத்தகமாக்கும் பாக்கியம் வாய்த்திருக்கிறது?

இப்படிப் பல பாழாய்ப்போன கேள்விகள் மண்டைக்குள் குடைந்தபடி இருந்தாலும் ரொக்கிராஜின் தடுமாற்றங்களை மீண்டும் ஒரு முறை அசை போட்டுப் பார்க்கிறேன்.

சங்கிலியன் என்று பெயர் வைப்பதா அல்லது அராபத் என்று பெயர் வைப்பதா அல்லது நேதாஜி என்று பெயர் வைப்பதா புலொட் இயக்கத்தின் 'வங்கம் தந்த பாடம்' படித்த பிறகு 'முஜிபுர்' என்று பெயர் வைப்பதா தனிநாயகம் என்று பெயர் வைப்பதா?? என இயக்கத்தில் நுழையும்போதும் - நுழைந்த பின்னரும் அவருக்குள் ஏகப்பட்ட குழப்பங்கள். சரி எல்லாம் கிடக்கட்டும்.

தப்பித்தவறி அவர் தமிழ்கத்தின் அரசியலில் நுழைந்திருந்தால் என்ன பெயர் வைத்திருப்பார் என யோசித்துப் பார்த்தேன். வாழப்பாடி ராமமூர்த்தி??


## MARKANDAN & UDDIN SOLICITORS
Solicitors & Administrators for Oath

M Markandan LLB. A Uddin ( Hons ) MA LLB Phd-RFL

Tamil House, 720 Romford Rd, London E12 6BT

We specialise in ..
For all your needs in immigration ( All aspects upto house of lords ), Commercial & Residential Conveyencing, Employment, Civil Litigation, Consumer Problems, Last will, Power of Attorney, Spnsorship Declaration, HSMP, Workpermits

MARKANDAN & UDDIN

விவாக விண்ணப்பம்

01.02.2005 முதல் அமுலுக்கு வந்துள்ள பிரித்தானிய அரசாங்கத்தின் சட்டத்தின் பிரகாரம் இந்தநாட்டில் திருமணம் புரியவிருப்பின் நீங்கள் பிரித்தானிய உள்துறை அமைப்பின் முன் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும் மேற்படி விண்ணப்பங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் எங்கள் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

அகதி விண்ணப்பம்

14 வருட 10 வருட அல்லது 7 வருட வதிவிடதகமை விண்ணப்பங்கள் பிரஜாவுரிமை விண்ணப்பத்திற்காக ஆங்கில மற்றும் வாழ்க்கை முறை தேர்ச்சி சம்மந்தமான ஆலோசனைகள்

விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயமடைந்திருந்தால் நட்ட ஈடு கோருவது சம்பந்தமான விடையங்கள் No win no fee அடிப்படையில்

tel 020 8514 8300 / 07830 285 634 | fax 020 8514 8381
email info@msssolicitors.com
Markandan : 07956 386 576 | Uddin : 07957 455 670

Markandan & Uddin Solicitors

## The story of Best friends



Once upon a time there lived a baby tiger called Sam, a baby monkey called jumbo and a baby crocodile called Spike. They were all best friends. Sam and Jumbo lived in a jungle and Spike lived in a river near by. Sam ate his breakfast so that he could play with Jumbo and Spike and they were playing racing in the river. Sam couldn't swim because he didn't know how to swim. Then when Sam went to the finishing line, he bumped into a cave wall where he saw some brown grizzly bears. He saw two of them in the entrance and two other bears at the exit. They were sleeping. The cave was dark and spooky. Jumbo also bumped into the cave wall. He saw one of the grizzly bears moving and another one did not move at all. Then Jumbo saw Sam tiptoeing slowly inside the cave and Jumbo started to run towards Sam. Then Sam saw Jumbo next to him. Finally Spike had also bumped into the cave wall. He went inside the spooky dark cave. He saw lots of spiders and ugly small and big creatures. He saw lots of grizzly bears. It also made the cave full with spider, ugly small and big creatures and full with lots and lots of fat and thin and small and big and baby and adults and medium and brother and sister bears. Then one of the grizzly bears woke up and then Sam and Jumbo and Spike hid themselves in a steep of rocks. Then all of the grizzly bears woke up and they saw Sam's shadow ; they thought it will be a big animal bigger than them so the grizzly bear ran out of the cave; another one also saw Jumbo's shadow and that one also thought it will be a spider bigger than everything. Finally Spike's shadow came on the wall and the last one woke up and saw an animal bigger than them, and that one ran away into the jungle. When the three, dark, brown and grizzly bears crept back they realised it just was a baby tiger and a baby monkey and a baby crocodile. Sam, Jumbo and Spike were scared of those three dark brown grizzly bears. But the three dark brown grizzly bears smiled at each other and smiled at Sam, Jumbo and Spike. Then the three dark brown grizzly bears made Sam, *Jumbo and Spike laugh and then* they became friends. They decided to tell jokes. Suddenly some hunters and poachers came! The three bears knew where they had come from; so the three grizzly bears whispered "follow us". Sam, Jumbo and Spike followed the three dark grizzly bears. But actually they realized that the three dark grizzly bears were just baby grizzly. The three dark grizzly bears told their names. The first grizzly dark brown bear's name was Micky, the second grizzly dark brown bear's name was Pogo; and the last and third dark brown grizzly bear's name was Lucky. They were all boys like Sam, Jumbo and Spike. They couldn't talk and they couldn't whisper. When they walked far away and when they couldn't see where the cave was and only Sam, Jumbo and Spike were tired but the three dark grizzly bears weren't tired at all. At last they arrived at the place where the Poachers and Hunters came from and they saw a gigantic web which could nearly have fill the earth. Then a little bit later they saw big spiders coming down the web and then they had escaped. But when they where going to the jungle, behind them were a lot of big spiders catchching them But then they saw a gigantic big dark black fluffy spider in front of them;



then they saw a gigantic big bus. Sam, Jumbo, Spike, Micky, Pogo and Lucky jumped into the bus in twos. The six baby animals went into the bus and nobody was driving it; and the six animals went up the stairs; they went to the top most area in the bus and they had a rest. After a while they felt asleep and the bus stopped at a farm. Soon it was the next day and the mum's and dads were looking for the children. The children walked through the bushes and then saw there dads and mums waving at them; but then, the children saw poachers and hunters walking by the middle but the mums and dads were hiding in the bushes too and were talking; but they didn't realise the poachers and hunters were walking; All of the children showed a sign that there were poachers and hunters coming. When they were talking a baby elephant sneaked and ran to the hunters and ran to the poachers and made a loud sound. The baby elephant thought that the poachers and hunters will *fall down and sleep but then all of* the animals stopped talking to each other. The animals said to each other let's eat the poachers and hunters; and then they ate one by one standing in a line and they all lived happily ever after.

**THE END**

*By Ajanthan Jeyakumar*

*(Age: 7years)*

Newbury Park Primary School

Year 2M

## Football Jokes

Q: What part of a football pitch smells nicest?

**The scenter spot!**

Why aren't football stadiums built in outer space?

**Because there is no atmosphere!**

How did the football pitch end up as triangle?

**Somebody took a corner!**

Which England player keeps up the fuel supply?

**Paul gas coin!**

What do a footballer and a magician have in common?

**Both do hat tricks!**

Which goal keeper can jump higher than a crossbar?

**All of them, a crossbar can't jump!**

Why did the footballer hold his boot to his ear?

**Because, he liked sole music.**

## Brain Teasers

Which word, if pronounced right, is wrong, but if pronounced wrong is right?

**Ans. Wrong**

Three fat ladies stood under an umbrella but none of them got wet. Why didn't any of them get wet?

**Ans. It wasn't raining.**

A boy and a doctor were fishing. The boy is the doctor's son but the doctor *is not the boy's father. Who is the* doctor?

**Ans. mother**

Which word is the odd one out?

First Second Third Forth Fifth Sixth Seventh Eighth

**Ans. Forth, the correct spelling is fourth.**

Jim and his mum and dad went out in the rain on their holiday but only two of them got their hair wet. Why?

**Ans. His dad was completely bald!**

*Don't just stop with a smile. Laugh and make others laugh too!*

***Jasotharan Ramachandran ( 10 )***

## Proverbs

A good beginning makes a good ending

A good man is hard to find

A house divided against itself cannot stand

A house is not a home

A journey of a thousand miles begins with a single step

A leopard cannot change its spots

A little knowledge is a dangerous thing

A little of what you fancy does you good

A miss is as good as a mile

A new broom sweeps clean

A nod's as good as a wink to a blind horse

## Colouring



Last week's winner: ***Aran Pasupathy (Age 6), Leytonstone.***

Last week's runners up -

***Jobinaa (Age 5)***
*Longfield First School.*

***Esan Satkurudevan (Age 7)***
*Tolworth, Surrey*

***Iniyaal Inparajah (Age 8)***
*Toronto, Canada.*

***Anuvinthan** V* (Age 7)
*Leceister*

***Ramijah Kulan (Age 6)***
*Catford, London*

***Sevvanthi Vijayaratna(Age 5)***
*Tooting, London*

## FRUITS

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| B | P | A | P | A | Y | A | Z | X | O |
| M | A | N | G | O | A | N | S | M | R |
| E | I | N | A | C | P | V | D | U | A |
| L | H | T | N | F | M | O | E | W | N |
| O | 9 | A | D | A | S | Z | M | U | G |
| N | J | E | P | U | N | Y | U | R | E |
| R | A | E | P | J | N | A | L | E | F |
| T | K | C | L | G | R | A | P | E | S |
| H | C | A | E | P | G | H | N | S | Y |
| A | P | P | L | E | B | K | I | W | I |

PLUM
BANNANA
PEAR
GRAPES
ORANGE
APPLE
KIWI
PAPAYA
MELON
PEACH

Ishani Jeyakumar - age 7

Sutton

## Word Search

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| M | A | P | S | I | P | P | I | O | D |
| P | M | U | R | U | K | U | E | L | J |
| A | E | U | A | R | S | M | R | D | V |
| K | L | K | V | A | D | A | I | F | T |
| O | A | E | N | G | E | Q | Y | Z | A |
| D | D | S | I | U | W | S | O | H | I |
| A | D | A | B | N | J | E | U | O | P |
| C | U | R | X | T | U | K | A | R | S |
| O | P | I | C | X | T | U | K | L | M |
| R | D | V | F | T | N | G | U | F | U |

**Hidden Words:**

**Subject: Tamil Snacks**

vadai, muruku, laddu, sippi, pakoda, kesari

**Submitted by:**

***By: Manoj Kesavan (Age 8), Enfield.***

## A delightful sensation...

*It was cold, and the wind dived through the holes of my gloves.*
*My cheeks were frozen, it was -4 Centigrade.*
*My hair felt like it was glued up in to a ball in the warm hat I was wearing.*
*My lips were dry, reaching out my bitter tongue to lick it wet.*

*My stomach played a trumpet and I knew what I needed to do*
*Herds of people in one huge line*
*What on earth was happening?*
*I felt something cold and a very light, it played with my thumbs.*

*That was when it happened...*
*Suddenly a burst of happiness on a cold frosty mid morning*
*A twinkle, a shine, a glitter in my eye.*
*It was an unknown feeling*
*Something I've never felt before*

*It played musical notes on my tongue*
*And it hit the right cord every time*
*It played smoothly and it was perfect*
*My body agreed with me.*
*I had a bit of jump in my step.*
*I felt excited for no apparent reason*

*I hugged myself,*
*I felt a million dollars*
*I smiled, I grinned at people who went past me*
*I managed to jump and felt like cart wheeling, something I don't know how to do*
*My body urged me to do somersault like when sportsmen get over-zealous in celebration*

*It lifted my spirits from the deep well it was in*
*It screwed my head from looking down to looking up*
*I wore school uniform, but my true colours were those of a rainbow*
*I felt like on my head was a stripy hat*

*I could sing, I could dance to any music*
*I could play the trumpet if you gave it to me now*
*I could run to the pot of gold*
*I jump over the highest wall*

*You may find me a bit strange*
*But that is the feelings you will get*
*When you digest an original glazed Krispy Kreme doughnut*

*Cheran Gobiratnam (12 years old)*
*(who ate a Krispy Kreme doughnut for the first time the other day)*



## Join the Dots






Meera Arnold & Co.
pay roll
book keeping
company formation
45 Chandos Ave, N14 7ES, Tel: 020 8882 2333

A J ACCOUNTANCY
Auditors & Accountants
Over 25 years in public practise
Accounts Preparation, Self Assessment, VAT & PAYE Returns
An Efficient, Practical Service for small to Medium Size Companies, Partnerships & Sole Traders
Tel: 020 8778 8666
Fax: 020 8778 8999
Email: info@ajaccountancy.co.uk
Web: www.ajaccountancy.co.uk
43 Anerley Road, London SE19 2AS

PERMA
INTERNATIONAL SHIPPING LTD
உங்கள் தனிப்பட்ட பாவனைப்பொருட்கள், வாகனங்கள், வீட்டுப் பாவனைப்பொருட்கள், இயந்திர உபகரணங்கள், போன்றவற்றை தாயகத்திற்கோ பிற நாடுகளுக்கோ அனுப்ப விரும்புகிறீர்களா?
இங்கிலாந்தின் எப்பகுதியாயினும் உங்கள் பொருட்களை எம்மால் சேகரித்து பாதுகாப்புடன் வைத்திருந்து அனுப்ப முடியும் தரமான பிரத்தியேக சேவைக்கு நாடவேண்டிய இடம்
தொடர்புகளுக்கு: சிவம்
45C Crusoe Road, Mitcham, Surrey CR4 3AL
Tel: 020 8646 5222, Mobile: 07939 550397

அனைத்து தமிழ் தொலைக்காட்சி வானொலி நிகழ்ச்சிகள் யாவும் சிறப்பான தொழில் நுட்பத்துடன் பொருத்திக்கொள்ள, திருத்த வேலை சகல அறைகளிலும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்த்து ரசிக்கலாம்.
Ram: 07861 371 837 / Thas: 07885 987 857

தமிழ் பேசி தலைமுடி அலங்கரிக்கும் ஆள் உடன் தேவை!
Croydon இல் இன்றுமோர் புதிய உதயம்
FAIRCUT 3 BARBERS
Tel: 020 8684 1103
379, Mitcham Road, Croydon CR0 3HP
Opening Hours:
Mon-Thurs 10am – 7pm
Fri-Sat 10am – 8pm
Sundays 10am – 5pm

GRAND CONSTRUCTIONS
Professionally Qualified Engineers with 10 Years Experience
- Obtaining Planning Permissions & Building Control
- All Types of Consultancy & Drawings (Architectural & Structural)
- All Types of Quality Construction & Repairs
- Cost Saving Advices and Free Estimates
Contact: 07912615876 or 07886532103

மணம் குணம் சுவை நிறைந்த மலையாள உணவுக்கு...

## Sree Visakham Restaurant

SPECIALISES IN THE REAL
'KERALA - SOUTH INDIAN' CUISINE
Fully Licensed & 'Air Conditioned'.



- AWARD WINNING RESTAURANT
- CRITICALLY ACCLAIMED CHEF
- GOOD VENUE FOR PARTIES & WEDDINGS
- OUTDOOR CATERING WELCOME!
- ALL AT COMPETITVE PRICES!
- ALSO OFFERS 'LUNCH TIME SPECIALS'
- SUNDAY SET BUFFET 'THALI'S' MEALS

IF YOU WANT A MESMERISING EXPERIENCE.
IN A HEAVENLY PARADISE - IN SUNNY LONDON.
COME TO 'SREE VISAKHAM RESTAURANT',
**ONCE YOU HAVE EATEN HERE YOU ARE COOKED FOREVER!**

180 Upper Richmond Rd West, East Sheen, SW14 8AW
0208 487 1331 / 2777, www.sreevisakham.co.uk

அழையுங்கள்

# SRI LANKA

கைத் தொலைபேசி உட்பட

5p /min



உடன் அழுத்துங்கள்

**0844 55 00 020**

உங்கள் சர்வதேச இலக்கங்களைத் தொடர்ந்து

வங்கிக் கணக்கு வேண்டாம் கடன் அட்டையும் வேண்டாம்
கட்டணம் BT மூலம் விநாடிக்கு அறவிடப்படும்.

PLANET talk INSTANT

**www.planettalkinstant.com**

Terms & conditions apply. See www.planettalkinstant.com for full terms and conditions.



# மாபெரும் திறப்பு விழா

**01 December 07**

திறப்பு விழாவிற்கு உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றனர்
Selvaraja Gold House ஸ்தாபனத்தார்.

**அனைத்து விதமான ஆடைகளும் 30% முதல் 60% வீத விலை கழிவில் பெற்றுக் கொள்ள முந்திக் கொள்ளுங்கள்.**

Selvaraja Gold House இனுள் அமைந்துள்ள
S.G Fashion & Textiles இல்

மற்றும் நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு அனைத்து விதமான பட்டுப்புடவைகள், Fancy sareeகள், பட்டு வேட்டி, காட்டன் சேளி, பஞ்சாபி, காக்ராசோளி, சுடிதார் சிறுவர்களுக்கான ஆடைகள் மற்றும் அனைத்து விதமான புது டிசைன்களும் குவிக்கப்பட்டுள்ளன.

**SELVARAJA GOLD HOUSE**
**162 Mitcham Road, London SW17 9NJ**
T / F: **020 8767 3795**
M: **07825 005 269**

அகதிகள் தஞ்சம் கோரி நிராகரிக்கப்பட்ட நிலையில்
நீங்கள் தாயகம் திரும்ப விரும்புகிறீர்களா?

உடன் IOM இன் இலவச தொலைபேசியுடன்
தொடர்பு கொள்ளுங்கள்.

0800 783 2332



விமானச் சீட்டு
பயண ஒழுங்குகள்
சிறு வியாபாரம் ஆரம்பிக்க
குறுகிய கால தங்குமிட வசதி
மேலதிக பொதிக் கட்டணம்
மீளக்குடியேற பண உதவி
தொழில்சார் பயிற்சிகள்
தொழில் வாய்ப்புகள்
கல்வி
போன்ற வசதிகளை
நாம் செய்து
கொடுப்போம்.

IOM International Organization for Migration

21 Westminster Palace Gardens, Artillery Row, London SW1P 1RR
*Liverpool office*: 5th Floor, Corn Exchange, Fenwick Street, Liverpool. L2 7QL. Tel: 0151 225 0142
*Glasgow office*, 38 Queen Street, Glasgow G1 3DX. Tel: 0141 548 8116
*Bristol office*: Park House Business Centre, 10 Park Street, Bristol BS1 5HX. Tel: 0117 907 4777

www.iomlondon.org

Actions co-financed by Community Funds

IOM is an independent, international organization. It is **not** part of the UK Government. We will help you to return home only if you wish to do so.

UKTSU

UNITED KINGDOM TAMIL STUDENTS UNION
*bringing tamil students together*

Proudly Presents

# Britain's Brainiest Pillai

Deadline for the application: 29th February 2008
Competition will commence from March
Age Groups: Under 12 + 12-14

**Prizes (both age groups):**
1st prize: £150 (shopping spree with us!)
2nd prize: £75
3rd prize: £50

Certificates will be presented to all participants, plus special prizes to all Round 2 participants

Entry fee: £5

Contact and further details:

Hari: 07917404757  Prasanthy: 07950808805  Sayan: 0770272554

Application forms can be downloaded from
www.uktsu.org
bbp@uktsu.org
terms and conditions apply



LEARNA
because every child is unique

Computer Based Education Centres

ஒவ்வொரு சிறார்களும் தனித்துவம் தானே!
அவர்தம் ஆற்றலும் தனித்துவம் தானே!!

For your children to excel at school...
For them to meet tomorrow's challanges...

Give your child the Learna Advantage.
Today.

- Maths & English for KS1, KS2 & KS3
- Product of years of advanced research
- Challenging Individualised learning path
- Focus on problem solving, reading and writing
- Improve child's self-confidence and concentration skills
- Thousands of computer activities & printed worksheets
- Monthly progress tests and instant reports

·Individualised
·Interactive
·Inspiring



Let your child have the **Learna experience**.
Call us or visit us on the web.
> www.learna.com <

Learnies

Call 0845 094 0061



# A FANTASTIC OFFER

## BUY 2 MASSAGES
## GET 3RD MASSAGE ABSOLUTELY
# FREE

(Offer for a limited period only)

Herbal Ayur Massage
Centre for Pure Ayurvedic
Massage Therapy



What is on offer:

- FREE CONSULTATION WITH OUR DOCTOR
- MASSAGE BY HIGHLY QUALIFIED THERAPISTS
- BOOK EARLY TO AVOID DISAPPOINTMENT

TO MAKE AN APPOINTMENT
Call us on
01895 622336

Farnborough Centre
Farnborough Leisure Centre
Westmead, Farnborough,
Hampshire GU14 7LD
Tel: 01252 523 222

Harrow Branch:
84 Victoria Road
Ruislip Manor,
Middlesex, HA4 OAL,
Telephone: 01895 622336

Email: info@herbalayur.com
Website: www.herbalayur-massages.com

Please bring this leaflet to the store to qualify for this offer  ❖Terms and conditions apply



## Opening Soon...

Catering for all Occasions
including Weddings & Parties

Hall available for your wedding
and other private functions

# KURINJI

Sri Lankan & South Indian Restaurant

134, Hoe Street, Walthamstow, E17 4QR

Tel: 0208 521 3011

Part Of Party Service
Tel: 0208 552 9336

# JANANY
DRIVING SCHOOL

அரச அங்கீகாரம் பெற்ற பயிற்சியாளர் (DSA/ADI)




11 வருட அனுபவம் (8 Swiss & 3 London)

அனைத்து விதமான வாகனங்களுக்குரிய (Motorbike, Car, Bus & Lorry) தியரி படிப்பதற்கும்...

மிக விரைவில் (5 Day intensive course) இலகுவாக சாரதி பத்திரம் தேர்ச்சி பெறுவதற்கும் தொடர்பு கொள்ளுங்கள்...

Beste Autofahrschule im London | Bedste Køreskole i London

*Morden, Tooting, Wimbledon*
***Suthan 07904 817 539***

*Southall, Hayes*
***B.Gobu 07908 665 633***

*New Malden, Tolworth, Chessington*
***Kumar 07950 266 552***

*Lewisham*
***S.Balakrishnan 07983 336 020***

# JANANY STUDIOS

**video | photography | fcp editing**



உங்கள் வீட்டு அனைத்து விதமான மங்களகரமான வைபவங்களை சிறந்த முறையில் படமாக்கிட...

**அழையுங்கள்.**

**S. Janan**
**07904 817 539**

EXPERIENCED EDITOR
**Avid and Final Cut Pro.**

TEENSபூப்ப்ர்




# Asia threatens to knock British universities off the top table



**Alexandra Blair**
(TIMESONLINE.CO.UK)

British, French and German universities will be overtaken by those in China and India within a decade unless they improve quality and access, the European Commissioner for Education said last night.

Jan Figel told The Times that Europe's top universities would no longer dominate world rankings unless they modernised and received more funding.

The concern, echoed by vice-chancellors and employers, is not only that British universities will lose students to more attractive institutions abroad, but that business will follow them with jobs and investment.

Britain is the second most popular destination for overseas students, second to America, with Cambridge and Oxford the only European universities in the Top Ten of both the Times Higher and the Shanghai Jiao Tong indices of university world rankings.

Europe has 200 universities in the top 500, but the United States has 37 in the top 50.

"If you look at the Shanghai index, we are the strongest continent in terms of numbers and potential but we are also shifting into a secondary position in terms of quality and attractiveness," Mr Figel', 47, told The Times.

"If we don't act we will see an uptake or overtake by Chinese or Indian universities. Indian technology is seen as the third best in the world. China itself decided it wants several top universities by 2015."

Although China and India have a tiny number of universities in the Times Higher top 100, including Beijing, Tsinghua and the Indian Institutes of Technology, and none in the Shanghai top 100 index, Mr Figel' believes that Europe's supremacy in tertiary education is in imminent danger of being lost to Southeast Asia as well as the US, particularly in science.

Drummond Bone, the president of Universities UK, the umbrella group of vice-chancellors, believes that European universities must work together to create the critical mass to attract students and investment.

He said that the danger of falling down the league tables was that Europe could fall into a downward economic spiral. "Overseas students don't come to the UK or Europe, our students are attracted elsewhere and then if you've got the students going elsewhere the businesses go elsewhere."

LogicaCMG is a British company that specialises in high-tech software systems. It supports a third of the world's satellites and employs 40,000 people worldwide, including 2,500 in India. Martin Read, the group's chief executive, says that Britain cannot compete on numbers with China and India.

British universities maintain high standards and teach students to think for themselves, but he is concerned about the lack of home-grown science, technology and maths graduates.

"If we're not getting sufficient numbers of high-quality graduates, we have a problem, because we don't have a framework for business to work in," he said. "Businesses will start to relocate if they can't find them in their own country."

Not only is Europe failing to produce enough engineering, maths and technology graduates to fill the jobs, but innovation is so weak, that more than 400,000 European engineers now work in the US.

Mr Figel' said: "We have ideas – the world wide web was British, as was the CD-Rom, and the MP3 player was German. But all three were finalised and distributed around the world by the United States."

The answer, he suggests, is to attract more EU students with better quality degrees, to invest more in universities and to make EU degrees more easily transferred between countries, as proposed under the Bologna Process on schedule for 2010.

Europe spends about 1.1 per cent of GDP on higher education compared with the United States, which spends 2.7 per cent of GDP. China and India spend about 0.5 per cent and 0.37 per cent of GDP, respectively. But China is aiming to raise its investment to 4 per cent GDP in the coming years.

# Too much to do in too little time...

**Tharmila Shabanathan**
ORU PAPER

I start this issue with a few Quotes from two famous people.

"Do what you can, with what you have where you are"

*– Theodore Roosevelt*

"Success is the ability to go from one failure to another with no loss of enthusiasm"

*- Sir Winston Churchill.*

Let me tell you now that these quotes are not only handy for my article but also to your daily day to day lives. If you remember these quotes when you face a problem or when you are feeling low, believe me, it will help you to recover very quickly from such state of mind.

This week has been a very demanding and busy week for me, as exams are coming and the deadlines for course works are getting nearer. With so much work to do, the last thing I needed was to feel down. However I guess I wasn't fortunate, many events did make my self-esteem very low. That was when I came across these quotes. They helped me think and realise what should be done next and hence I have decided to write about them. Now that I've started talking about self-esteem and having the will to never give up; I feel this particular group should be recognised for the exact reasons.

The Quotes above are what the RC-boys and girls have managed to prove. They have gone from being a small dance group in France to being loved for their work by many people all over the world. For those of you who are yet to hear about the RC-boys and girls let me give a brief introduction. They are an ever so growing dance group in France which founded by Mathi and his friend. They have managed to do many stage programmes in many events to acting in French films and even done their own song videos. It's a group that have not put their fears forward but their talents and their ability to keep going at all stages. I wish them the very best of luck and hope they stop at nothing.

It's not just this group that needs recognition, there are many more that needs the push. Even us, I guess we all need a bit of push from our parents or friends to keep going and without it we will be lost.

Just remember, we can do anything if we put our mind to it, I know it's easier said than done but at least we need to try. For those of you who has exams to revise for... What are you doing still reading this article? Go and revise and I wish everyone GOOD LUCK in whatever they're doing during these few weeks.

# I'm for arranged marriages

**Flora Stanislaus**
FOR ORUPAPER

Marriage is the bond where a woman and a man are united by their parents, meaning they are no longer two different individuals, but one.

There are two different types of marriages, one is proposed by parents or relatives, and the other is love marriages. Whether our marriages are proposed or love all depends on our parents, as well as on us.

In those days, parents mostly proposed their daughters, but now sometimes girls are given a choice. I suppose it all depends if we fall in love with the right person or not. But most of us youngsters know that there is no place for the word 'LOVE' in our families, but it is all for our own good.

Looking around, it is very clear that the most successful marriages are the ones performed with parent's blessings. Those who marry without parent's acceptance are never satisfied enough in life, they search for many other unnecessary things. However, I'm not saying that married life would be perfect if done with parent's blessings. There will be problems, but that's all in our hands to sort them out. To fall in love can sometimes be very dangerous, especially if we are adamant to marry that person we think is the best for us. We will make a mistake, which we will never be able to amend.

Many teenagers tend to fall in love so early, that their life becomes so complicated. I guess no one is perfect, but perhaps if we just wait for the right moment, life wouldn't' be so difficult.

Nowadays, people are taking divorce so common. They have some kind of picture in their mind, that it's totally fine that they get divorced, if unhappy in life. However, in our culture, it is so wrong to even think about the word divorce. Marriage only happens once in life, so make sure it happens with elders' blessing. It's all about loving and caring for each other, as well as pleasing one and another. Most importantly, a good understanding between the husband and wife is essential.


**TRICO** - *The name you can trust*

**Door to Door Service**

Western province by air & Sea
Call for details Regular Shipping service
At competitive Prices to:
***Australia, Canada, Chennai, Bangalore, Cochin and Calcutta***

*Two more collection points:*
***Glasgow and South West London***
Regular weekly savings means the fastest delivery to Sri Lanka.

உங்கள் வசதிக்காக **Tooting** இல்
***Collecting point!***

*Contact* **Vimal**
Tel: **020 8672 5551**
Fax: **020 8889 5445**
Email: tricont@btclick.com

**A - Lanka**
*171 Tooting High Street,*
*London SW17*

**HOT NEWS**
Extra Receiving depot in South - London SW17
You can collect packing cases and deliver packed goods to SW17.
Save your money on transport

***Trico International Shipping Ltd.***
Unit 4,
Bittern Place,
Coburg Road,
Wood Green, London N22 6TP

# Seeking essays on Tamil women

Dr. N.Malathi
FROM VANNI

Women in the Tamil homeland have come together and are planning to publish an essay collection on Tamil Eelam women living within and outside the homeland. The collection of essays cover a wide range of subjects related to women of Tamil Eelam. They include:

Status of women within Tamil Eelam culture, problems of living under military occupation, problems facing displaced women, women living in foreign lands, and women members of the LTTE.

Initially the essays will be in Tamil but it is hoped that eventually they will also be translated and published in English. In fact some of the essays about Tamil women living in foreign cultures maybe first written in English and then translated into Tamil. The essay collection should really be seen as a historical document that could be read by everyone, especially researchers both Tamil and non-Tamil.

The selection of essays about Tamil women living in foreign cultures will cover the challenges and opportunities faced by first and second generation women living in foreign cultures. Broadly the topics envisaged are described below and assistance is sought from readers of Orupaper to provide the writers with quality information for the articles. The kinds of information sought are described below. Please send them to the to the following email address: **tamilwomen@gmail.com**

### Tamil women in a foreign culture, first and second generation

In one envisaged article on "Women in a foreign culture, first and second generation", we are looking to highlight the following:

First generation women's experiences moving to a new country (the language, culture, lifestyle)

Second generation women's experiences being raised by first generation parents

Any articles that you have come across, written it yourself and even any remarkable stories that highlight the challenges in this area that were faced by women and girls would be welcome.

### Deceived in marriage

In the second envisaged article "Deceived in marriage", we are looking at a very specific kind of deception that involves a Tamil man living abroad marrying a Tamil woman from the homeland without neither her nor her family knowing much about the man. In many cases, the Tamil woman is deceived because she only discovers the true nature of her new husband after moving to a different country and experiences isolation because of this marriage and no support system for her. There have been many tragic stories about this type of marriage.

We are not intending in this article to cover issues that are faced by women all over the world like betrayal, abuse and domestic violence. This would be dealt with in another article in this collection.

### Diaspora women's contribution to the homeland

We would like to hear about outstanding contributions of Diaspora women in the development of the Tamil Eelam nation. It can be to the freedom struggle, doing humanitarian work, or any other contribution to assist the war affected people. We are not intending to name people rather to describe the kind of contributions they have made from the many different countries where they live. In order to get this material we are indeed looking for specific projects and women who have contributed in this regard.

### Achievements of Diaspora women

We are looking for achievements by Diaspora women in all fields. In particular achievements that have been recognized by the host country would be very welcome.

# The Roots of Family



Nanthana Uthaya Sangeetha Navendren
FOR ORUPAPER

One may identify family as a group of people who are closely related by birth, marriage or adoption.

People belief that you must be related to someone in order to call them family. I personally have another perspective; I believe that family are the people who stick by you through thick and thin.

Every individual is born into a family. You have known your family from the moment you were born. You probably have many childhood memories of relatives and they have seen you grow into the person you are. But in life, you bump into others in the world, who aren't part of your family tree. Sometimes, you get to know a complete stranger and the outcome is a good friend.

Referring to my own personal experience, I have a huge family with many relatives all over the world. Those that live nearby have been a part of my life for as long as I can remember. They know everything about me, my childhood, my schooling, and my experiences.

I always knew that if I was ever going through a hard time I could always fall back on my relatives. At a time I was going through a hard time and my gut instinct was to turn and look up to my relatives for advice and support. But I found that the people I hoped to rely on turned away from me. Of course I have got to give credit for those relations that were there for me and gave me words of advice. Maybe it was denial, or disbelief, either way, many relatives whom I have known since I was a baby, didn't offer a helping hand.

In my desperate moments of despair, I was surprised to find myself relying more on my friends. These strangers that I have befriended for a few years understood my situation more than my own blood relatives. They say blood is thicker than water but I discovered that this proverb doesn't always apply to every situation. My friends have always known me in my usual smiling and joyful disposition. The day I walked in without a smile on my face, without thinking for a second, they were by my side. They listened to my troubles, gave a shoulder to cry on and looked after me.

I may have many relatives and a huge family but it is not only geographical distance between us. There is so much friction and tensions growing within the family and as a result, our family is one with many divisions, and I am positive that we are not the only ones within our community facing this issue.

It is said that you'll only appreciate what you have till it is gone. I only fully understand this saying until now. As a consequence to ridiculously petty problems, we are no longer the huge happy family that we once were. The term "family" I use when referring to my blood relatives is sometimes only just a term because I feel that the bond is now vanishing.

I wish I had the power to bring us back together, to erase the hostility and- strengthen family ties. I look back on photos within my albums and feel that something is missing.

I will always have my undying love and gratitude to all my family till my very last breath and I hope none of them will take this article to heart. I thank to the members of family and friends that have been there for me to pull me out of my lowest depths. When I think of these wonderful individuals, I realise what true family is.


## WANTED FOR IMMEDIATE APPOINTMENTS

*Western Hut Ltd is a newly formed company to establish and manage a chain of high class specialized Srilankan and Indian Bar Restaurants in London and elsewhere. The first of this chain of bar restaurants will soon be opened at 844 London Road, Thornton Heath Surrey, CR7 7PA. We are inviting applications from suitable candidates to fill the following vacancies:-*

## STORE MANAGER

*Qualifications: A management based academic degree like BA from a U.K university, Experience in Sri Lankan and Indian cultures, a good command in English and tamil .Minimum 2 years managerial experience. Duties will include managing the store, stock control,marketing and catering orders.Free food will be provided at working hours.Starting salary will be £23,000.Free food will be provided at working hours.*

## CHIEF CHEF

*Qualifications: Minimum of seven years experience in Sri Lankan and Indian dishes with basic western dishes, Minimum two years experience as a chief chef controlling more than three cooks and good working standard of English.*

## THREE COOKS – One for Indian dishes and two for Sri Lankan dishes.

*One cook for Indian Dishes should be able to make Moghul, Buriyanis, Hoppers, Kothus, indian starters and etc. Need to have at least three year experience in a restaurant.*

*Two cook for Sri Lankan Dishes must have a good experience in preparing traditional Sri Lankan dishes, short eats and sweets - should have motivation in developing Sri Lankan Dishes to suit western standard and taste. English fluency might be a contributing factor. Need to have at least three year experience in a restaurant.*

### SALARY AND WORKING CONDITIONS FOR THE CHEIF CHEF AND COOKS

*The selected candidates are expected to work at the company's first Specialized Sri Lankan and Indian Bar Restaurant at the address given above. Salaries will be according to the experience and in any event not below the National Minimum Standard Wages.Free food will be provided.The restaurant opening hours will be 12 noon to 3 p.m. and 5p.m. to 11 p.m . Weekly working hours will be 40 hours and if exceeded over-time will be paid.*

CONTACT:- **Mr T. Anandasiva**, Director Western Hut Ltd.

Mobile: **079836 12491**, Tel: **02086648568**

E-mail: western_hut@yahoo.co.uk

## Restaurant & Take away for sale

*Indian Restaurant in Epsom, Upper High Street with 40 covers, 25 years new lease, rent 30,000 including 4 bedrooms kitchen downstairs with 2 store room. Price Negotiable.*

Call **Syed Quddus 0794 394 8070** or **01372 723316**

## Tuition ...Tuition...Tuition

*Key Stage 2 to GCSE. All subjects. A/L Accountancy, Business Studies, Economics, ICT, ICT Computing, and Help with Course-work.*

**ACCA, CIMA** *11+ Maths, Verbal, Non-verbal, English.*

*Also* **'Life in the UK'** *Call* **07904 408 124 / 07873 752 086**

**020 8553 9891** *(only on Saturdays & Sundays)*

## Room to Let (Epsom)

*Room (13'5" x 10'7") available in Epsom, 15 minutes walk from Epsom Station. Single £100pw, Couple £125pw, bill inclusive (except tel). Non smoking professional preferred. Please call* **01990 332 151**.

## For Sale – Land in Kokuvil

*Ten and a Half Lachams (105 Perches) of bare land, with well at Chempian lane, Kokuvil, proximity to University, Medical College, Kokuvil Hindu college. Offers of not less than 8 Lakhs (SLR) per lacham, only considered.*

For more details: **Call Nadarajah on 07957 154 538**

## Job Vacancy Sales Marketing Executive

*Fluent Tamil, Sinhala and English speaking experienced sales marketing executive required for international food distribution company in London.*

*£26k plus benefits.*

*CV to S.Vigres*

*Niru Europe Ltd*

*11 Mitcham Ind.Est. 85 Streatham Road, Surrey, CR4 2AP*
*e-mail: sales@niru.co.uk*

*Closing date for applications: 31 January 2008.*

# தாலி பெண்ணுக்கு வேலியா சோலியா?

சாந்தி ரமேஸ் வவுனியன்
( ஒரு பேப்பருக்காக )

'ஐயோ என்னை விடுங்கோ...நான் கழட்ட மாட்டேன்... ஐயோ கடவுளே ஏனிப்பிடியொரு சம்பிரதாயத்தை வைச்சினமோ..? நனென்ன பாவம் செய்தனான்..? ஐயோ என்னை விடுங்கோ என்ர தாலியை நான் கழட்ட மாட்டேன்.....' 24.11.07 மதியப்பொழுதில் கேட்ட கதறல் ஒலி இன்னும் காதுகளில் ஒலித்தபடியே இருக்கிறது. புலத்தில் வெள்ளையர்களின் சாவு நிகழ்வுகள், தமிழரின் சாவு நிகழ்வுகள் என அவ்வப்போது கலந்து கொண்ட சமயங்களில் ஏற்படாத துயரும் தாக்கமும் 24.11.07 அன்று யேர்மனிய நகரம் ஒன்றில் நடந்த சாவு நிகழ்வில் ஏற்பட்டது.

45வயதில் தனது வாழ்வை முடித்துக் கொண்ட ஒரு கணவனின் சாவின் பின் தனது வாழ்வை நினைத்து அந்தரித்துக் கொண்டிருக்கும் ஒரு பெண்ணுக்கு நிகழ்ந்த அநீதியே இப்பத்தியில் பதிவாகிறது. நோய்வாய்ப்பட்டு 21.11.07 அன்று இறந்துபோன ஒரு தமிழ்க் கணவனின் இறப்பின் பின் சம்பிரதாயம் என்ற பெயரில் நடந்து முடிந்த கொடுமைக்கு தமிழ்ப்பண்பாடு என்று முத்திரையிட்டு எல்லாம் முடிந்த கதை இனி அதைப் பற்றி என்ன கதையென்று அங்கலாய்ப் போருக்கெல்லாம் இந்தப்பத்தி ஏற்படுத்தப் போகும் அசௌகரியத்துக்கு மன்னிக்கவும்.

ஒரு இனத்தின் அடையாளத்தை காவும் காவிகள் பெண்களாக முற்கால சினிமா முதல் இக்கால சின்னத்திரை வரையும் உரைத்து உரைத்து மூளையில் பதியப்படுத்தப்படுகிறது. புலம்பெயர்ந்து வளர்ச்சியடைந்த நாடுகளில் தங்கள் சந்ததியை பதியவிட்டிருக்கும் எம்மவர்களுக்குள்ளும் தென்னிந்திய சினிமாவும் சின்னத்திரையும் செலுத்தும் ஆதிக்கமானது புதிது புதிதாக சடங்குகளையும் அறிமுகப்படுத்துகிறது. நித்திரையால் எழும்போதே கல்கி குஷ்புவும் கோலங்கள் அபியும் இரவு என்ன செய்யப் போகிறார்கள் என்பதே பலரது மனதில் ஆறாத்துயராக உள்ளது.

சின்னத்திரையும் சினிமாவும் எங்கள் உலகமாக இருக்க உலகில் மாற்றங்கள் கண்டுபிடிப்புக்கள் சாதனைகள் என விண்வெளிவரை பெண்களின் சாதனைகள் உயர்ந்து ஓங்கியிருக்கிறது. தேசவிடுதலையுடன் தமிழீழத் தாயகத்தில் பெண்விடுதலையும் மாற்றங்களும் சத்தமில்லாமல் நடக்க அந்த மண்ணிலிருந்து புலம்பெயர்ந்தவர்களால் இன்னும் சம்பிரதாயம் சடங்கு என பெண்களை வருத்தும் நிகழ்வுகள் அதிகரித்துக் கொண்டே போகின்றன.

கணவன் இறந்தால் மனைவிக்கு வெள்ளைச் சேலை கொடுத்து சிறுவயது முதலே வைத்த பொட்டும் பூவும் பறிக்கப்பட்டு மூளியாக்கி மங்கலம் என அடையாளமிடப்படும் நிகழ்வுகளிலிருந்து பெண்ணை ஒதுக்கி வைத்தது தமிழ்ப் பண்பாடு. கணவன் பிணத்தின் முன் மனைவியின் மகிழ்ச்சிகளையெல்லாம் பறித்தெடுத்த போலிப்பண்பாட்டை விதித்து வைத்த ஆதிக்க மனப்பான்மை மிக்கவர்களால் பெண்ணாகப் பிறப்பதே பாவம் என்ற நிலையையே மீதம் வைத்தது. நூற்றாண்டுகள் கடந்த நிலையில் புலம்பெயர் நாடுகளில் அங்கங்கே மேற்படி நிகழ்வுகள் அரங்கேறிக் கொண்டிருப்பது இந்த நூற்றாண்டில் இப்படியுமா என வியக்க வைக்கிறது. இதுவெல்லாம் தமிழ்ப்பண்பாடு என கொக்கரிப்போருக்கு இந்த நாடுகளின் சட்டத்தை நாடி தண்டனை கொடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது.

அண்மையில் யேர்மனிய நகரொன்றில் நடந்த மரணம். இன்னும் 2மணித்தியாலங்களில் உனது கணவன் உயிர் பிரியப் போகிறது என மருத்துவமும் மருத்துவர்களும் சொன்னதன் பின் இருந்த நம்பிக்கைகள் இழந்து அழுதபடி பக்கத்தில் நின்று தன் துணையின் சாவைச் சந்தித்தாள் ஒருத்தி. சுவாசத்துடிப்பு ஒவ்வொன்றாய் குறையக் குறைய தந்தையின் இரு காதுகளுக்குக் கிட்ட நின்று குழந்தைகள் 'அப்பா...அப்பா....என அழ....என்ரை தெய்வமே என்னை விட்டிட்டுப் போகாதை...என அவள் கதற....அந்தச்சாவு நிகழ்ந்தேறியது. ஒரு கனவு போல அந்தச்சாவு அந்தக் குடும்பத்தை ஆறாத்துயரில் விழுத்திவிட்டிருந்தது.

ஆளுக்கு ஒரு சம்பிரதாயம் ஊருக்கு ஒரு பண்பாடு உள்ள பெருமை மிக்க இனம் நாமென்ற மார்தட்டலுடன் இறந்த மனிதனை இந்து மத முறைப்படி எரிப்பது என முடிவாகியது. எரிந்து முடியும் சாம்பலை யேர்மனியில் பாதியும் பிறந்த மண்ணில் பாதியும் சடங்கு செய்து கரைப்பது என முந்திரிக்கொட்டை முதலாளிகள் சிலர் முடிவு செய்தனர். யேர்மனிய சட்டப்படி பொதுவான தண்ணீர் ஓடும் இடங்களில் சாம்பல் கரைத்தலுக்கு அனுமதியில்லையென சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்தனர். 'உங்கினை ஓடுற ஆறுகளில நாங்கள் கரைச்சா உவங்களென்ன செய்வாங்கள்' சாம்பல் கரைப்புப்பற்றிய கதை முற்றுப்பெறாமல் முணுமுணுப்புகளுடன் நிறைகிறது. கடவுள் இல்லை மதம் இல்லை மனிதமே மேலென்று மார்தட்டுவோர் கூட இத்தகைய போலிச் சடங்குகளை அங்கீகரித்து ஒப்புதல் கொடுப்பது ஊருக்குத்தான் உபதேசம் உனக்கில்லையடி கண்ணே என்ற பதத்தை நினைவூட்டுகிறது.

22.11.07 அன்று இறந்துபோன கணவனின் படத்தைப் பார்த்து அவனால் கட்டப்பட்ட தாலியைப் போடுமாறு சம்பிரதாயச் சாக்கடைக்குள் புதைந்து கிடக்கும் பெண்ணொருத்தியால் சம்பந்தப்பட்ட பெண்ணுக்கு அறிவுறுத்தப்பட்டது. ஆயினும் அந்த வேண்டுகையை ஏற்க மறுத்து அந்தப்பெண் கதறல்தான் வீட்டில் கேட்டது. தமிழ்ப்பண்பாட்டின்படி கணவன் கட்டிய தாலியை அவன் இறந்தவுடன் கழுத்தில் மாட்டி எரியும் நாளில் கழற்ற வேண்டும், அதுதான் ஒரு பெண் தனது கணவனுக்கு விசுவாசமானவள் என்பதற்கு அடையாளம், தமிழ்ப் பண்பாட்டின்படி தாலி கட்டியவள் கட்டாயம் இதைச்செய்ய வேண்டும் இந்து சமயம் இதைத் தான் சொல்கிறது, இதைச் செய்யத் தவறினால் இறந்த கணவனின் ஆத்மா சாந்தியடையாது என பலவாறான புலம்பல்கள் புதுக்கதைகள் சொல்லப்பட்டன.

24.11.07 அன்று உறவினர் நண்பர்கள் முன்னிலையில் மரணக்கொண்டாட்டம் நடைபெற்றது. வரவிருந்த ஐயர் வராமல் முக்கியமானவர்கள் என சிலர் முன்னின்று மரணக் கொண்டாட்டம் நடந்தது. கடுங்குளிரில் மனைவி சேலையுடுப்பிக்கப்பட்டு தாலி அணிவிக்கப்பட்டு இறந்தவரின் சவப் பெட்டிக்கு முன்னால் நிறுத்தப்பட்டு சடங்கு ஆரம்பமாகியது. கதிரையில் வைக்கப்பட்ட நிழற்படத்துக்கு அரப் பெண்ணை, வாய்க்கரிசி போட்டு இறுதி நிகழ்வாக தாலிகழற்றல், மணநாளில் முதல் மனைவி கட்டிய கூறைச் சேலையை சவப்பெட்டியில் வைத்தல் ஆரம்பமாகியது. மேடைக்கு முன்னின்று ஆண்கள் சிலர் சொல்லச் சொல்ல அப்பிடிச் செய் அப்பிடிச் செய்யென அருகில் துணைநின்ற பெண்ணொருவர் ஆணையிட்டுக் கொண்டிருந்தார்.

ஐயோ நானிந்தக் கூறையை ஆசைக்குக் கட்டேல்லயே... கவனமாயெல்லோ காத்து வைச்சிருந்தனான்.....ஐயோ நானென்னண்டு இதை உங்கடை பெட்டியிலை போட....சில நிமிடம் கதறலுடன் கூறைச் சேலை சவப் பெட்டிக்கு விரிக்கப்படுகிறது. ஐயோ நான் பொட்டு வைக்காமல் வெளியில போக மாட்டேனே என்ரை சந்தோசமெல்லாத்தையும் கொண்டு போட்டியளேயப்பா....ஓயாத அந்தப் பெண்ணின் அழுகை....மரண வீட்டிற்கு வந்திருந்த வெளிநாட்டவர்களையும் அந்தக் கதறல் கலவரப்படுத்தியது.

இறுதி நிகழ்வாக தாலி கழற்றல் ஆரம்பம். ஐயோ நான் கழட்ட மாட்டேன்....என்னை விடுங்கோ....

இல்லை நீங்கள் கழற்றி வைச்சால்தான் உங்கடை கணவன்ரை ஆன்மா சாந்திபெறும் கழட்டுங்கோ...கழட்டுங்கோ....முன்னின்ற ஆண்களின் கட்டளைகள் இவை.

ஐயோ பாரப்பா எழும்பி கழட்டிக்க வேண்டாமெண்டு சொல்லப்பா...நானென்ன பாவம் செய்தனானான்....உன்னொடை வாழத்தானேயப்பா வெளிநாடு வந்தனான்.....எனக்கேனிந்த நிலை....நான் கழட்டிப்போடுறதுக்காக அவரிதை எனக்குக் கட்டேல்ல நான் போடத்தான் இதைக் கட்டினவர்....நான் கழட்டமாட்டேன் என்னை விடுங்கோ....உங்களுக்கு உங்களுக்கெண்டு வந்தாத்தான் என்ரை நிலை விளங்கும் என்னை விடுங்கொ.....ஐயோ கடவுளே ஏனிப்பிடியொரு சம்பிரதாயத்தைப் படைச்சியோ.... என்ரை சந்தோசமெல்லாம் போகுதே.....

இந்தக் கதறலைக் கேட்ட பின்னும் யாரால் தான் அமைதியாக நிற்க முடியும். சம்பந்தப்பட்டவர்களிடம் வேண்டினேன். அவவை விடுங்கோ அவவிரும்பாததை செய்ய வேண்டாம். சம்பிரதாயம் என்ற போர்வையில் ஒரு பெண்ணின் விருப்பம் நிராகரிக்கப்பட்டு கட்டாயப்படுத்தலை என்னைத் தவிர சபையில் இருந்த எந்தப் பெண்ணுக்கும் எதிர்த்துக் கேட்கும் துணிவு இல்லாமல் போய்விட்டது. கணவனை இழந்த பெண்ணுக்கு வாழ்வின் மீதான நம்பிக்கையை ஊட்டாமல் ஒவ்வொன்றாய் பறித்தெடுத்தல் எந்தச் சட்டத்தில் எழுதப்பட்ட விதி? கணவன் இறந்தால் உன் கதை சரி என்ற விதியா பெண்ணுக்கு? இதை யார் இயற்றினார்? முதலில் மனைவி இறந்தால் ஆணுக்கு இப்படியொரு சடங்கு இந்து மதத்தில் இதுவரை இயற்றப்படவில்லையா ?

சபையில் நின்ற ஒரு மனிதர் சபையில் இருந்த தன் உறவுக்காரப் பெண் ஒருவரை அழைத்து போயதைக் கழட்டிவிடுங்கோ அது கழட்டுதில்லை என அழைக்க. சினிமாக்களில் பார்த்த வில்லத்தனமான பாத்திரம் போல அந்தப் பெண் எழும்பி வந்து 'கழட்டுங்கோ என அருகில் லண்டனிலிருந்து வருகை தந்திருந்த பெண்ணுமாகச் சேர்ந்து கழட்டு கழட்டென்று கத்திக் குழறி அந்தப் பெண்ணின் தாலி கழற்றப்பட்டு சவப்பெட்டியின் மேல் போடப்படுகிறது. இரத்த உரித்துடைய ஆண்களும் பெண்களும் தாலியறுப்புக்குக் காரணமானவர்களும் சேர்ந்து ஒப்பு வைத்துக் கதறி தாலியறுத்து முடிந்தது.

இந்த அநியாயத்தை பொறுக்க முடியாத எனது கோபத்தைப் பார்த்த ஒரு பெண் சொன்னார். 'சாந்தி நாங்கள் முதலில செத்துப்போயிட வேணும் இல்லாட்டி எங்களுக்கும் உந்த நிலை தான் என்றார்'

இதென்ன விதியிது கணவனின் இறப்புடன் மனைவியின் வாழ்வை முடிப்பதா ? 'இப்பவே சாவுங்கோ இளமையிலை போனா இன்னும் நல்லமே.' சொல்லத்தான் வாய் எழுந்தது. ஆனால் அதைச் சொல்லவில்லை நான். நல்லவேளை நெருப்பிருந்தால் நெருப்புக்குள்ளும் அந்தப் பெண்ணைத் தள்ளிவிட்டிருப்பார்கள். 'கணவன் இறந்த துயர் தாளாமல் மனைவி தீயில் எரிந்தாள்' என தலைப்புச் செய்தி வந்திருக்கும்.

எல்லாம் முடிந்து சவப்பெட்டியை சவக்காலை எடுத்துச் செல்லுமுன் அந்த அதிகாரி கேட்டார். கூறைச் சேலையைக்காட்டி பிணத்தை எரிக்கும் போது இதையும் எரிக்கிறதா? எரிக்கச் சொல்லுங்கோ என்று பலர் சொன்னார்கள். தாலியை அறுத்தவர்கள் தாலியைப் பையொன்றில் திரும்பப்போட்டு பத்திரமாக வீட்டுக் கொண்டு செல்ல வைத்திருந்தார்கள். 'தாலி தங்கமென்றதாலை வீட்டுக்குக் கொண்டு போகலாம் கூறைச்சேலை தங்கத்தைவிட மலிவு ஆகையால் எரிக்கலாம்' அந்த இடத்தில் நின்றவர்களுக்குக் கேட்கும்படி சொல்லிவிட்டு கனத்த மனதோடு வெளியேறுகிறேன்.

மேற்படி சடங்குபற்றி எல்லோருமே திருப்திப்பட நானும் என்னவனும் முரண்பட்டுக் கொண்டது புதுமையுமில்லை புரட்சியுமில்லை பெண்ணியமுமில்லை. ஒரு இறப்பிற்கு விலை இன்னொரு உயிரை வதைத்தல் இல்லையென்ற மனிதாபிமான எண்ணமே தான். சடங்கென்று பெண்ணை கொடுமைப்படுத்தி மரண வீட்டில் வதைப்பது இன்னொரு திருமணத்தைப் பெண் விரும்பாமலிருப்பதற்கான முன்னோரின் உத்தி. இந்த 21ம் நூற்றாண்டிலும் இந்து மதச் சடங்கு தமிழ்ப்பண்பாடு என பம்மாத்துப் பண்ணுவது சம்பந்தப்பட்டவர்களின் அறியாமைதான்.

தாலிகழற்றலை முன்னின்று செய்வித்தவர்களும் சம்பிரதாயப் பம்மாத்துக்காரர்களும் 'சாந்தியென்றவ யார் உதைப்பற்றிக் கதைக்க ? உவவென்ன புரட்சியோ செய்யப்போறா ? உவாக்கேன் உந்தத் தேவையில்லாத வேலை? உவாடை ஊரிலை உப்பிடியில்லைப்போலை ? உவவுக்கேன் நோகுது ? நாடுநாடாக தொலைபேசியில் என்னைச் சபிப்பவர்கள் அனைவருமே சபியுங்கள். எனக்கு எந்தவித கவலையுமில்லை. இனிமேல் என் கண்முன்னால் இப்படியொரு சம்பிரதாயம் பின்பற்றப்படுமாயின் தாலி கழற்றிக்க வருவோரின் தாலிகளை நான் அறுத்துத் தருவேன்.

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள், கடலுணவு வகைகள், பசுமையான மரக்கறி வகைகள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், பாத்திர வகைகள், தமிழ், இந்தி சினிமா DVD, CD, VHS போன்றவற்றை பெறுவது மாத்திரமன்றி

கடல் கடந்து வாழ்கின்ற உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவதற்கும் நாடவேண்டிய இடம்....





MARUTHI CASH & CARRY
15 - 17 Queensbury Station Parade, Queensbury HA8 5NR
Tel: 020 8952 66 55 | 020 8381 3442 | Fax: 020 8905 7546

# கட்டுக்கோப்பான கலாசாரம்

அண்மையில் இங்கே ஒரு முழுநாள் கருத்தரங்கு நிகழ்வு. நகரசபை அனுசரணையுடன் இயங்கும் தொண்டு நிறுவன ஏற்பாட்டில் இடம் பெற்றது இது.

'சிறைக் குற்றவாளிகளை நெறிப்படுததப்பட்ட சமூக வாழ்வுக்கு இசைவாக்குதல்' என்பது ஆய்வின் கரு. குற்றச் செயல்கள் மிகுந்த இடமென்று ஒரு காலத்தில் அடையாளப் படுத்தப்பட்ட 'ரவுண்சோ' ஊரில் நடந்தது இந்தக் கருத்தரங்கு.

லண்டன் மாநகரின் 18 புற நகரங்களில் ஒன்று சட்டன். இதன் நிர்வாகப்பரப்பில் வொலிங்ரன், பேழி, குறைடன் இடையே அமைந்துள்ளது இந்த ரவுண்சோ ஊர். இரண்டாம் மகாயுத்த காலத்தில் யுத்த விமானத் தளங்களில் ஒன்று இந்த ரவுண்சோவில் அமைந்திருந்தது. அந்தக் காலத்தில் அமைக்கப்பட்ட பாதுகாப்புப் பதுங்கு குழிகள் இன்னமும் ஒரு சில வீட்டுத் தோட்டங்களில் காணப்படுகின்றது.

கருத்தரங்கு நடந்த் ஊர் பலரையும் கவர்ந்தது. எவ்வளவு பெரிய மாற்றம்?

நாளாந்தம் ஐந்து வரையான குற்றச் செயல்கள் நடந்த ஊர் இன்று ஒரு அமைதிப் பூங்கா. ஐந்து ஆண்டுத் திட்டத்தில் அரச ஏற்பாட்டில் ஏராளமான பொருட் செலவில் திட்டமிட்ட நடவடிக்கைகள் மூலம் ஏற்பட்ட மாற்றம்.

குறிப்பாக கவுண்சில் குடியிருப்புக்களை ஏராளமாகக் கொண்டிருந்த இந்த ஊர் நெறிப்படுத்தப்படாத வாழ்வியலாளர்களை இந்த இலவசக் கவுண்சில் குடியிருப்பில் கொண்டிருந்தது.

வாராந்தம் அரசாங்க வாழ்க்கைப் படி பெறுவதும் மனம் போனபடி வாழ்வதும் இவர்களில் இயல்பாக இருந்தது. போதைப்பொருள் பாவனை, குடிவெறி, விபச்சாரம், சூதாட்டம், களவு, அடிபிடி, குத்துவெட்டு என்பன மலிந்திருந்தன. குழுவாகக் கூடி குற்றச் செயல்களில் ஈடுபடுவதும் இவர்களிடம் அதிகம்.

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: ப.வை. ஜெயபாலன்

அரச புனரமைப்புத் திட்டத்தில் பழைய குடியிருப்புக்கள் இடித்துத் தள்ளப்பட்டன. புதிய வீட்டுத் திட்டங்கள் அமைக்கப்பட்டன. இனங்காணப்பட்ட குற்றச் செயலாளர்கள் வெவ்வேறு ஊர்களில் உள்ள கவுண்சில் குடியிருப்புக்கு மாற்றப்பட்டார்கள். உழைக்கும் வர்க்கத்தினரும் புதுக்குடியிருப்பில் உள்வாங்கப்பட்டார்கள். உத்தியோகத்தர் கூலித் தொழிலாளர்கள், வியாபாரிகள் குடியிருப்புக்களில் அமர்த்தப்பட்டார்கள். தரமான பாடசாலைகள், நூல் நிலையம், பெரும் சமூகநிலைய மண்டபம் என்பன உருவாக்கப்பட்டன.

**மற்றவர்கள் போல நல்லவர்களாக வாழ நாட்டம் உருவானபோது, அதற்கானவழி அமைத்துக் கொடுக்கப்பட்டபோது பூவோடு சேர்ந்து நாரும் நறுமணம் பெற்றது.**

வெள்ளையர், கறுப்பர், ஆசியர் என மாறுபட்ட வர்க்கத்தினரும், பல்லின கலாச்சாரத்தினரும் ஒருங்கிணைந்த நிலையில், இந்த ஊரில் அமைதி திரும்பியது.

அன்று நடந்த கருத்தரங்கில் சிறையால் மீண்டு சமூக வாழ்வில் தம்மை ஐக்கியப் படுத்திக் கொண்ட திருந்திய பலரும் தங்கள் கதையைச் சொன்னார்கள்.

மற்றவர்கள் போல நல்லவர்களாக வாழ நாட்டம் உருவானபோதும், அதற்கானவழி அமைத்துக் கொடுக்கப்பட்டபோதும் பூவோடு சேர்ந்து நாரும் நறுமணம் பெற்றது.

நாளாந்தம் அதிவேகத்தில் சைறன் சத்தத்தை ஒலித்துக் கொண்டு பொலிஸ் வாகனங்கள் றவுண்சேவை வட்டமிட்ட நிலை மாறி, இன்று இதன் எல்லையில் உள்ள ஆண்கள் பாடசாலையை நோக்கி பென்ஸ் கார்களிலும், பி.எம்.டபிள்யூக்களிலும் வட்டமிடுகின்றார்கள். குடியிருப்புகளில் வாடகைக்கும் கிராக்கி அதிகம்.

ரவுண்சோவின் பின்னணியில் எமது தாயக் கிராமங்கள் நினைவுக்கு வந்தன. அச்சுவேலியில் சிறுவர் சீர்திருத்தப்பள்ளி மக்கோணா, கோப்பாய் திறந்தவெளிச் சிறைச்சாலை, கோட்டைச் சிறைச்சாலை என்பன. அங்கும் கணிசமாக நிரம்பிக் கொண்டுதான் இருந்தது. ஆனால் குற்றச் செயல்கள் மிகுந்த கிராமமாக எவையும் இருக்கவில்லை.

எங்கள் ஊர்புறங்கள் சமூக வாழ்வியலில் பலதரப்பட்ட வர்க்கத்தினர், சாதி அமைப்பினைரைக் கொண்டிருந்ததே இதற்குக் காரணம் இங்கு குற்றவாளிகள் என்று குறிக்கப்பட்டோர் பயப்பிராந்தியோடு நோக்கப்பட்டவர்களாக இருக்கத்தான் செய்தார்கள். ஆனால் கால ஓட்டத்தில் ஒழுக்க நெறிகளின் பலமான கட்டுக்கோப்புக்குள் அவர்கள் தாமாகத் திருந்தினார்கள்.

'குட்டிமாமா' எல்லோருடைய அன்புக்கும் உரிய ஊரவர், நல்லவர். எல்லோருக்கும் உதவியானவர். ஆனால் ஐ.ஆர்.சி என்று முத்திரை குத்தப்பட்ட குற்றவாளியாக இருந்தவர் என்றும் தொடர்ந்து குற்றச் செயகளில் ஈடுபட்டதால் ஓடித்தப்பாமல் இருக்க குதிக் காலில் வெட்டப்பட்டவர் என்றும், அவர் ஒரு காலத்தில் பயங்கரக் குற்றவாளியாகத்தான் இருந்தவர் என்பதும் எம்மால் நம்பமுடியாது.

தன் குடும்பமும் தானுமாக வீபூதிப் பூச்சோடு கந்தசாமியார் கோவிலுக்கும் சிவன் கோவிலுக்கும் தச்சங்காட்டு வீதியில் சைக்கிலில் பயணம் செய்து கொண்டு இருப்பார்.

கொலை முயற்சி, கொள்ளை குற்றச் செயல்களுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர் பேபி அண்ணை. ஒரு சங்கக்கடை ம்னேச்சர். தீவிர தமிழரசுத் தொண்டர். அரசியல் காரணங்களுக்காக தான் பழிவாங்கப் படுவதாகத் துடித்தார்.

**'குட்டிமாமா' எல்லோருடைய அன்புக்கும் உரிய ஊரவர், நல்லவர். எல்லோருக்கும் உதவியானவர். ஆனால் ஐ.ஆர்.சி என்று முத்திரை குத்தப்பட்ட குற்றவாளியாக இருந் தவர் என்றும் தொடர்ந்து குற்றச் செயகளில் ஈடுபட்டதால் ஓடித்தப்பாமல் இருக்க குதிக் காலில் வெட்டப்பட்டவர்**

சந்தடி மிகுந்த ஒரு காலை நேரம். அந்த நாற் சந்தியில் சைக்கிலில் போய்க் கொண்டிருந்த சங்கத் தலைவனான அந்த மாஸ்ரரை நோக்கிச் சுட்டார். துப்பாக்கி முனையில் சங்கக்கடைக் காசையும் பறித்துக் கொண்டு தலைமறைவானார். பின் தானாகச் சரணடைந்தார். சிறை நன்நடத்தை காரணமாக வெளியே குறுகிய காலத்தில் வந்து மிக நல்லவராக சமூகத்தில் திகழ்ந்தார்.

ஒருவரில் ஒருவர் தங்கி இருப்பதாக, ஒரு குடும்பம் பெரியவரின் சொல்லுக்குக் கட்டுப்பட்டவர்களாக, பலதரப்பட்ட தொழில் வர்க்கத்தினரையும் கொண்டதாக எங்கள் ஊர்ச் சமூக அமைப்பு இருந்தது. இந்த நெறிப் படுத்தப்பட்ட வாழ்வு முறைக்குள் றவுண் சோக்கன் எழும்பச் சந்தர்ப்பம் இருக்கவில்லை. இந்தப் பெருமை எம் தமிழ்க் கலாச்சாரத்திற்கு உரியது தானே!


FORWARD REAL ESTATES
Sales, Lettings, Management

PROPERTY & FINANCE CONSULTANTS
"அழியாத செல்வம் மனையொன்றே"...
அதைப் பெற்றுத் தரும் உங்கள் நண்பன்....

1 LANCELOT PARADE, LANCELOT ROAD, WEMBLEY, MIDDLESEX HA0 2AJ TEL: 020 8900 9052
www.forwardrealestates.co.uk and e-mail address:mail@forwardrealestates.co.uk.


LAUNDRETE AND DAY CLEANERS £240,000 L/H
This shop boasts of large trading area and is situated in a prominent location .The takings from the shop is £14,000(approx) per month


GROCERY AND GREENGROCERS-£60,000 L/H
This current shop sales is £4,000 /week. Subject to acquiring permission, off licence, bus pass and lottery can be introduced to boost the turnover.


GROCERY /OFFLICENCE £74,950 L/H
This shop is situated in a prominent location and has a 3 bedroom flat on the first/second floor. The takings from the shop is £4,500 (approx) per week.


BUSHEY - £249,950
Forward Real Estates are pleased to offer for sale this 3 bedroom end terrace house. This property benefits from a reception, large kitchen/diner, utility area, 3 bedrooms, separate bathroom and WC, front and rear garden.
This property is offered with no onward chain.


NEWSAGENTS – FERRY HILL, £189,950 F/H
The takings from the shop is £4,000 (approx) per week. This property also benefits from a 4 bed room flat on the first floor.


GROCERY/OFFLICENCE – £75,000 L/H
This shop boasts of a large trading area. The takings from the shop is £8,000 (approx) per week. Brand new lease of 15 years is offered for this shop.


GROCERY/OFFLICENCE – ACTON £64,950 L/H
This shop is situated in a very prominent location in Acton. The takings from the shop is £6,500 (approx) per week..



ITALIAN RESTAURANT - MORDEN £359,950
Forward Real Estates are delighted to present this successfully trading Italian restaurant with exotic cocktail bar. This restaurant is situated in a prominent location and is fully licensed. It has been recently refurbished to a high standard.

INAUGURAL OFFER 0.6% ON SALES 5% ON LETTINGS
* Limited Time Only
Try us, be surprised!!!
020 8900 9052
FindaProperty.com

# இரண்டு முத்தங்கள்

P. கருணாகரமூர்த்தி
ஒரு பேப்பருக்காக

கனடிய எழுத்தாளர் அ.முத்துலிங்கம் 2007 மார்ச் மாத தீராநதியில் 'சுளுக்கெடுக்கிறவன்' என்கிற கதையை எழுதியிருக்கிறார். கதையைப் படித்து முடித்தானதும் எனக்கு Anton Chekhov இன் The Kiss கதைதான் ஞாபகத்துக்கு வந்தது.

Anton Chekhov தன் கதையை இப்படித்தான் ஆரம்பிப்பார்.

அப்போது 20மே மாலை எட்டு மணி. மேலதிக ஆயுதப் படையின் ஆறு பட்டாலியன்களும் தலைமையகத்துக்குத் திரும்பும் வழியில் Mestechki என்கிற கிராமத்தில் சற்றே இளைப்பாறிக் கொண்டிருந்தன.

சிலர் சிவில் உடையில் உலாத்திக் கொண்டிருந்தார்கள், சில அதிகாரிகள் தத்தம் துப்பாக்கிகளுக்கு எண்ணை போட்டுச் சுத்தம் செய்து கொண்டிருந்தார்கள்.

அப்போது அழகிய கழுத்துடனும் குட்டைக் கற்றை வாலுடனும் முன்னோக்கி நகர்கிறதா பக்கவாட்டில் அசைகிறதா என்று தீர்மானிக்க முடியாதபடி விசித்திர அசைவுகளுடன் வந்த வெள்ளைக் குதிரையொன்றில் அமர்ந்து வந்த தூதுவன் ஒருவன் தொப்பியைக் கழற்றி அவர்களுக்குச் 'சலூட்' வைத்துவிட்டு

'கனவான்களே ஓய்வுபெற்ற லிட்டினெண்ட் ஜெனெரல் Von Rabbeck அவர்கள் இன்று உங்களைத் தேனீர் விருந்துக்கு அழைக்கிறார். உடனே புறப்பட்டு வர எதிர்பார்ப்பு'

என்றுவிட்டுக் குதிரையின் சேணத்தை இழுக்கவும் அது மேலும் நடனம் போன்ற சில நளின அசைவுகளுடன் சுழன்று திரும்பி விட்டுப் பாய்ந்து சென்று நொடியில் தேவாலயவளவொன்றின் பின்னால் மறைந்து விடும்.

முன்னொரு தடவையும் இப்படித்தான் வேறோர் இடத்தில் ஒரு ஓய்வு பெற்ற இராணுவ ஜெனரல் அவர்களை விருந்துக்கு அழைத்து விட்டு விருந்து முடிந்த பின்னால் தன் சேமிப்பிலிருந்த கலைப் பொருட்கள், ஓவியங்கள், சிறு சிற்பங்கள், அபூர்வரகத் துப்பாக்கிகள் என்று ஒன்றும் விடாமல் காட்டி அவற்றைத்தான் எங்கெங்கே பெற்றுக்கொண்டேன் என்பதையும் தன்விரிவுரையில் சேர்த்து கொண்டு விடுவார்.

தவிரவும் பழைய டிரங் பெட்டி ஒன்றில் இருந்து பல்வேறு பிரமுகர்கள் தனக்கு அவ்வப்போது அனுப்பிய (அவருக்கு) முக்கியமான பல கடிதங்களையும் கேட்போரின் கொட்டாவிகளைக் கவனத்தில் கொள்ளாது ஒவ்வொன்றாக நடுச்சாமம் வரையில் வாசித்துக் காட்டி போரடித்தார்.

இதுவும் ஏதாவது அப்படிப்பட்ட பார்ட்டியாக இருக்குமோவென அதிகாரிகள் முதலில் பயந்தனர்.

அக்கிராமத்தில் வாழும் Von Rabbeck என்பவர் ஓர் ஓய்வுபெற்ற இராணுவ ஜெனெரல். அக்கிராமத்திலுள்ள அவரது பங்களாவில் இவர்களுக்கு ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தார். Ryabovich என்பார் ஒரு பட்டாலியனின் தலைவன். மரியாதையின் நிமித்தம் அந்த விருந்தை ஏற்றுத் தன் சக அதிகாரிகளுடன் கலந்துகொள்கிறார்.

விருந்து நடந்து கொண்டிருக்கையில் Ryabovich அப் பங்களாவிலுள்ள பல அறைகளையும் கடந்து சென்று ஒரு அறையில் பில்லியர்ட் விளையாடிக் கொண்டிருந்த தன் சகாக்களைச் சும்மா வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றார்.

அவருக்கு அது சலித்துப் போகவும் அவ்விடத்தை விட்டு இன்னொரு இணைப்பு அறையொன்றினூடாக பிரதான விருந்து மண்டபத்துக்குத் திரும்பி வந்து கொண்டிருக்கையில் மின்சாரம் நின்று இருள் சூழ்கிறது. இருட்டுக்குள் இவர் தடுமாறிக் கொண்டிருக்கையில் ஒரு பெண் வேகமாக வந்து இவரைக் கட்டி முத்தமிட்டு விட்டு மறைந்துவிடுவாள்.

எனது புரிதலில் Anton Chekhov எங்கே வெளிப்படுகிறாரென்றால்........

(1.) அவரை முத்தமிட்டது யார்? அது என்ன தினுசிலான முத்தமென்று கதையெங்கும் சொல்லவேமாட்டார்.

அதைத் தந்தது யாராக இருக்கும்? மணமானவளா குமரியா? எதற்குத்தான் எனக்குத் தந்தாள்? அவள் மயங்கிப்போக அப்படி என்னதான் இருக்கிறது என்னிடம்? இது வேறெதெற்காவது அச்சாரமா? அந்த முத்தத்துக்கான அவசரந்தான் என்ன? வேறு யாரோவென எண்ணிக் கொண்டுதான் வைத்துத் தொலைத்தாளோ? அல்லது வேறு எவருடையதாவது ஏற்பாட்டில் வேண்டுமென்றே வைக்கப்பட்ட முத்தமா?

**அட... என்னைப் பிரேமிக்க, அணைக்க, என்னைச் சந்தோஷப்படுத்த, கவனித்துக் கொள்ள, என்வாழ்வில் நுழைய விருப்பமாய் ஒரு பெண் இருக்கிறாள்.**

எப்படியோ அந்த முத்தம் அவரால் இலகுவில் மறக்கப்படுவதாயில்லை. அதை மீட்டு மீட்டுப் பார்க்கையில் தான் எதையோ சாதித்து விட்டது போலவும் இருக்கிறது அவருக்கு.

முத்தத்துக்கு முன்னும் பின்னுமான நினைவுகளையே சதா அசை போட்டபடி இருப்பது ஒருவகையிலான சுயஇன்பம் துய்ப்பதாகிறது அவருக்கு. தூக்கம் இல்லாமலாகிறார் மனுஷன்.

மெதுவாகத் தன்னை நோக்கிவந்த அந்தப் பெண்ணின் பாதணிகளின் 'டொக்' 'டொக்' சப்தம். அவர் தோளில் படர்ந்த வாசத்துடனான அவள் வெல்வெட் கைகளின் ஸ்பரிசம். பின் முகத்தில் உரசிச் சென்ற அவள் மஸ்லின் துணியின் மென்மை இதம் சுகம். இன்னும் அவர் நாசிக்குள் சுழன்றாடும் அவளின் லைலாக் லவண்டரின் மணம். பெப்பெர்மிண்ட் ட்றொப்ஸ் போல இன்னும் இன்னும் நினைவில் இனித்துக் கொண்டிருக்கும் அவள் இதழ்களின் தனித்துவமான சுவையென அவர் அனுபவித்தவை ஏற்படுத்தும் பரவசத்துடன் அவர் கண்டேயிருக்காத அவளின் இடை, கிசு கிசுப்பும் கிளர்ச்சியும் தரக்கூடிய அவள் குரல், அவள் 'சர''சர'த்த உடையில் அணிந்திருக்கக் கூடிய புறோச்சின் ஜொலிப்பு என்பன வற்றுக்கும் ஒரு கோலவுருவைக் கொடுக்க முனைகிறார். ஆனால் அந்தக் கற்பனைகளோ தீராத ஒரு கனவைப்போலும் மறைந்தும் மாறியும் வந்துவந்து அவருடன் நடனமிட்டுக் கொண்டிருக்கின்றன. ஒரு இன்ப அவஸ்த்தை அது.

**அவ்விருந்துக்கு வந்திருந்த இளஞ் சீமாட்டிகளுள் தன்னை முத்தமிட்டது எவராக இருக்கும் என்கிற ஆர்வத் தேடலில் கையிலொரு வைன்கிளாசை வைத்துக்கொண்டு தன் சுபாவத்துக்கு மாறாக விருந்து மண்டபம் நிறைந்திருக்கும் பெண்களை மோப்பம் பிடிக்க ஆரம்பிக்கிறார்.**

அவருக்கு நடனமாட வேண்டும் போலத் தோன்றுகிறது. தோட்டத்துக்கு ஓடுகிறார். அங்குள்ள செடிகள் மரங்களை அப்போதுதான் பிறந்தவர் போலப் பார்க்கிறார். அங்கு வந்த திருமதி.Von Rabbeckகிடம் அகலமாகப் புன்னகைத்து 'எனக்கு இந்த பங்களா மிகவும் பிடித்திருக்கிறது' என்பார்.

'இது இன்னும் என் அப்பாவின் பெயரில்தான் இருக்கிறது' என்றவர் 'உங்களின் பெற்றோர் இன்னும் இருக்கின்றனரா', 'எப்போது இராணுவத்தில் சேர்ந்தீர்கள்','எப்படி உடலை 'இத்தனை கட்டாக வைத்திருக்கிறீர்கள்' என்றெல்லாம் அவரையும் பதிலுக்கு விசாரித்துப் புன்னகைத்துச் செல்லவும் தான் மிக முக்கியமான அதிசயமான பிரமுகர்கள் சூழலில் இருப்பதாகப் புளகாங்கிதம் கொண்டு அங்கு அவருக்கு வழங்கப்பட்ட அனைத்து உணவு வகைகளையுமே இயந்திரத் தன்மையுடன் ஏற்றுச் சாப்பிடுவார்.

அவ்விருந்துக்கு வந்திருந்த இளஞ் சீமாட்டிகளுள் தன்னை முத்தமிட்டது எவராக இருக்கும் என்கிற ஆர்வத் தேடலில் கையிலொரு வைன்கிளாசை வைத்துக்கொண்டு தன் சுபாவத்துக்கு மாறாக விருந்து மண்டபம் நிறைந்திருக்கும் பெண்களை மோப்பம் பிடிக்க ஆரம்பிக்கிறார் Ryabovich.

அவரின் நடவடிக்கைகள் எல்லாமே அவர் இயல்பில் இல்லாமல் மெல்ல மாறிப் போகின்றன. தோள்களைத் தழுவிய வெல்வெற் கைகளின் கட்டிலிருந்து விடுபடவே மறுக்கிறது மனம்.

அட... என்னைப் பிரேமிக்க, அணைக்க, என்னைச் சந்தோஷப்படுத்த, கவனித்துக் கொள்ள, என்வாழ்வில் நுழைய விருப்பமாய் ஒரு பெண் இருக்கிறாள். அதனால் தானே முத்தமிட்டாள் அவ்வாறெல்லாம் திரும்புகின்றன அவர் எண்ணங்கள். நம்பிக்கையுடன் அவரை நோக்கி முன்னேறிய அவளது துணிச்சல் பிடித்துப் போகிறது. அந்தச் சிறு பெண்கள் குழாமில் அவள் எவளாக இருப்பாள் என்று ஒரு முடிவுக்கும் வர இயலாதிருக்கு ம்வேளை ஒரு கணம் அவள் யாரென்று தெரியாமலிருப்பதையும் விரும்புகிறது அவரது இன்னொரு மனம்.

அந்தப் புதிரில் இருக்கக் கூடிய சிலிர்ப்பே அவருக்கு இன்பமானதாகவும் வேண்டுவதாகவுமாகிறது. அவர் தவிப்பை வைத்தே கதையை வாசிக்கும் அனைவருக்கும் அம் முத்தத்தைக் கிடைக்கச் செய்தும் அதன் சக்தியைத் தொற்ற வைத்தும் விடுகிறார் Chekov. கதை அவ்வளவுதான்.

2. அநியாயத்துக்கு இப்படித் தவிக்கிறாரே Ryabovich அவர் என்ன இளைஞரா, நடு அகவையினரரா. இதுவரை பெண்ணின் வாசமே தெரியாத ஒரு பெண்ணை முத்தமிட்டே அறியாத ரஷ்யரா? ஒருவேளை அது அவருக்கு தவறுதலாகக் கிடைத்த முத்தமோ? அவைகள் பற்றிப் பூடகமாகவேனும் எவ்விடத்தும் சொல்லமாட்டார் Chekhov.

இன்னும் இராணுவத்தினரின் ஏனைய அலுவல்கள், பாசறை வாழ்வின் இயக்கங்கள், ஓயாது அவர்கள் அணிவகுத்துக் கொள்ளும் விதங்கள், மேற்கொள்ளும் பயணங்கள், வழி வழியே விரியும் இயற்கைக் காட்சிகள், அருந்தும் மதுவகைகள், படிக்கும் பத்திரிகைகள், அவர்கள் குதிரைகளின் 'அழகு குணாதிசயங்களென வேறு விஷயங்களின் வர்ணிப்புகளாகப் பின் கதை விரிந்தாலும், Ryabovich அந்த முத்தத்தின் சிலிர்ப்பிலிருந்தும் நினைவின் அருட்டல்களிலிருந்தும் விடுபட முடியாமல் தவிப்பதுதான் கதையின் இறைச்சி.

அ. முத்துலிங்கத்தின் 'சுளுக்கெடுக்கிறவன்' கதை ஒரு வளரிளம் பருவத்து விடலைப் பையனுக்கு கழுத்தில் சுளுக்கு ஏற்பட அயலூரிலிருக்கும் சுளுக்கெடுக்கும் நாட்டு வைத்தியரிடம் அவன் செல்லத் தொடங்குவதுடன் ஆரம்பமாகும். அங்கு அவ்வைத்தியருக்கு மருந்து காய்ச்ச மற்றும் தொட்டாட்டு வேலைகளில் உதவிகள் செய்து கொண்டிருக்கும் அலர் அகவைப் பெண் கனகா. 'கண்டநாள் முதலாய் காதல் பெருகுதடி' என்பதாக இவனுக்கு அவள் மேலும், அவளுக்கு இவன் மேலும் ஒருவித ஈர்ப்புண்டாகி விடுகிறது. அவ்வப்போது அவளிடம் சில நடைமுறைப் பகடிகளை எடுத்தும் விடுகிறார் இளவல்.

" உவ்வளவு மயிர் சடையாய் வைத்திருக்கிறீரே. ஈர் பேன் ஒன்றும் பிடிக்காதோ?"

"அப்ப ஒருக்கால் நீர் வந்து பார்த்து எடுத்து விடுமன்."

(தொடர்ச்சி 39ம் பக்கத்தில்)

CHARLTON
SERVICE & REPAIRS
Your local friendly sevice centre

10 Westmoor street, Charlton, London SE7 8 NQ

Call: Sothy - Theesan - Hari

Tel: 020 8465 5454
Fax: 020 8465 5454
Open: Mon-Fri 8.30am – 7.00pm
Sat 9.00am – 2.00pm

Specialists in
+ Car & Van
+ Engine
+ Brakes
+ Clutch
+ Gearbox
+ Exhaust
+ Tyres
+ Diagnosis
+ Air-conditions

We undertake maintenance services



Professional friendly service and advice
Free collection and delivery service within the local area
Free wash and vacuum cleaning
All makes & models welcomed

We can also arrange your MOT

# ஆத்தா நான் வயசுக்கு வந்திட்டேன்

**சாத்திரி**
**ஒரு பேப்பருக்காக**

அண்மையில் ஜேர்மனியில் உள்ள பெண்ணியவாதி ஒருவருடன் புலம்பெயர் தேசத்தில் பெண்களின் பிரச்சினைகள் பற்றிய விடயங்களை உரையாடிக் கொண்டிருந்த பொழுது அவர் புலத்தில் இன்று பூப்புனித நீராட்டுவிழா எண்டது ஒரு வியாதி மாதிரி பரவி அதன் உள்ளே தென்னிந்திய சினிமா மோகமும் கலந்து பெற்றோர் பெண் பிள்ளைகளை படாத பாடு படுத்துகின்றனர் என்று கவலைப்பட்டா.

அவாவிட்டை நான் சொன்னன்

"அக்கா அது எங்கடை பண்பாடு கலை கலாச்சாரம் காலம் காலமாய் எங்கடை முன்னோர்கள் செய்து வந்தது நாங்களும் அவையளை போலவே ஏன் எதுக்கு எண்டு தெரியாமல் அதுகளை ஆராயாமல் தொடர்ந்து செய்யவேணும் அப்பதான் எங்கடை இனத்துக்கும் கலாச்சாரத்துக்கும் பெருமை வேணுமெண்டால் இன்றைய தொழில் நுட்பத்தையும் புகுத்தி ஏதாவது செய்து தொடர்ந்து செய்யவேணும்"

என்று அடிச்சு சொல்லிபோட்டு இருக்க. பாரிசிலை என்ரை நண்பன் ஒருதனின்ரை மகளும் பருவமடைஞ்சிட்டுது. அவன் அதை கொண்டாட பெரிய மண்டபம் எடுத்து காட் எல்லாம் அடிச்சிட்டு எனக்கு செய்தியை சொல்ல போன டிச்சு கதைச்சு கொண்டிருக்கும்பொழுது சொன்னான்'

"டேய் பாரிசிலை ஏன் யுரோப்பிலையே ஒருத்தரும் செய்யாத அளவுக்கு விசேசமா மகளின்ரை சாமத்திய வீட்டை செய்யவேணும் எல்லாம் ஏற்பாடு செய்திட்டன் ஆனாலும் எல்லா நிகழ்ச்சியிலையும் முக்கியமானது இந்த வீடியோ ஏணெண்டால் அதைதான் விழாவுக்கு வர இயலாத ஆக்கள் மற்றது ஊரிலை உள்ளவை எல்லாருக்கும் அனுப்பிறது.

அது மட்டுமில்லை பிறகும் வீட்டுக்கு வாற ஆக்களுக்கும் போட்டுக்காட்டி பெருமையடிக்கிற ஒரு முக்கியமான சாமான் அதாலை இந்த வீடியோவிலையும் இப்ப எல்லாரும் ஒரு வித்தியாசத்தை செய்யினம். அதாலை எல்லாரும் மற்ற சாமத்திய வீடுகளிலை எடுக்காத மாதிரி அந்த வீடியோ ஆரம்பத்தை அதாவது ஓப்பினிங் வித்தியாசமா வாற மாதிரி சினிமாப்பட ரேஞ்சுக்கு ஒரு யோசனை சொல்லு" எண்டான்.

எனக்கு தலை சுத்த தொடங்கிட்டுது இதென்னடா வில்லங்கம். செய்யிறது சாமத்திய வீடு இதிலை வித்தியாசமான ஓப்பினிங் வேணுமெண்டால் நான் எங்கை போறது எண்டு யோசிக்க அவனும் விடுறமாதிரி இல்லை.

"நீதானே கதையெண்ட பேரிலை எத்தினை அறுவையளை எழுதிறாய் அதாலை கட்டாயம் நீ கொஞ்சம் யோசனை சொல்லத்தான் வேணும்" எண்டு அடம்பிடிக்க நானும்

"சரி கஸ்ரப்பட்டு யோசிக்கிறதை உனக்கு மட்டும் சொல்லாமல் எல்லாரும் பாக்கிற மாதிரி வழமை போல பேப்பரிலையே எழுதி போடுறன் அதிலை விருப்பமானதை எடுத்து உன்ரை ஓப்பினிங்கிலை போடு"

என்று சொல்லி விட்டன். இதோ உங்கள் மகள்களும் வயதுக்கு வந்துவிட்டார்களா வீடியோவில் வித்தியாசமான ஆரம்பத்துடன் படமாக்க வேண்டுமா பெரும் சிரமப்பட்டு யோசித்தில் எனக்கு தோன்றிய சில யோசனைகள்.

1) வீடியோ ஸ்ராட். பாரதிராஜாவின் பதினாறு வயதினிலே படத்தில் சிறீதேவி ஓடிவந்து ஆத்தா நான் பாசாயிட்டேன் என்று கத்தியபடி எழும்பி குதிப்பார் அப்போது அவரை அந்தரத்தில் நிறுத்தியபடி கதை வசனம் டைரக்சன் பாரதிராஜா எண்டு எழுத்து விழும் அது போலவே உங்கள் மகள் அறையில் இருந்து ஓடி வந்து உங்கள் வரவேற்பறையில் ஆத்தா நான் வயசுக்கு வந்திட்டேன் என்று கத்தியபடி எழும்பி குதிக்கும் போது அப்படியே அந்தரத்தில் அவரை நிறுத்தி விட்டு பூப்புனித நீராட்டுவிழா என்று எழுத்தோட்டம் போடலாம்.

2) இப்ப வெளிநாடுகளிலை தமிழ்கடைகாரரிட்டை சொல்லி இந்தியா தாய்லாந்து ஆகிய நாடுகளிலை இருந்து குருத்தோலை முதல் காவோலை வரை இறக்குமதி செய்யலாம்.

எனவே தென்னிந்திய கிராமங்களில் வயசுக்கு வந்த பெண்ணை பரிசம் போடுவது போல நீங்களும் தென்னோலை வரவழைத்து உங்கள் வீட்டு குளியலறையில் கூடுமாதிரி கட்டி தாய்மாமனயே விட்டு தண்ணீர் ஊற்றச் சொல்லி வீடியோ எடுக்கலாம்.

வசதியெண்டால் உங்கள் வீட்டுக்கு பக்கத்தில் ஏதாவது பூங்கா இருந்தால் அங்கும் தென்னோலையால் கூடு கட்டி செய்யலாம். இயற்கையாகவும் நல்ல ஓப்பினிங்காகவும் இருக்கும். ஆனால் உங்கள் மாநகரசபை உங்கள் மீது வழக்கு போட்டால் நான் பொறுப்பு அல்ல.

3) அடுத்ததா ஒரு சங்கர் பட ஸ்ரைலில் உங்கடை பெண்ணிற்கு மேற்கத்தைய மொடேண் உடுப்பு மினியோ மிடியோ கையில்லாத முண்டா பெனியனோ போட்டு அவாவோடை படிக்கிற ஒரு பத்து வெள்ளைக்கார பெட்டையளை பிடிச்சு பாவாடை தாவணியை போட்டு அவையை உங்கடை மகளை சுத்திவர ஆடவிட்டு பின்னணியிலை ஒரு பாடலை போட்டு ஒரு ஓப்பினிங்கை குடுக்கலாம். பின்னணி போடக்கூடிய சில பாடல்கள் சட்டென்று எனக்கு நினைவுக்கு வந்தவை

- சக்கரவள்ளி கிழங்கு மாமா சமைஞ்சது எப்படி எப்படி
- பூசைக்கேத்த பூவிது நேத்து தானே பூத்தது பூத்தது யாரதை பாத்தது
- நான் ஆளான தாமரை ரெம்ப நாளாக தூங்கலை

4) அடுத்ததாக எல்லா வீடியோ காரரரையும் போலை ஆரம்பத்திலை சோடினையளையும் இயற்கைக்காட்சியளையும் காட்டாமல் பெண்ணின் தகப்பனை காட்டலாம்.

அவர் பாரதிராஜா ஸ்ரைலில் இரண்டு கையையும் தலைக்கு மேலை தூக்கி கும்பிட்டபடி

"என் இனிய சொந்த பந்தங்களே புதிதாய் பூப்படைந்து புறப்பட்டு வருகிறாள் என் புத்திரி. அவளிற்காய் வட்டிக்கு பணமெடுத்து பெருமெடுப்பில் விழா எடுக்கிறான் இந்த தந்தை .நீங்கள் வாயார வாழ்த்தா விட்டாலும் பரவாயில்லை வயிறார சாப்பிடடதற்கு வஞ்சகம் பண்ணாமல் பொய் செக் (காசோலை) எழுதிதராமல் மெய்யாய் மொய் எழுதிப் போகும்படி கேட்டுக் கொள்கிறேன். நன்றி " எண்டு சொல்லலாம்

இப்பிடி கனக்க யோசனையள் இருக்கு ஆனால் எல்லாத்தையும் இஞ்சை எழுத ஏலாது வெட்டிப் போடுவாங்கள். எழுத்தை மட்டுமில்லை என்னையும் சேத்துத் தான்.

அதாலை மேலதிக ஆலோசனை தேவைப்படுகிற ஆக்கள் என்னோடை மின்னஞ்சலிலை தொடர்பு கொள்ளுங்கோ.

சரி கடைசியா ஒரு ஆலோசனை இந்த சாமத்தியபட்ட பிள்ளையளுக்கு வாழ்த்து சொல்லுறவை றேடியோவிலையோ இல்லாட்டி தொலைக்காட்சியிலையோ வாழ்த்து சொல்லுற ஒரு நிகழ்ச்சியை ஆரம்பிக்கலாம்.

அது மட்டுமில்லை வாழ்த்து சொல்லுறவை கொஞ்சப்பேர் ஒண்டாய் சேர்ந்து தங்கடை பெயர்களை போட்டு ஒரு வாழ்த்து நோட்டிஸ் அடிச்சு தமிழ் ஆக்கள் அதிகமாய் இருக்கிற இடங்களிலையும் ஒட்டலாம்


Residential Mortgages
&
Commercial Loans
for Business

Contact:
Sri
297 High Street North, Manor Park, London E12 6SL
Tel: 020 8475 0755
Fax: 020 8470 4755 / Mob: 07803 600 543

R.S. Finance

Mortgages
Re-Mortgages
(Raising Funds to Start Own Business and Other Needs)
Secured Loans






Loans will be arranged for lease hold and free hold businessess

Arrangements are made to meet the senior business manager from leading banks in our premises to fulfil your business loan requirements.

Commercial Loans
Shops
Petrol Stations
Restaurants
Care Homes Etc.

Whatever your needs, Regarding Your Mortgages or Commercial Loans

# மீன்பாடும் தேச நினைவுகள்


மட்டக்களப்பு நகரம்

சோமி
*Batti Central* இல்

இலங்கையின் மிகப் பழமையான கல்லூரியில் பயின்ற காலமும் மட்டக்களப்பு மண்ணில் சுற்றித் திரிந்த நாட்களும் இப்போது நிறைய நிறைய நினைவுக்கு வருகிறது.

சீமைப் பனைகள்,வாவியோரத்து இருக்கைகள், முற்றவெளி, காதல் வீதி, கிழங்குக் கடைகள் (உலகில் எங்கு தேடியும் கிடைக்காத அற்புதக் கடைகள் இது பற்றி பெரிய கட்டுரையே எழுதலாம்.)என்று பள்ளிக் காலத்தில் துள்ளித் திரிந்த இடங்களை எவன் மறப்பான்.

இந்த பதிவினைப் பார்க்கும் நிறைய பேருக்கு மட்டக்களப்பைத் தெரிந்திருக்கும் வாய்ப்பு இருகிறது.இலங்கையின் கிழக்கு பகுதியில் அல்லது தமிழீழத்தின் தென் பகுதியில் அமைந்திருக்கும் கடலும் கடல்நீரேரியும் சூழ்ந்த மீன்கள் துள்ளி விளையாடும் அழகான நகரம்.ஒரு காலத்தில் பாடித்திருந்த மீன்களின் பாட்டைக் கேட்டதாக எமது கல்லூரி முன்னாள் அதிபர் காசிநாதர் எழுதியுள்ளார்.இப்போது அந்தப் பாட்டை கேட்க முடியவில்லை.

மட்டக்களப்பை விட்டு நிறையத் தூரம் வந்த பின்னர்தான் அதன் அழகு தெரிகிறது. எனக்கு தெரிந்து இலங்கயில் உள்ள அழகான நகரங்களுக்குள் மட்டக்களப்பை முதல் வரிசையில் வைக்க முடியும்.

கவிதையில் காசி ஆனந்தன்,சினிமாவில் பாலு மகேந்திரா என்று நமக்கு நெருக்கமாக இப்போது இருபவர்கள் முதல் இலங்கை பத்திரிகையுலகில் குறிப்பிடத்தகுந்தவர்களான எஸ்.டி.சிவநாயகம், த.சிவராம் என்று தொடங்கும் நீண்ட பாரம்பரியமும் முதலில் மத்திய கல்லூரியிலும் பின்னர் புனித மிக்கேல் கல்லூரியிலும் படித்த சுவாமி விபுலானந்த அடிகள் முதல் வீ.சீ.கந்தையா, கு.ஓ.ஊ.நடராசா அடங்கலாக தமிழ்,இலக்கிய,வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட பலரை தந்த பூமி மட்டக்களப்பு.

இலங்கயின் முதல் பாடசாலைகளுள் ஒன்றாக 1814 இல் ஆரம்பிக்கபட்ட மெதடிஸ்த மத்திய கல்லூரியும் மட்டுநகரின் சிறப்புகளில் ஒன்று. அதுபோல மட்டக்களப்புக் கடற்கரைகளையும் இலகுவாய் மறந்து வட முடியுமா?

### நான் விளையாடிய கடற்கரை

இரண்டு வருடங்களுக்கு முன்பு வரை இந்த மண்ணில் எத்தனை கதைகள் எவ்வளவு விளையாட்டுக்கள். ஒவ்வொரு பௌர்ணமியிலும் கூட்டமாக நண்பர்களோடு அரட்டையடித்த, குளித்து மகிழ்ந்த கடற்கரை.

கல்லடிக் கடற்கரைக்கு போகாத மட்டுநகரவாசிகள் மிகக் குறைவு. 2004 சுனாமிப் பேரலை வருவதற்கு முன்புவரை மகிழ்விக்குமிடம் இப்போது மரணித்துப் போனவர்களின் நினைவுகளைத் சுமந்தபடி...

இலங்கையின் கிழக்குப் பகுதி கடற்கரைகளில் அழகுக்கு பஞ்சமிருக்காது. மட்டக்களப்பு நகரில் இருந்து 5 கிலோமீற்றர் தொலைவிலிருக்கும் கல்லடிக் கடற்கரை தினமும் சுறுசுறுப்பான இடம்.

அருகே இருக்கும் இலங்கை இராணுவத்தின் பாரிய முகாமைத் தவிர இந்த கடற்கரைக்கு வேறு தொல்லைகள் எதுவும் இல்லை.

மட்டக்களப்பில் இராணுவம் பயிற்சி எடுக்கும் பிரதான முகாம் இங்குதான் உள்ளது. ஒவ்வொரு நாளும் பல மணி நேரம் கடலை நோக்கி அவர்கள் சுடுகிற சத்தம் காதடைக்க வைக்கும். இதனால்தான் என்னவோ கடலுக்கு கோபம் வந்து ஏராளமான இராணுவத்தினரையும் சேர்த்து 2004 டிசம்பர் 26ல் பலி வாங்கியிருகிறது.

இந்த இராணுவ முகாமில்தான் 90களிலும் அதற்கும் முன்பும் ஏராளமான தமிழ் போராளிகள் சிறை வைக்கப்பட்டிருந்தார்கள் பல இளைஞர்கள் கொலை செய்யப் பட்டதும் இந்த முகாமில் வைத்துத்தான்.

மட்டக்களப்பு முகத்துவாரத்தில் இருந்து தொடங்கும் நீண்டகடற்கரை பொத்துவில் வரை நீண்டு செல்கிறது. இந்த நீண்ட பகுதியின் மிக அழகான மக்கள் இளைப்பாறும் கடற்கரைப் பகுதியே கல்லடி கடற்கரை

இந்த கடற்கரையில் ஒரு மாதா கோயில் இருந்தது செவ்வாய்க்கிழமையிலும் ஞாயிற்றுக் கிழமையிலும் இங்கு மெழுகுவர்த்தி ஏற்றி வழிபாடு நடத்தப்படும். நாம கண்டிப்பா ஞாயிற்றுகிழமை போவம் அப்பதான் நிறய் கூட்டம் வரும். (நிறையப் பொம்பிளப் பிள்ளையளும் வரும்...ஹ்ற...ஹ்ற..) மறுகா அங்க நாவலடி ரோட்டில இருகிற கிழங்கு கடையில் கிழங்கு வாங்கித்து கடற்கரையில இரிந்தமெண்டா ஆமிகாரன் வீட்ட போக சொல்லும் வரைக்கும் அங்கதான் கிடப்பம். (அப்பப்ப மட்டக்களப்பு தமிழ் சொல்லுறன் முழுதையும் பேச்சுவழக்கில எழுதினா நிறயப் பேருக்கு புரியாது.)

மட்டக்களப்பு கிழங்கும் பாபத்தும் பிரபல்யமான மாலை நேர சிற்றூண்டிகள் இன்னுமோரு பதிவில் அவற்றைப் பற்றி விபரமா சொல்லுறன்.

பீர் போத்தல்கள் சகிதம் நம்மட பெடியளெல்லாம் கடல்ல குளிப்பாங்கள்(நான் அப்ப குடிக்கிறதுக்கு எதிர். நம்புங்க).

காலையில போனா மத்தியானத்துக்கு மேலையும் அங்க இருந்து நிறைய விளையாடுவம். கடற்கரைத் தென்னமரங்களில இளநீர் புடுங்கிக் குடிப்பம், கடற்கரைக் கால் பந்தாட்டம், மல்யுத்தம், கிறிகெற், கபடி இப்படி விளையாடுறதும் காத்தான்குடியில வாங்கி வந்த சமுசா, இறச்சிப் பொரியல், கிழங்குப் பொரியல், பாபத் எண்டு சாப்பிடுறது எந்த ஊரிலையும் கிடைக்காதவொன்று.

## நாவலடி ரோட்டில இருகிற கிழங்கு கடையில் கிழங்கு வாங்கித்து கடற்கரையில இரிந்தமெண்டா ஆமிகாரன் வீட்ட போக சொல்லும் வரைக்கும் அங்கதான் கிடப்பம்

ஒருமுறை நாங்கள் செய்யுறது போல கடற்கரையில ஒரு மகளிர் பாடசாலைப் பிள்ளையளும் பியரடித்ததாக கதை வந்தது அதுக்கு பிறகு பெடியங்கள் அந்த பாடசாலைப் பிள்ளையள் எல்லாரையும் இதச் சொல்லிபகிடிபண்ணுவாங்கள். இது ஒரு காலாசர சீரழிவெண்டு நாங்களும் பட்டிமன்றத்தில பேசினாங்கள். பத்திரிகையிலையும் இப்பிடியொரு விசயம் நடந்ததாய் கிசுகிசு வில போட்டவனுகள்.

இப்ப இதை நினைக்க வெட்கமாய் எனக்கு இருக்கு எவ்வளவு மோசமான ஆண் மனோ நிலையில் நாங்கள் வளர்க்கப் பட்டிருகிறோம். என்னைப் போல் அனுபவத்தை அங்கிருந்த ஒரு பெண்ணால் எழுத முடியுமா?

கடற்கரையில் பியரடிப்பதும் பின்னர் குளிப்பதும் தவறானது. அது யாராக இருந்தாலும்.

அந்தக் கடற்கரையில் எனக்கு தெரிந்து ஆறேழு பேர் கடலில் குளிக்கும் போது இறந்திருப்பார்கள். முழுநிலா வரும் நாட்களில் எக்கச்சக்க கூட்டம் வரும் நாங்களும் கண்டிப்பாக போவம்.

ஆண்கள் பாடசாலயில் படிக்கும் எங்களுக்கு சக மாணவிகளைப் பார்த்து சிரிப்பதற்காவது கிடைக்கும் அரிய சந்தர்ப்பம்.இந்த நேரத்தில் குடும்பம் குடும்பமாக வருவார்கள். நண்பர்களுக்கு காதலியைக் காட்டுவதற்கும் இந்த பொழுதே உதவியது.பெரும்பாலும் பெண்களும் இப்படியே செய்தார்கள். (சோமிட மாமாவு குடும்பமாய் வாரார்டோய். நண்பர்கள் கத்தியது நினைவிருகிறது.)

முதல் ஒருகாலத்தில் பிரச்சனை பெரிசா இல்லாத போது இந்த கடற்கரையில் சிறிய உணவகம் தங்கும் விடுதி ஒன்று இருந்த தெண்டும் அப்பவெல்லாம் அடிக்கடி காணிவெல் நடக்குமெண்டும் பெரியாக்கள் சொல்லுவாங்கள். நான் அறிஞ்சு ஆமி காட்டுற காணிவெல்லத்தவிர வேறயேதும் நடக்கையில்ல

## கடற்கரையில நிக்கக்குள்ள யார் எப்ப எவன கடத்துவானெண்டு தெரியா

ஆனால் அந்த கடற்கரைக்கு ஏதோ ஒரு சிறப்பு இருந்தது. மட்டக்களப்பில் நடக்கும் அம்மன் சடங்குகளின் இறுதியில் உருவாடும் தெய்வங்களும், பூசாரிகளும், பொது மக்களும் இங்கு வந்து பூசை நடத்துவது வழமை. தாமரைக்கேணி மாரியம்மன் திருவிழரவின் போது பல்முறை நான் இப்படிப் போயிருகிறேன்.

இது தவிர சில ஆகமக் கோவில் சாமிகள் தீர்த்தத் திருவிழாவின் போது இங்கு தீர்த்தமாடுவதுமுண்டு. இங்கு ஒரு பகுதியில் மீன்பிடிப்பார்கள் இந்தப் பகுதி முழுவதிலும் மீன்வாடிகளைப் (மீனவர் ஓலுவெடுக்கும் இடம்) பார்க்கலாம்.

ஏலேலோ பாட்டு பாடிய படியே கரை வலை போட்டு இழுத்து வருவார்கள் எக்கச்சக்க மீன் படும் அப்ப பக்கத்தில நிண்டா நல்ல மலிவா மீன் வங்கலாம். எனக்கு பிடித்த மான மாப்பிளைக்கீரி மீன் சில காலங்களில் அதிகம் பிடிபடும் (இதை தமிழகத்தில் மத்தி மீன் என்கிறார்கள்.

மட்டக்களப்பு நகரத்தில் இருந்து மூன்று சோதனைச் சாவடிகளைக் கடந்து கடற்கரைக்கு சென்றுவிட்டு வீடு திரும்புவது என்பது ஒரு சுகமான அனுபவம்.

இன்று தொடர்பில் கூட இல்லாத என் நண்பர்கள் பலருக்கும் இன்னமும் இந்த நினைவுகள் இருக்கலாம்.

இன்று . . .

"கடற்கரைக்கு முதல் நாம போன போல இப்ப போறல்லடா அதுக்கு சுனாமி மட்டும் காரணமில்ல அங்க நிக்கக்குள்ள யார் எப்ப எவன கடத்துவானெண்டு தெரியா இப்ப வேலைக்கு போயித்து வந்தா வீட்டுக்குள்ள கிடக்குறதான். எப்பயாவது கடற்கரை எப்பிடியிருகெண்டு போயி பாப்பம். கிழங்குக் கடையளும் குறைஞ்சு போயித்து"

என்று எனது நண்பன் நான் போனபோது சொன்னான்.

ம்......பெருமூச்சு விட்டபடியே மீண்டும் பழைய நினைவுகளை அசைபோட்டபடி கனவுகளுக்காக தூங்குவதைத் தவிர என்னால் என்ன செய்ய முடியும்.

Tamsons
Accountancy & Tax Consultancy Ltd.



* Accountancy & Auditing
* Business Start up Advice
* Business Plans & Cash Flow Forecasts
* Personal tax Affairs & Self Assesment
* Company Tax Affairs & Company Tax Return (CT600)
* Preparing VAT, Payroll for the Sole Trader
* Partnership & Limited Companies

Company Formation *
Attending VAT & PAYE visits *
CIS Voucher & Construction *
Industry Services *
Tax Investigations *
Solicitors Accounts *
& Accounts Reports *

65, Southlands Road, Bromley, Kent BR2 9QR
Tel: 020 8313 0800

# கனவு மெய்ப்பட வேண்டும்

பாகம் 40

தமிழீழ தேசத்தின் தேசிய நினைவெழுச்சி வாரமும் அதை நிறைவு செய்யும் வகையிலான தேசியத் தலைவரின் மாவீரர் நினைவு தின உரையுடனான மாவீரர் நாளும் மக்களின் முழு அளவிலான உணர்வு பூர்வமான பங்களிப்போடு சென்ற வாரம் அனுஷ்டிக்கப்பட்டு நிறைவெய்தியிருக்கிறது.

கல்வி கலாச்சாரம், பொருளாதாரம்,பாதுகாப்பு ஆகிய மூன்று முக்கிய துறைகளுக்கும் இரண்டிரண்டு நாட்களாக ஒதுக்கி ஏழாவது நாளை மாவீரர்களை நினைவுகூறும் நாளாக தேசியத் தலைவரின் உரையுடன் நிறைவு செய்வது தமிழீழத்தின் எதிர்கால வளர்ச்சிப் பணிகளை திட்டமிட்டு அடுத்த வருடம் வரை கொண்டு செல்ல உகந்த மைல் கற்களைப் போடும் நடவடிக்கையாக அமையுமென்று எனது சிற்றறிவுக்குப் படுகின்றது.

நவராத்திரியையும் விஜய தசமியையும் நாம் கொண்டாடுகிறோம். அவ்வாறே நமது ஈழத் தாயையும் பராசக்தியின் வடிவில் தேசிய நினைவெழுச்சி வாரத்தில் சேவிப்பதில் தவறில்லை. நாட்டின் எதிர்கால அபிவிருத்தி சார்ந்த முயற்சிகளைத் திட்டமிடுவதற்கும் செயற்படுத்துவதற்கும் பரவலான பங்களிப்பு ஏற்படவும் இது வழிவகுக்கும்.

மாவீரர் நினைவுப் பணிமன்றங்களினூடாக வளர்ச்சித் திட்டங்களை முன்னெடுக்கவும் மாநாடுகளையும் நினைவுப் பேருரைகளையும் நடத்தவும் ஏற்ற சிறந்த களமாக தேசிய நினைவெழுச்சி வார நிகழ்வுகள் அமையும்போது தமிழீழ புத்திஜீவிதத்தின் தூர நோக்கோடு கூடிய செயற்றிறன் பெரும் பயன்களைப் பெற்றுத்தரும். தமிழ்த் தேசியத்தின் அவசியத்தைச் சரிவரப் புரிந்து கொள்ளாத அல்லது தவறாகப் புரிந்துகொண்டுள்ள அனைத்துத் தரப்பினரையும், அதற்கும் மேலாய் தேசிய உணர்வே இல்லாதவர்களையும்கூட மேற்குறித்த வகையில் மாவீரர் எழுச்சி வாரத்தைக் கொண்டாடுவதன் மூலம் ஓரணியில் ஒன்றுபடுத்தி ஈழதேசத்தின் அபிவிருத்தியிலும் அதற்கான எதிர்காலக் கட்டுமானப் பணிகளிலும் வழிப்படுத்த முடியும் என்னும் ஓர் சிறு கனவோடும் அது மெய்ப்பட வேண்டுமென்னும் நினைவோடும் எக்ஸெல் மண்டபத்தை விட்டு வெளியேறினேன்.

## அலசுவாரம்

அலசுபவர்: **மட்டைக்கிளப்பான்**

சமீபத்தில் புதுவைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற பாரதி-125 சர்வதேச மாநாட்டில் ஒரு பேராளராகப் பங்குபற்றியபோது அங்கு பேசிய காந்தி காமராஜ் இயக்கத் தலைவர் திருகுமரி அனந்தன் அவர்கள் பாரதமாதாவுக்கு ஒருகோயில் கட்ட வேண்டுமென்பது பாரதியின் கனவென்றும், அதைச் செயல்படுத்த அனைவரும் முன்வரவேண்டுமென்றும் அழைப்பு விடுத்தார். பலரும் தமது ஆதரவைத் தெரிவித்தனர்.

எனது உரையின்போது 'பூத வடிவினளான (பஞ்சபூதம்) பாரதமாதாவுக்குக் கோயில் கட்டும்போது நாத வடிவினளான தமிழையும் மறந்து விடாதீர்கள் தமிழன்னைக்கும் ஒரு கோயில் கட்டுங்கள், புலம்பெயர்ந்த தமிழர்கள் அதை மிகவும் ஆதரிப்பார்கள்' என்று வேண்டினேன்.

தமிழன்னைக்கு மட்டுமன்றி எமது அன்னை மண்ணாகிய ஈழத்தாய்க்கும் ஆலயம் அமைக்க வேண்டிய காலம் மிக விரைவில் தோன்றட்டும்.

இங்கு தினசரிப் பத்திரிகைகளை வாசிக்கும் போது வினோதமாயிருக்கிறது. சன், மிறர், மெயில், எக்ஸ்பிரஸ் போன்ற பத்திரிகைகளில் எப்போது பார்த்தாலும் போர்த்துக்கலில் காணாமற்போன குழந்தை மடிலீனைப் பற்றிய செய்திகளே வந்து கொண்டிருந்தன.

குழந்தையின் தாய் தந்தையர் அதனை விற்றுவிட்டுக் கதையளக்கிறார்கள் என்பதிலிருந்து குழந்தையை அவர்கள் தூங்கச் செய்ய மருந்தைக் கொடுத்ததால் அது ஓவர் டோஸாகி குழந்தை செத்துப் போய்விட்டது, சடலத்தை எங்கோ மறைத்து விட்டார்கள், அவர்கள் மனைவியரை மாற்றும் பாலியல் கேளிக்கையில் ஈடுபட்டதால் குற்றத்தை நண்பர்கள் எல்லோரும் சேர்ந்து மறைக்கிறார்கள் என்பதுவரை எல்லா வகையான புதுப்புதுக் காரணங்களும் கற்பிக்கப்பட்டு குழந்தையின் பெற்றோர்மீது குற்றம் சுமத்தப்படுகின்றது.

பத்திரிகைக்காரன் தனது கற்பனைகளை அவிழ்த்து விடுவதற்காக போத்துக்கல் போலீஸாரைத் துணைக்கு வைத்துக் கொள்கிறான். ஆனால் சமீபத்தில் ஒரு மாற்றம்.

சூடானில் ஒரு பிரிட்டிஷ் பெண் கரடிப் பொம்மைக்கு முகம்மது என்று பெயர் வைக்கப் போய் வசமாக மாட்டிக்கொண்டதுதான் அந்தச் செய்தி. ஏற்கனவே ரெடி என்று பெயர்கொண்ட அந்தப் பொம்மைக்கு மேலதிகமாக ஏன் அந்த மனுசி பெயர் வைக்க வெளிக்கிட்டதோ தெரியவில்லை. அரபியரல்லாத ஆனால் அரபு மொழி பேசும் கறுப்பு இன முஸ்லிம்கள் வாழும் சூடானில் பலபேர் வாளைத் தூக்கிக் கொண்டு அந்தப் பெண்ணைக் கொல்ல வேண்டுமென்று அலைகிறார்களாம். இவற்றையெல்லாம் வாசிக்கும்போது ஊர் ஞாபகம் வருகிறது.

ஊர்ச் சைவ மகா சபையார் அந்தக் காலத்தில் எங்களையெல்லாம் கூப்பிட்டு வைத்துதிருஞானசம்பந்தர் ஞானப்பாலுண்டது தொடக்கம் சிறுத்தொண்டர் பிள்ளைக்கறி சமைத்துச் சிவனடியாருக்குப் படைத்ததுவரை சொல்லித் தருவார்கள். நாங்கள் கொட்டாவி விட்டுவிட்டுக் கேட்டுக்கொண்டிருப்போம். எல்லாம் முடிந்து வெளியே வந்தால் கும்மாளம்தான். பெடியள் பாட்டியற்றுவார்கள் அதிலொன்றைச் சாம்பிளுக்குத் தருகிறேன்.

'திருஞானசம்பந்தமூர்த்தி ஆமா! – அந்தக்
காரைக்கால் அம்மையாரைச் சுவரோட
சாத்தி
விட்டாராம் கன்னத்தைப் பொத்தி – அவ
கயிலாயம் போனாவாம் ஓ வெண்டு கத்தி
சிகுஜிங்கா ஜிகுஜிங்கா சிங்கா ?– அந்தச்
சிவனாரின் தலையில ஜு போறா கங்கா'

என்று போகிறது அந்தப் பாடல்.

**நவராத்திரியையும் விஜய தசமியையும் கொண்டாடுவதைப் போல நமது ஈழத் தாயையும் பராசக்தியின் வடிவில் தேசிய நினைவெழுச்சி வாரத்தில் சேவிப்பதில் தவறில்லை**

வில்லுப்பாட்டுப் பாடுவதுபோல் பாடப்படும் இத்தகைய கேலித்தனமான பாடல்களெல்லாம் நம்மூரில் இளைஞர்கள் மத்தியில் அதுவும் குறிப்பாக பல்கலைக் கழக மட்டத்தில் பிரபலம்.

ஆனால் அதற்காக சைவப் பெருநெறி காட்டிய அத்தகைய ஆன்றோர்களை இப்படியெல்லாம் கேலிசெய்யலாமா என்று யாரும் எமக்கெதிராய் வாளைத் தூக்கியதாக ஞாபகமில்லை.

நம்மிடையேயுள்ள தாராள மனப்பான்மை, நகைச்சுவை உணர்வு போன்றவற்றால் நாம் நமது சமயத்தைக்கூட யாரும் கேலிசெய்தாலும் சிரித்துவிட்டுப் போய்விடுகிறோம்.

ஏன் நமது கவி காளமேகம் போன்ற பண்டைய புலவர்கள்கூட இறைவனைக் கேலி செய்தும் நிந்தைசெய்தும் பாடியிருக்கிறார்கள். வஞ்சப்புகழ்ச்சியணி, நிந்தாஸ்துதி என்றெல்லாம் அவற்றைக் கூறுவார்கள்.

மதம் அபின்போன்றது என்று கால்மாக்ஸ் சொன்னார். ஆனால் தமிழர்களிடத்தில் அதிலும் குறிப்பாக ஈழத்தமிழர்களிடத்தில் இந்த மூடத்தனங்கள் அதிகமில்லை. நாம் மிலெனியத்திற்கேற்ற சமுதாயம் என்று நம்மைப் பற்றிப் பெருமைப்படலாம்.

*தொடருவம்*


# MARKANDAN & CO
## SOLICITORS & ESTATE AGENTS

**We also Specialise in....**

- ஒப்பந்த தகராறுகள்
- நுகர்வோர் பிரச்சினைகள்
- மரண சாசனம் உறுதி தயாரித்தல்
- **Bankruptcy Problems**
- மதுபான அனுமதிகள்
- கட்டட அனுமதிகள்
- **Cafe** அனுமதிகள்
- **House / Flat**
- **Purchase or Sale**
- **Remortgages**
- **Right to Buy**
- **Highly skilled migration**
- **Power of Attorney**
- **Sponsorship for UK Visas**
- **Work Permit application**
- **Civil Litigation**

**No Win – No Fee**

விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயம் அடைந்திருந்தால் நட்டஈடு கோருவது சம்பந்தமான விடயங்கள் அடிப்படையில்.

01.02.2005 முதல் அமுலுக்கு வந்துள்ள பிரித்தானிய அரசாங்கத்தின் சட்டத்தின் பிரகாரம் இந்நாட்டில் திருமணம் புரியவிருப்பின் நீங்கள் பிரித்தானிய உள்துறை அமைச்சின் முன் அனுமதி (Home Office Clearance) பெற்றிருத்தல் வேண்டும். மேற்படி விண்ணப்பங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் எங்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

குடும்பத்தினருக்கான சலுகை அடிப்படையிலான விண்ணப்பங்கள்
விவாக விண்ணப்பங்கள் | அகதி விண்ணப்பங்கள்
14, 10 அல்லது 7 வருட வதிவிட தகமை விண்ணப்பங்கள்
பிரித்தானிய பிரஜாவுரிமை | வீதிப் போக்குவரத்து | சம்பந்தமான வழக்குகள்

**கடன் சுமையில் இருக்கிறீர்களா?**

உங்கள் வங்கிகளுடன் / நிதி நிறுவனத்துடன் உரையாடி உங்கள் கடன் தொகையைக் குறைப்பதுடன் முடிந்தால் வட்டியையும் நீக்கிவிட முயல்வோம். No Win – No Fee (Subject to assessment)

நீங்கள் உரிய காலத்திற்கு முன்னரே ஈட்டுத் தொகையை மீளச் செலுத்தியதற்காக உங்கள் வங்கி / நிதி நிறுவனம் மேலதிக கட்டணத்தை அறவிட்டுள்ளதா?
உங்களிடமிருந்து மேலதிகமாக கட்டணம் அறவிடப்பட்டதாக நீங்கள் கருதினால் FSAயின் விதிப்படி அதனை வங்கியிடமிருந்து மீளப் பெற்றுத் தர முயல்வோம்.
No Win – No Fee (Subject to assessment)

அண்மைக் காலத்தில் விநியோகிக்கப்பட்ட மாசுபடுத்தப்பட்ட எரிபொருளால் உங்கள் வாகனங்கள் பாதிக்கப்பட்டுள்ளதா?
அப்படியானால் எரிபொருள் நிலையத்திலிருந்து நஷ்ட ஈடு பெற்றுத் தருவோம். No Win – No Fee (Subject to assessment)

வரிச்சுமைகளை குறைப்பதற்கும் ஆலோசனைகள் வழங்கப்படும்
No Win – No Fee (Subject to assessment)



845 Romford Road, Manor Park, London, E12 6JY
Tel: **08712887343** Fax: **08712887353**
Web: www.markandan-solicitors.com
Email: mm@markandan-solicitors.com

எல்லாவிதமான சட்ட சேவைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்....

எங்கள் கட்டணம் மிகவும் குறைந்ததும் நியாயமானதும் ஆகும்.
ஆரம்ப ஆலோசனைகள் இலவசமானவை.
வார இறுதி ஆலோசனைகள் வசதியாகவும் ஒழுங்குபடுத்தி தரப்படும்.

# கைக்கெட்டாத கைம்மாத்துகள்

அங்கம் 4

கற்பனைத் தொடர்

எழுதுவது: சோழியான்

"கேசவன்! கொழும்புக்கு ஒருக்கா ரெலிபோன் எடுக்க வேணும். அப்பா வந்து நிக்கிறார்."

"உன்ரை ரெலிபோனுக்கு என்ன நடந்தது? காசு கட்டேல்லையே?"

"இவன் தம்பியின்ரை அலுவலாய் கொழும்புக்கும் சிங்கப்பூருக்கும் மாறி மாறிக் கதைச்சதிலை எக்கச்சக்கமாய் பில் ஏறீட்டு"

"இப்ப தம்பி எங்கை? கனடாவுக்குப் போயிட்டாரே?"

"எங்கை போனான்? கனடாவுக்கு அனுப்புறன் எண்டுசிங்கப்பூருக்குக்கூட்டிக்கொண்டுபோய் ஏஜென்சிக்காரன் காசோடை ஏமாத்திப் போட்டான். இப்ப கொழும்பிலை தான் நிக்கிறான்."

"உனக்கும் மாறி மாறிச் செலவுதான்" என்று சிவராசனுக்காகப் பரிதாபப்பட்டான் கேசவன்.

சிவராசனின் தம்பி வரதராஜன் ஒருமுறை கடிதம் போட்டிருந்தான்.

"ஊரிலே எங்கும் ஆயுதங்களால் அழிவுகள். பஞ்சத்தின் கோரத் தாண்டவம். இளைஞர்களின் தலைமறைவு. இராணுவத்தின் சுற்றிவளைப்பு. மரத்தொழிலை மறந்து பல நாட்களாகிவிட்டன. கொழும்புக்கு வந்தால் ஏதாவது சில்லறைக் கடை வைத்துப் பிழைத்துக் கொள்கிறேன்" என்று உதவி கோரினான்.

இந்த நேரத்தில் உதவாமல் விடமுடியுமா? தன்னிடமுள்ள காசை அனுப்பினான்.

கொழும்புக்கு வந்து பலசரக்குக் கடை ஒன்றை ஆரம்பித்த வரதராஜன், வியாபாரம் நன்றாக நடைபெறுவதாக அறிவித்தபோது, தனது உதவி வீண் போகாததை எண்ணி அகமகிழ்ந்தான் சிவராசன்.

தானும் வரதராஜனும் சம்பாதிக்கும் பணத்தில் சகோதரிகளுக்கு நல்லதொரு வாழ்க்கையை அமைக்கலாம் என நம்பினான். பெற்றோரின் இறுதிக்காலத்தில் அவர்களை சந்தோசமாக வைக்கலாமென எண்ணினான்.

எண்ணங்களும் நம்பிக்கைகளும் வருங்காலக் கனவுகளும் திட்டமிட்டபடி நிறைவேறினால் வாழ்க்கையிலே அர்த்தம் இல்லை என விதி நினைத்தது போலும். மாதா மாதம் வரதராஜனிடமிருந்து வரும் கடிதங்கள் திடீரென்று நின்று போயின.

"கொழும்பில் கைதாகும் அப்பாவித் தமிழர்களின் வரிசையில் வரதராஜனும் சேர்ந்து கொண்டானா?" எனத் தவித்தான் சிவராசன்.

ஊரிலிருக்கும் பெற்றோருக்குக் கடிதம் எழுதி வரதராஜனைப்பற்றி விசாரித்தான். பதில் வந்தது. திகைத்துவிட்டான்.

நமசிவாயம் தான் எழுதியிருந்தார். வரதராஜன் கொழும்பிலேயே எவளோ ஒருத்தியைத் திருமணம் செய்து விட்டானாம். வீட்டுடன் தொடர்பு இல்லையாம்.

'அவன் தனக்குப் பிள்ளையே இல்லை' என்று கோபத்தைக் கடிதத்தில் உமிழ்ந்திருந்தார்.

வரதராஜனைச் சொல்லிக் குற்றமில்லை. வயது இருபத்தைந்துக்கு மேலிருக்கும். திருமணம் செய்ய வேண்டிய வயதுதான். சிவராசனால் ஒரு சராசரி வாலிபனது மன உணர்வுகளைப் புரிந்துகொள்ள முடிந்தது. கோபம் வரவில்லை. ஆனால்....

சகோதரிகளைப் பற்றிச் சிந்திக்காமல், வியாபாரத்துக்குப் பணம் கொடுத்த தனக்குக் கூட அறிவிக்காமல் திருமணம் செய்ததைத் தான் அவனால் தாங்க முடியவில்லை.

கூடவே எப்படித் தனி ஆளாகக் குடும்பப் பொறுப்புகளைச் சுமப்பது என்ற கவலை வேறு அலைக்கழித்தது.

எனினும் வரதராஜன் அவனது சகோதரன். அவனின் எதிர்காலம் ஒளிமயமானதாக அமைய வேண்டும். திருமண வாழ்த்து மடலொன்றைத் தபாலில் அனுப்பி விட்டான்.

சில வாரங்களில் நீலநிறமான தபாலொன்று சிவராசனின் தபால் பெட்டியில் கண்சிமிட்டியது.

அன்புடன் சிவா அண்ணை!

எந்த முகத்துடன் உங்களுக்குக் கடிதம் எழுதுவது என்ற குற்ற உணர்வுடன் இவ்வளவு காலமாகக் கடிதம் எழுதவில்லை. அதற்காக முதலில் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னில் தங்களுக்கு எவ்விதக் கோபமும் இல்லை என்பதைத் தாங்கள் அனுப்பிய திருமண வாழ்த்து மடலில் இருந்து புரிந்து கொண்டேன்.

எதிர்பாராத சூழ்நிலையில் திருமணம் செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. என் மனைவி ஜெனீற்றா மிகவும் நல்லவள். அவளுக்கும் எனது வீட்டாருடன் ஒற்றுமையாக வாழத்தான் ஆசை. ஆனால் அப்பாதான் என்னை மன்னிப்பதாக இல்லை. அவருடைய மனதை மாற்றுவது தங்கள் கைகளில்தான் தங்கியுள்ளது.

அண்ணா! கொழும்பிலும் தமிழர்களுக்கு நிம்மதியான வாழ்க்கை இல்லை. எந்த நேரம் ஏது நிகழுமோ என்று பயந்தபடிதான் வாழவேண்டி உள்ளது.

எனது கடையில் வியாபாரம் நன்றாக நடந்தாலும் பிரயோசனமில்லை. காடையர்களுக்குக் கப்பம் கட்டியே கடை நடத்தலாம். பொலிசாராலும் சோதனை அது இதென்று பல கஸ்டங்கள். இந்த நிலையில் நானும் இங்கிருப்பதில் எவ்விதப் பலனும் இல்லை. எனவே கடையை விற்று கனடாவுக்குச் செல்ல முடிவு செய்துள்ளேன். கனடாவில் இருந்து ஒருத்தர் வந்து ஆட்களைக் கூட்டிக் கொண்டு போகிறார். கடையை விற்று வரும் காசு காணாது. மிகுதியை நீங்கள் தந்து உதவினால் எனது எண்ணம் நிறைவேறும். தங்களின் பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

அன்புத்தம்பி, ந.வரதராஜன்.

கடிதத்தை வாசித்த சிவராசனின் தலை வலித்தது.

காசு.... காசு.... காசு.... இதற்குத் தான் எவ்வளவு தேவைகள்? காசின் வருகைக்கு ஏற்றவாறு தேவைகளும் அதிகரிக்கத்தானே செய்கிறது.

ஆனால் சிவராசனைப் பொறுத்தமட்டில் வரவிற்கு மேலாகவே செலவுகள் அதிகரித்தன. உறவுகள் அவனிடம் பலவழிகளிலும் எதிர்பார்த்தனர். அவற்றிற்கெல்லாம் ஈடுகொடுக்க அவனின் வருமானம் போதவில்லை. 'இயலாது' என்று ஒதுங்கிக் கொள்ளவும் முடியவில்லை. தாய்நாட்டின் பிரச்சினைகளிலும் ஒரேயொரு நம்பிக்கை ஒளியாக அவர்களுக்குத் திகழ்பவன் அவன்தானே. அவர்களை ஏமாற்ற விரும்பவில்லை. மனம் இருந்தது. ஆனால் பணம்....?!

வரவிற்கு மேலாகச் செலவுகள் அதிகரித்த போது கடன் பட்டான். ஆனால் கடனுக்கும் ஒரு எல்லை உள்ளதல்லவா?!

ஆரம்பத்தில் பலர் நண்பர்கள். ஆனால் தற்போது அவனை நெருங்கி வரவே பயப்பட்டார்கள். எங்கே கடன் கேட்டு விடுவானோ என்ற பயம்தான் காரணம்.

எனினும் கேசவன் போன்ற ஓரிரு நண்பர்களும் இல்லாமலில்லை. அந்தத் தைரியத்தில் வரதராஜன் கனடா செல்ல உதவுவதற்குச் சம்மதித்தான். எப்படியோ பணம் புரட்டி அனுப்பினான்.

வரதராஜனும் கடையை விற்று ஏஜென்சியுடன் கனடா போவதற்காகச் சிங்கப்பூருக்கு வந்தான். சிங்கப்பூரில் ஏஜென்சி தலைமறைவாகி விட்டான். அதிர்ச்சியால் நிலைகுலைந்தான் சிவராசன். ஏமாற்றத்துடன் நாடு திரும்பினான் வரதராஜன். கடையும் இல்லை. காசும் இல்லை. கனடாவும் இல்லை.

என்ன செய்யப்போகிறான் வரதராஜன்? மீண்டும் உதவி கேட்கலாம். தயக்கத்தில் விசாரிக்கவில்லை. கடன்கள் பயமுறுத்தின. செலவுகளைக் கூடிய மட்டும் குறைத்தான். புது உடுப்பு வாங்கவே மறந்து விட்டது.

வேலைக்கும் வெளிக்கும் பாவிக்க ஒரு சோடிச் சப்பாத்துக்களே தஞ்சம். அவைகூட இன்றோ நாளையோ ஆயுளை முடித்து விடுவதைப் போலப் பயம் காட்டின.

என்னதான் செலவுகளைக் குறைத்தாலும் சிகரட்டை விட முடியவில்லை. சிகரட்டையும் விட்டால் பைத்தியம் பிடித்துவிடும் போலிருந்தது.

"என்ன மச்சான் சிவா! யோசிச்சுக் கொண்டு நிக்கிறாய். கொழும்புக்கு ரெலிபோன் எடுக்கேல்லையே...."

கேசவனின் குரல் கேட்டு சுயநினைவடைந்த சிவராசன் ரெலிபோனை நெருங்கி இலக்கங்களை அழுத்தினான்.

இரண்டு மூன்று முயற்சிகளுக்குப் பின் மறுமுனையில் தொலைபேசி கிணுகிணுத்தது.

"ஹலோ...."

"ஹலோ... நான் சிவா ஜேர்மனியிலை இருந்து கதைக்கிறன். நமசிவாயகத்தோடை கதைக்க முடியுமே...."

"சிவாவோ? எப்படியடா சுகமா இருக்கிறியோ நான் தாண்டா நந்தன்...."

"நந்தன்.... நீ இப்ப லொட்ஜ்ஜிலையே வேலை செய்யுறாய்?"

"வெளிநாட்டுக்குப் போற அலுவலாய் வந்தனான். ஏஜென்சிக்காரன் இண்டைக்கு அனுப்புறன் நாளைக்கு அனுப்புறன் எண்டு சொல்லிச் சொல்லிப் பயண அலுவல் தள்ளிக் கொண்டே போகுது. இன்னும் உருப்படியாய் வெளிக்கிடுறபாடாயும் காணேலை. வாடகைக்கு லொட்ஜ்களிலை இருக்கிறதெண்டாலும் ஞாயமான காசெல்லே வேணும். கொழும்பிலை எல்லாத்துக்கும் காசுதான் வேணும். அது தான் வெளிநாட்டு விசயங்கள் சரிவருமட்டும் லொட்ஜ்ஜிலை வேலைக்கு நிக்கிறன்."

"அதுவும் சரிதான்."

"உன்பாடுகள் எப்பிடி? கலியாணம் கிலியாணம் கட்டிப் போட்டியே?"

"கலியாணமோ? அதுதான் இப்ப இல்லாத குறைச்சல். எனக்கிருக்கிற தலையிடிக்கை இன்னொருத்தியும் வந்து இடிபட வேணுமே?"

"கஸ்டங்கள், பிரச்சினையள் எல்லாருக்கும் வாறதுதான். அதுக்காக கலியாணம் வேண்டாமெண்டு காலத்தை வீணாக்கிப் போடாதை. அதை அந்தந்த நேரத்திலை செய்துபோடவேணும்...."

"எனக்கும் ஆசை இல்லாமலே.... எல்லாத்துக்கும் நேரம் எண்டு ஒண்டு இருக்கெல்லே. நீ என்னமாதிரி...."

"கலியாணம் கட்டி ரண்டு வருசமாகுது...."

"ஊருக்கையோ....?"

"ஊருக்கைதான். சொந்தத்துக்கை தான். கோமதி எண்டு...."

"உன்ரை மச்சான் தானே, நான் வரேக்கை சின்னப் பெட்டையாய் அது வழியை திரிஞ்சது" தொலைபேசியில் ஆச்சரியப்பட்டான் சிவராசன்.

"நீ உங்கை போய் பத்து வருசத்துக்கு மேலையாச்சு. இன்னும் அவள் சின்னப் பெட்டையே...." சிரித்தான் நந்தன்.

உண்மைதான். தாயகத்தை விட்டு வந்து பத்து வருடங்கள் கழிந்துவிட்டன. சிவராசன் வந்தபோது ஜேர்மனிக்கு வந்தவர்களில் பலர் குடும்பமாகிவிட்டார்கள்.

ஆனால் சிவராசன்....?

அவனால் அப்படியொரு குடும்ப வாழ்க்கையை அனுபவிக்க முடியுமா? பெருமூச்சொன்றைத்தான் விட முடிந்தது.

(தொடரும்)

We have been helping our client to make the most of their money for over 35 years. How have we been able to stay in business for so long? Well that is quite simple. We understand our clients and provide them with the personal service they deserve.

- We are truly independent and can provide advice across the whole market.
- Our service focuses on your needs and meeting your financial goals.
- We provide ISA portfolios to match all types of investors.
- We provide comprehensive Inheritance Tax solutions, potentially saving 40% tax.

**ARM Associates** can promise you an expert, individually-tailored and cost-effective service. Whether you need specific advice or comprehensive financial planning, we can help.

**ARM Associates**

Professional Investment Advisers

*For a free initial chat, to discuss your requirements, please call:*

**Mr P.Srinivasan** CertPFS

**Mr Suhan Srinivasan** (Dip PFS, Economics BSc)

Tel: **020 8763 2221** / Fax: **020 8763 2220**

Email: **sri@srinivasan.co.uk** / Web: **www.srinivasan.co.uk**

**32 Abbots Lane, Kenley, Surrey, CR8 5JH.**

Authorised and Regulated by the Financial Services Authority.
The value of investments may fall as well as rise.

# KINGSTONS
SOLICITORS

* குடும்பத்துடன் தஞ்சம், கோருவதற்கு, வசிப்போருக்கு புதிதாக அறிமுகக்கப்படுத்தப்பட்டுள்ள Home office சட்டத்தின் கீழ் குடும்ப விசா (Family Visa) பெற்றுத் தருவதற்கான ஏற்பாடுகள்.
* உங்கள் விண்ணப்பம் 2001 ஜனவரியிற்கு முன் நிராகரிக்கப்பட்டிருந்தால், Home office இன் புதிய நடைமுறையின் கீழ் விசா பெற்றுத் தருவதற்கான ஒழுங்குகள்.
* புதிதாக தஞ்சம், கோருவோருக்கான, Home office ல் விசாரணை, ஒழுங்குகள் மற்றும் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகள்.
* தஞ்சம் நிராகரிக்கப்பட்டோருக்கு மேன் முறையீடு (High court Appeal) மற்றும் (Judicial Review) செய்தல்.
* நீண்ட காலமாக தஞ்ச மனு நிராகரிக்கப்பட்டோருக்கு புதிய மனு. (Fresh Application)
* ஐரோப்பிய நாடுகளில் குடியுரிமையோடு வசிப்போரின் இங்கிலாந்து உறவினர்களுக்கு விசா விண்ணப்ம்.
* சிறைச்சாலையில் வைக்கப்பட்டோர் தொடர்பில் பிணை மனுச்செய்தல் (Bail)
* நாட்டை விட்டு வெளியேற்றப்படுவோர் தொடர்பில், அவர்களைத் தடுத்து நிறுத்தவதற்க்கான மனு மற்றும் விடுவிப்பதற்கான விண்ணப்பம்
* இங்கிலாந்தில் உயர்கல்வி கற்பதற்கான விசா ஏற்பாடுகள். (Student visa)
* இங்கிலாந்தில் நீண்டகாலமாக தொழில் செய்வோருக்கு வேலை புரிவதற்கான விசா (Work Permit) மற்றும் வியாபாரம் செய்வதற்கான விசா (Business visa)



இது தவிர பல்வேறு சட்ட சேவைகளை உங்களுக்கு அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகள் மூலம் வழங்குவதற்குத் தயாராக உள்ளோம்.

KINGSTONS
SOLICITORS

269 A, Haydens Rd, Wimbledon, London SW19 8TY

Contact: **Chrishanthi Vincent** (LLB Hons)

Tel: **0208 540 0577** Mobile: **0777 5777 188** Fax: **0208 540 7504**

# பறக்கும் தட்டுக்கள் (Flying Saucers)



பாகம் 12

இதனால் அமெரிக்க ஜனாதிபதியாய் இருந்த டுவைட் ஐசன்ஹோவர் அப்போது பிரித்தானியா பிரதமராக இருந்த வின்ஸ்டன் சர்ச்சிலுடனும் ரஷ்யாவின் இரும்பு மனிதன் எனப்படும் ஜோசப் ஸ்டாலினுடனும் இது குறித்து உடன்படிக்கை ஒன்றையும் ஏற்படுத்திக் கொண்டார். இதன் மூலம் அமெரிக்காவுக்கு கிடைத்தது மகத்தான வெற்றியே. இந்நிறுவனத்தினரால் நடத்தப்பட்ட ஆய்வுகள் 1970 களின் இறுதியில் முடிவுற்றன.

அத்துடன் இப் புரெஜெக்ட் புளுபுக் நிறுவனத்தினரால் நடாத்திய புள்ளி விபரக்கணிப்பில் பறக்கும் தட்டுக்கள் தொடர்பாக 3200 நிகழ்வுகள் பதிவுசெய்யப்பட்டன. அவற்றில் 22% விளக்கப்பட முடியாதனவாகவும். 33% கண்டுபிடிக்கப்பட முடியாதவையாவும். இருந்தன. இதற்கு இவர்களால் கொடுக்கப்பட்ட விளக்கம் விண்ணில் நடக்கும் பல்வேறு மாற்றங்களை தவறாகப் புரிந்து கொள்வதால் ஏற்படுவது என்றும் அவ்வப்போது விண்ணில் நடக்கும் வல்லரசுகளின் விண்கலங்களைப் பார்த்து பறக்கும் தட்டுக்கள் என பாமர மக்கள் நம்பி கட்டுக்கதைகளைக் கட்டுகின்றனர் என்றும் ஆகும்.

உண்மையில் இவர்கள் கூறிய காரணங்களில் சில தவறாகப் புரிந்து கொள்ளல்களும் கட்டுக்கதைகளும் இருக்கின்றன எனக் கூறினாலும் ஒரு குறிப்பிட்ட சதவீதமாவது உண்மை இருக்கின்றன என்பதை இவர்கள் மறைமுகமாக ஏற்றுக் கொண்டுள்ளனர் எனக் கூறலாம்.

இப்பறக்கும் தட்டுக்கள் பற்றிய கதைகளானது பரவ ஆரம்பித்ததும் இவற்றைச் சமயங்களுடனும் ஆவிகளுடனும் தொடர்புபடுத்தி பிரச்சாரம் செய்யும் அமைப்புக்களும் பணம் சம்பாதிக்கும் குழுக்களும் தோன்ற ஆரம்பித்தன. இவற்றில் ஆவிகளுடன் பேசும் குழுக்களே முன்னிலை வகித்தன. இவர்களைப் பொதுவாக தொடர்புக்குழு (Contactee Cults) என்று அழைத்தனர். இக்குழுவில் பிரபல்யமானவர் ஜேர்ஜ் அடம்ஸ்கி என்பவரே இவர் தான் உயரமான மாநிறமுள்ள வானுலக மனிதர் ஆர்தர் என்பவரைச் சந்தித்ததாகவும் அவர் தன்னிடம் வருங்காலத்தில் அணு ஆயுதப்பரவல் காரணமாக ஏற்படும் ஆபத்துக்களைப் பற்றிச் கூறியதாகவும் சென்னார். ஆனால் இதைப்பலர் நம்பவில்லை. இன்றும் அடம்ஸ்கி அமைப்பு இயங்கிக் கொண்டிருக்கிறது. அவருடைய எழுத்துக்கள் பிரசுரிக்கப்பட்டு அமெரிக்காவில் விற்பனை செய்யப்படுகின்றன.

வானுலக வாசிகளுடன் தொடர்பு கொள்வதில் இரண்டு குழுக்கள் பிரபல்யமாக இருந்தன. அவை எல்லாமே வானுலக வாசிகள் அணுஆயுதப்பரவல் பற்றிய ஆபத்துக்களைக் கூறியதாகச் செல்லப்பட்ட செய்திகளையே சுற்றிவந்தன.

இதற்குப் பிறகு சமீபத்தில் தோன்றியுள்ள குழுக்கள் வேற்றுலகம் பற்றிய கருத்துக்களைக் கொண்டவை. இவை முக்கியமாக கிறிஸ்தவ மற்றும் பல மதக் கருத்துக்களை வானுலக ஊர்திகளுடன் தொடர்புபடுத்தி எப்படி வேற்றுக் கிரகத்தவர்கள் நமது மனித இனத்தின் மேல் அதிக அக்கறை கொண்டிருந்தனர் எனக்கூறி மூடநம்பிக்கையை விதைத்தனர்.

இவ்வாறு இயங்கிய புரெஜெக்ட் புளுபுக் நிறுவனமானது கொடுக்கப்பட்ட அறிக்கைகளின் படி இப்பறக்கும் தட்டானது வட்டவடிவாக இல்லாது முக்கோணவடிவாகவும் மீனினுடைய வாலினது அமைப்பை உடையதாகவும் காணப்பட்டதனால் இவற்றை இனிப் பறக்கும் தட்டுக்கள் என்று அழைத்தல் பொருந்தாது என இந்நிறுவனத்தின் இயக்குனர் தனது கருத்தை முன்வைத்தார்.

## விண்வெளி விநோதம்

எழுதுவது: **அ. மயூரன்**

இதை பரிசீலித்த இந்நிறுவனம் வானில் அவ்வப்போது அடையாளம் காணமுடியாத மர்மப் பொருட்கள் தென்படுவதனால் இவற்றை முன்பு அழைத்த பறக்கும் தட்டுக்கள் என்ற பெயரினை மாற்றி அவற்றிற்கு U.F.O. (Unidentified Flying Objects) அடையாளம் காணமுடியாத பறப்புக்களை மேற்கொள்ளும் பொருட்கள் என 1954ஆம் ஆண்டு பெயர் சூட்டினர். இதன் மூலம் விமானங்களைப் போலவோ அல்லது ஏவுகணைகளைப் போலவோ அல்லாமல் முற்றிலும் வேறுவிதமாகச் செயற்பட்டு தனித் தன்மையுடன் வானில் பறக்கும் எந்தப் பொருட்களும் U.F.O. என்ற வரையறைக்குள் அடங்கும் என இந்நிறுவனம் அறிவித்தது. இதனால் அமெரிக்காவின் பாதுகாப்புக்கு ஆபத்த ஏற்படலாம் என்றும் இத்திட்ட அறிக்கை கூறியதுடன் விமானப்படை அதிகாரிகள் அடையாளம் காணப்படாத பொருட்கள் பற்றி ஊடகங்களுடன் பேச வேண்டாம். என்றும் அறிவுறித்தின.

01 திகதி ஒக்டோபர் மாதம் 1958 ஆம் ஆண்டு வோஷிங்டனில் நாசா (National Aeronautics And Space Administration) நிறுவனம் உருவாக்கப்பட்ட பின் இது குறித்து மேலும் விரிவாக ஆராயப்பட்டது. இருந்தும் விசேடமாக U.F.O பற்றியும். அதனால் பாதிக்கப் பட்டவர்கள் பற்றியும். ஆராய்வதற்கென MUFON (Mutual UFO Network) எனும் அமைப்பு நாசாவினால் உருவாக்கப்பட்ட போதும் இது கூடுதலாக நாசாவுடன் இணைந்தே இயங்கியது.

இன்று வரைக்கும் இந்த அமைப்பே பறக்கும் தட்டுக்கள் பற்றியும் இதனால் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் சாதக பாதக தன்மைகளை ஆராய்ந்து வருகிறது. இப்பறக்கும் தட்டுக்கள் பற்றி ஆராயும் MUFON நிறுவனத்தில் முக்கிய பணிபுரியும் அமெரிக்கரான டெட் புலேச்சர் என்பவர் இதுகுறித்து தனது பதிவேட்டில் குறிப்பிட்ட விடயமானது பறக்கும் தட்டுக்கள் உண்மையில் உண்ட என்றே எண்ணத் தோன்றுகிறது.

அவர் பறக்கும் தட்டுக்கள் என்பது அவ்வப்போது தென்பட்டு எமது அறிவுக்குப் பரீட்சை செய்து விட்டுச் செல்கின்றன. ஆனால் நாம் இன்றும் அப்பரீட்சையில் சித்தியடையவே இல்லை என்று குறிப்பிட்டார். இதைப் படித்த பலர் வெகுண்டெழுந்தனர். என்பது வேறு விடயம். உண்மையில் அவர் குறிப்பிட்ட விடயம் நூறு வீதம் உண்மையானதே.

*- தொடரும்*

## நடக்க இருக்கும் நிகழ்வுகள்

**Dec 08 — SATURDAY @ 5.00PM**

*'வானொலிக் கலை' நூல் வெளியீடு*

*மூத்த தமிழ் ஒலிபரப்பாளர் திரு விமல் சொக்கநாதன் எழுதிய 'வானொலிக் கலை' நூல் வெளியீட்டு விழா*

*இலண்டன் சிவன் அரங்கம்* Clarendon Rise, Lewisham. London, SE13 5ES

**Dec 10 — MONDAY @ 1.30PM**

*ஒன்று கூடல்*

*ஈழத்திலும சிறிலங்காவிலும் வாழும் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மனித உரிமை மீறல்களை வெளிக்கொண்டுவரும் நிகழ்வு*

Opposite to the Parliament, nearest tube station: West minister / Green Park

**Dec 15 — SATURDAY @ 6PM**

*ஒளி விழா*

மட்டுநகர் சிவானந்த வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினிரின் நத்தார் விழா.

OWeldon Park Middle School , Wyvenhoe Road, South Harrow, HA2 8LS தொடர்புகளுக்கு 020 8904 0254, 077406 40124, 079585 77939

**JAN 05 — SATURDAY @ 6PM**

*காத்தவராயன் சிந்து நடைக் கூத்து*

*திருநெல்வேலி சிறி பத்திரகாளி இளங் கலைஞர் மன்றத்தினரால் நடாத்தப்படும்.*

Ashburton Learning Village, Shirley Road, Croydon, Surrey CR9

*அனுமதி: தனிநபர் 8 பவுண்ஸ், குடும்பம்: 20 பவுண்ஸ் தொடர்புகளுக்கு: செந்தூரன்: 07834 777 171, செல்வன்: 07956 068 849, அருள் 07743 896 913*

## உலக மனித உரிமை நாள் 2007
## World Human Rights Day 2007

பிரித்தானிய நாடாளுமன்றத்தின் முன் 10/12/2207
திங்கள் பிற்பகல் 1.30 இலிருந்து 5.00 வரை கூடுவோம்

மார்கழி பத்து மனித உரிமை நாள் 1948இலே ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானமாக இது அமைந்தது. ஆனால் ஈழத்திலும் சிறிலங்காவிலும் மனித உரிமை மீறல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன

இந்த நிலையிலே பிரித்தானியாவிலே வாழும் நாம் என்ன செய்யலாம். ஆகக் குறைந்தது எமது உடன் பிறப்புகளின் மீதான மனித உரிமை மீறல்களை நாம் வாழும் நாட்டின் அரசியல் வாதிகளுக்கும் ஏனைச் சமூகத்தவர்க்கும் தெரியப்படுத்த வேண்டாமா? பிரித்தானிய நாடாளுமன்ற முன்றலிலே 10-12-2007 திங்கள் பிற்பகல் 1.30 இலிருந்து 5.00 வரை கூடுவோம்.

முன்னனுமதி பெறப்பட்ட ஒன்று கூடல் திரளாக வாருங்கள்

இது எமது தேசியக் கடமை. வரலாற்றுத் தேவை

*தொடர்பு : Tamil Community Centre, Harrow, info@gmail.com*

Criminal Defence Service
Community Legal Service

**S.Satha & Co Solicitors**
*We are always at your service*

PRINCIPAL PARTNER
S.SATHANANTHAN

- Injunction
- Family Law
- Immigration
- Criminal Law
- Conveyancing
- Legal Aid Work

Tel: 020 8471 9484 Fax: 0208471 9485
Emergency No: 07956 288 671 Property Department Fax: 020 8471 1887



376-378 High Stret North, Manor Park, London E12 6PH.
DX:133012 Upton Park2

# BUYING or SELLING BUSINESS?

Vision

We specialise in selling businesses.

- We have a professional team of experienced staff.
- We can give you a free valuation.
- We provide effective marketing of your business.
- We treat the sale of your business with confidentiality.
- We only bring genuine buyers to you.
- We have cash buyers waiting.

...With **Vision** as your partner,
**Your only job is to continue business as usual.**

## To SELL YOUR BUSINESS IN confidence

CALL **02087727991-2**
Fax **02087727993**

**890 Garratt Lane, Tooting, London SW17 0NB**

## LIST OF BUSINESSES FOR SALE

01 OFF LICENCE & CONVENIANCE STORE FOR SALE: LOCATION TOOTING. TAKINGS £7000P/A. RENT IS £7500 P/A RATES ARE £1188 18 YEARS LEASE IS AVAILABLE ASKING PRICE £45.999

02 OFF LICENCE CONVENIANCE STORES & NEWS AGENT FOR SALE LOCATION: CLAPHAM PARK ROAD TAKINGS £33.000 (SHOP SALE £11.000 LOTTERY £2.000 BUS PASSES £ 7.500 PAY POINT 15.000 WESTERN UNION £100 P/W) RENT IS £10500P/A RATES ARE £2.500 P/A ANOTHER 18 YEARS LEASE IS AVAILABLE ASKING PRICE £189.000

03 CONVENIANCE STORE & FRUIT & VEG LOCATION BATTERSEA TAKINGS £3000P/W RENT IS 8666 P/A RATES ARE £4000 P/A ANOTHER 3 YEARS LEASE IS LEFT IS RENEWABLE TO ANOTHER 15 YEARS ASKING PRICE £29.000

04 OFF LICENCE & CONVENIANCE STORE WITH THREE BEDROOM FLAT FOR SALE LOCATION MORDEN TAKINGS £ 6.900 RENT IS £22.000 RATES ARE £7.500 ANOTHER 18 YEARS LEASE IS AVAILABLE ASKING PRICE £55.000

05 FISH AND CHIPS SHOP FOR SALE LOCATION WALLINGTON TAKING £3000 P/W RENT IS £9.000 P/A RATES ARE £1300 P/A ASKING PRICE £89.000

06 OFF LICENCE & NEWS AGENT FOR SALE LOCATION GREENFORD TAKINGS £ 6.500 P/W (including lottery) RENT IS £10.000 P/A RATES ARE £2100 P/A ANOTHER 17 YEARS LEASE AVAILABLE ASKING PRICE £35.000

07 FREEHOLDS FOR SALE IN BRIGHTON LOCATED IN VERY BUSY MAIN ROAD IN LANCING WITH THREE BEDROOM HOUSE TAKING £4.000 P/W INCLUDING LOTTERY ASKING PRICE £275.000

08 DRY CLEANERS FOR SALE IN GARRAT LANE WITH THREE BEDROOM HOUSE TAKINGS £1.500 P/W 9 YEARS LEASE IS AVAILABLE RENT IS £ 9.000P/A RATES ARE £2472 P/A AVAILABLE NOW ASKING PRICE £85.000

**Vision** BUSINESS TRANSFER & TRAVEL AGENT

# இரண்டு முத்தங்கள்

(22 ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருநாள் வைத்தியர் வீட்டில் வெகுநேரம் இவன் முறை வரும் வரை காத்திருந்து வைத்தியர் இவனுக்கு சுளுக்கெடுக்க ஆரம்பிக்கவும் பாம்பு கடித்து விட்டதென்று அங்கு எடுத்து வரப்படும் ஒருவருக்கு அவசர வைத்தியம் பார்க்க எழுந்த வைத்தியர் அதிலேயே மும்முரமாகி விட கனகாவே அவனுக்குச் சுளுக்கெடுக்க ஆரம்பிக்கிறார். அப்பப்பா அவள் தொடுகை தான். என்ன சுகம்... என்ன சுகம்?

அவளுடைய பத்துவிரல்களும் ஒரு மென்மையான ஒழுங்கில் அவன் கழுத்தில் ஊரத் தொடங்கவும் அவனுக்குள் அத் தொடுகையின் ஸ்பரிச சுகம் பெருக்கெடுத்தோடுகையில் தன்னுடைய கழுத்துப் போய் புதுக் கழுத்தொன்று வந்து சேர்ந்து விட்டதாக உணர்கிறான். அவன் கழுத்தின் அத்தனை நரம்புகளும் இயங்கத் தொடங்குகின்றன. அவன் நாற்காலியில் இருந்தாலும் நாற்காலியில் இல்லை. அந்த வெளியை நிறைத்திருந்தாலும் நிறைத்திருக்கவில்லை.

கனகா கதிரைக்குப் பின்னால் நின்ற நிலையில் விரல்களைக் கழுத்தில் அழுத்தியபடி அவன் மேல் தலையைக் கவிழ்ந்தாள், அவள் முகம் அணுகு முன் கத்தையான அவள் குழல் கட்டுக்கள் அவன் மேல் விழுந்து முகத்தை மறைத்தன. கனகா அவனை முத்தமிட்டுக் கொண்டாள். அவள் முத்தத்துக்கு கணக்கு வைக்கவில்லை, தன் கைப் பிடியைத் தளர்த்தவுமில்லை.

திடீரென்று வெளியே என்னை விட்டிட்டுப் போயிட்டியே. ஐயா.' என்று பெருங் கூச்சல் கேட்கிறது. ஒரு பெண் நெஞ்சில் 'மடால்' 'மடால்' என்று அறைந்து ஒப்பாரி வைத்து அழுகிறாள். இருந்தும் பாம்பு கடித்தவரையும் கூட வந்தவர்களின் அட்டகாசங்களையும் கனகா கவனித்ததாகத் தெரியவில்லை.

அவனுக்கு அந்த வலியும் இன்பமும் மட்டுமே நிஜம். மற்றதெல்லாம் அழிந்துவிடலாம். இத்தனை காலம் கடந்தும் அச்சம்பவத்தை மீட்டுயிர்க்கும் கதை சொல்லிக்கு அம் முத்தம் எப்படித்தான் மறந்துபோகும்?

சுளுக்கெடுப்பவனில் முத்தம் தரும் பெண்ணின் பெயர் கனகாவாக இருப்பது எனக்கு இன்னொரு ஆச்சர்யம். இந்தக் கனகாம்பிகை என்கிற பேர் வழிகள் எல்லா ஊர்களிலுமே சற்றுச் விநோதங்களாகவும், புதிர்களாகவும் இருப்பதுகண்டு (என் பார்வையில்) நானும் ஆச்சர்யம் அடைந்திருக்கிறேன்.

1960களில் நான் அனுராதபுரத்தில் இருக்க நேர்ந்த காலத்தில் அங்கே ஒரு கனகா ஒரே வேளையில் பல அரசு அதிகாரிகளின் ஆசை நாயகியாக வாழ்ந்துகொண்டிருந்தாள்.

ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுமளவுக்கு அவளுக்குப் படிப்பும் இருந்தது. காரிகையை கைக்குள் போட்டுகொண்டால் சாதாரண இடமாற்றங்கள் தொடங்கி, சாராயக் குத்ததகை, பெற்றோல் நிரப்பு நிலைய உரிமங்கள் பெறுதல், பொது நிலத்தை வளைத்துப் போடுவது இரட்டைமாடிக் கட்டிடம் அமைத்தல் வரை அரசில் அவளால் ஆகாத காரியமில்லை. கார்களில் மட்டும் வலம் வந்து கொண்டிருந்த ஒரு Sex Bomb. பின் ஏதோவொரு பிரச்சனையில் அகப்பட்டு கொண்டு கொலை செய்யப்பட்டாள்.

விசாரணைக்குவந்த காவல்துறை ஆய்வாளரிடம் அவள் தன் கடைசி வாக்கியமாக 'அய்யா அன்ன' (அண்ணா குத்தினவர்) என்றிருக்கிறாள். அவள் 'அய்யா' என்று தன் சொந்தச் சகோதரனைத் தான் குறிப்பிட்டாளாவென்று உறுதிப்படுத்த முடியவில்லை. காரணம் பக்கத்து வீட்டுக்காரன் ஒருவனையும் 'அய்யா' என்பாளாம், அதனால் காவல்துறை எவரையும் கைது பண்ணவில்லை, சந்தேகத்தின் பலன் முழுவதையும் குற்றஞ்சாட்டப்பட்டோர் வரித்துக் கொள்ள கொலையாளி தப்பித்துக் கொண்டு விட்டான்.

வடமராட்சிப்பகுதியில் நல்ல அழகான குடும்பப் பெண் ஒருத்தி கனகா என்று இருந்தாள். அவளுக்கும் தணியாத தாகம். இயற்கை வனப் போடமைந்த அட்டகாசமான மார்புகள் அவளுக்கு. கொஞ்சம் சோஷியல் பேர்வழி, மேல்பாதியை எப்போதும் காற்றாட வைத்துநோக்குவோரின் இரத்தத்துடிப்பையும், அழுத்தத்தையும் அதிகரிக்க வைத்துக்கொண்டிருப்பாள்.

புருஷனுடன் எப்படியோ மாமியுடன் சதா 'கர்' 'புர்'. மாலையானால் அவள் வீட்டிலிருந்து பலவகைப்பட்ட வசவுகளோடு அடிக்கடி' கிழிச்சுக் காயப்போட்டிடுவன் கண்டியோ' என்றும் கேட்கும்.

குடும்பத்தில் சதா கசாமுசாவாக அதை வெட்டிக் கொண்டு வெளியேறிச் சேலை வியாபாரம் ஆரம்பித்தாள். பின்னாளில் எப்படியோ சேலையை வீசியவள் மாணவர்கள், வியாபாரிகள், கடத்தல்காரர்களுக்குத் தானே பாவனைச் சரக்கானாள்.

கனகா என்றொரு டீச்சர், தீராத ஆஸ்துமா வென்று அவருக்குத் திருமணமே ஆகவில்லை.

இப்போதைய அரசுக்குச் சாமரம் வீசும் ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் மைத்துனி அவர். பின்னாளில் நிறைய கிசு கிசுக்களுக்கு ஊற்றுக் கண்ணாயிருந்தார்.

இன்னும் அயலூரில், கல்லூரிகளில், கூட வேலை பார்த்தவர்களென்று ஆச்சர்யங்கள் நிறைந்த பல கனகாக்கள் உண்டெனினும் இப்போது யார் எங்கே என்று அறிகிற வாய்ப்புகள் அருகிவிட்டன.

அ.முத்துலிங்கம் கதையில் 'என்னுடைய சேர்ட் கொலர் சைசும், என் வயதும் ஒன்றாயிருந்த வருடம்' என்கிற வரியை நான் வெகுவாக இரசித்தேன். அ. முத்துலிங்கம் சொல்லும் உவமானங்கள் எப்போதும் தனித்துவமானவை.

ஒரு முறை சொன்னார்: 'இளமையில் யாருக்கும் காலம் புது டாய்லட் பேப்பர் சுருள் உருள்வதைப் போல மெல்ல மெல்லத்தான் உருள ஆரம்பிக்கும்.. பின் வயசாக ஆகத்தான் வேகம் பிடிக்கும்.'

பாம்பு கடித்த மனிதர் இறந்ததும் அவ்விடத்தில் எழுந்திருக்கக்கூடிய கூச்சல், ஒரு மரணத்தின் பாதிப்பு எதுவுமில்லாமல் வெட்ட வெளியில் பட்டப்பகலில் ஒரு தமிழிச்சி முத்தமிடுவதென்பது சற்றே நெருடலைத் தந்தாலும் நான் 'சுளுக்கெடுக்கிறவனை'யும் வெகுவாக இரசித்தேன்.

## ஹா ஹா ஹா ...

நோயாளி : டொக்டர் வாய் நாறுது டொக்டர்

டாக்டர் : எப்ப இருந்து?

நோயாளி : இப்ப நீங்கள் வாயைத் திறந்ததிலை இருந்து

# இல்லந்தோறும் இனிய வாழ்வு

## வலிப்பு நோய்

**Dr. பாலேந்திரன்**
*(ஒரு பேப்பருக்காக)*

நம்மில் பலர் வலிப்பு நோய் என்று ஒரு நோய் உள்ளதை அறிவோம். ஆனால் அதுபற்றிபொதுவான விளக்கம் கூட பலர் அறிந்திருக்கவில்லை. தகுதி வாய்ந்த மருத்துவர்கள் மட்டுமே வலிப்புநோய் பற்றி கணிசமான அறிவு பெற்றுள்ளனர். இதுதவிர இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களும், அவர்களுடன் கூட வாழ்பவர்களும் இந்நோய் பற்றி பல நடைமுறை உண்மைகளை அறிந்து வைத்திருப்பார்கள்.

இந்நோயினால் பாதிக்கப்பட்டவரின் மூளையில் திடீர் திடீரென ஆங்காங்கு மிக அதிகளவு நரம்பு தூண்டல் ஏற்படுகின்றது. இதனால் மூளை சிலவினாடிகள் செயலற்றுப்போகும். அடுத்து தூண்டல் ஏற்பட்ட மூளையின் பகுதியைப் பொறுத்து உடல் பூராகவும் வேகமாக துடிக்கலாம். TONIC CLONIC SEIZURES அல்லது ஒரு பகுதி அல்லது ஒரு கை அல்லது ஒரு கால் மட்டும் துடிக்கலாம்.

இவ்வாறு ஏற்படும் துடிப்பு ஒருமுறை மட்டும் ஏற்படலாம். இவ்வாறு தொடர்ச்சியாக ஏற்படும்போது அது பொதுவாக ஐந்து வினாடிகள் முதல் நாற்பத்து ஐந்து வினாடிகள்வரை நீடிக்கலாம். இதன்போது பாதிக்கப்பட்டவர் சுயநினைவை இழக்கலாம். சிலருக்கு சலம், மலம் போன்றன தானாகவே வெளியேறும்.

வலிப்பு நின்றபின் சிலர் சிறிதுநேரம் மிக சோர்வாக காணப்படுவர். சிலர் ஆழ்ந்த உறக்க நிலையை அடைவர். மேலும் சிலர் தாம் இருக்கும் இடம், சூழ உள்ளவர்கள் ஆகியோரை இனம் கண்டு கொள்ள முடியாத குழப்ப நிலை அடைவதுடன் சில சமயம் மற்றவர்களை தாக்க முனைவார்கள். மேலும் சிலர் சுயபுத்தி அற்ற நிலையில் இருப்பிடத்தை விட்டு வெளிநடப்பர். மேலும் சிலர் இதே நிலையில் வாகனத்தை செலுத்திச் செல்வதும் உண்டு.

இந்நோய் பயப்படவேண்டிய ஒன்றா என்று பலர் கேட்பதுண்டு. இந்நோய் தாக்கம் ஏற்படும்போது முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ மயக்கம் திடீரென ஏற்படுவதால், வாகனம் செலுத்துதல், இயந்திரவேலை போன்றவற்றில் ஈடுபட்டிருந்தால் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. மேலும் பொறுப்பான பதவிகளில் தொழில்புரியும்போது வலிப்பு ஏற்பட்டால் அதனால் பல அசௌகரீகங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டாகும்.

இந்நோய் ஏற்படுவதற்கு குறிப்பான ஒரு காரணத்தை சொல்ல முடியாதபோதும், பின்வரும் காரணங்கள் இந்நோய் உருவாக தூண்டுதலாக அமையாலாம் எனக் கூறப்படுகின்றது. அவையாவன:

1) பரம்பரை 2) பிரசவகாலத்தில் சிசுவுக்கு ஏற்படும் தாக்கங்கள்.

3) குழந்தைப்பருவத்தில் ஏற்படும் மூளை சம்பந்தப்பட்ட தொற்று நோய்கள்.

4) விபத்தில் ஏற்படும் தலைக்காயங்கள்.

5) நச்சுப்பொருட்களை சிறய அளவில் கிலகாலம் உள்ளெடுத்தல்.

இந்நோய் பெரும்பாலும் சிறிய வயதினிலேயே ஆரம்பித்துவிடும். மிகசிலருக்கு இளமை வயதில் ஆரம்பிக்கும்.

இது வலிப்பு நோய்தான் என நிச்சயப்படுத்த தகுதி வாய்ந்த மருத்துவரால் பரிசோதிக்கப்பட்டு, இரத்தப்பரிசோதனை, உஉஎ என்ற நரம்பு பரிசோதனை போன்றன செய்யப்பட வேண்டும்.

வலிப்புநோய் என்பது தனியான ஒருநோய். அதன்போது பாதிக்கப்பட்டவருக்கு வலிப்பு ஏற்படும் ஆனால் வேறு சிலநோய்களிலும், தற்காலிகமாக வலிப்பு ஏற்படலாம். இவ்வாறு ஏற்படும் வலிப்பு அடிப்படைநோய் கட்டுப்பட வலிப்பு நின்றுவிடும். அவற்றில் சில:

1) சிறுகுழந்தைகளுக்கு ஏற்படும் காச்சல் 2) மூளையில் ஏற்படும் கட்டி

3) மூளையில் ஏற்படும் குருதிப்பெருக்கு

4) இரத்தத்தில் ஏற்படும் கல்சியம் சத்து குறைவு 5) Tetanus ஏற்புவலி

இக்கட்டுரையின் நோக்கம் சாதாரண மக்களுக்கு பயன்தரும் குறிப்புகளைக் கொடுப்பதும் இந்நோய்பற்றிய ஒரு விளிப்புணர்வு ஏற்படுத்துவதுமேயாகும்.

வலிப்பு நோய்க்கு மருந்து போதிய பாதுகாப்பைத் தரும். மேலும் மருந்தை வேளை தவறாது உட்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

Ness & Co. Immigration Conveyance Licensing Family Disputes & Others.

Quick and prompt exchange and completion of buying or selling your home.

Further representation to avoid detention when signing on at Home Office.

New Premises License for your Off License, Take-away and Fish & Chips Joints and Fried Chicken Shops.

உங்கள் அகதி விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு நீண்டகாலம் வேலை செய்திருப்பீர்களாயின் விசா எடுப்பதற்கு appeals and representation on all Tribunal Hearing சம்பந்தமான சேவைக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

Direct Line: 020 8665 2226

Mr.Thavanesan (Ness)

to discuss in tamil or English

07956 913 164 / 020 8640 5050

38 London Road

Tooting, London, SW17 9HP

# UCMAS MENTAL ARITHMETIC

*Whole Brain Development Course*



## இப்பொழுது ரூட்டிங் மற்றும் லூசியத்தில்

5 வயது முதல் 12 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு அவர்களது அரிய திறமைகளை வெளிப்படுத்த ஒரு அருமையான வாய்ப்பை யூசிமஸ் நிறுவனம் அளிககிறது.






பயிற்சியின் மூலம் கிடைக்கும் பலன்கள்

- ஒரு முகப்படுத்தப்பட்ட சிந்தனை - Understanding
- தெளிவாகப் புரிந்துகொள்ளுதல் - Photographic memory
- போட்டோகிராபிக் மெமரி - Speed & Accuracy
- வேகம் மற்றும் துல்லியம் - Concentration
- படைக்கும் திறன் - Creativity
- தற்சார்பு நிலை - Self Reliance
- தன்னம்பிக்கை - Self Confience
- கவனிக்கும் திறன் - Listening skills

All Round Accademic Excellence

- தேசிய அளவில் போட்டிகள் - National Competition
- சான்றிதழ்கள் - Certificates

பயிற்சி விபரம்

- மொத்தம் - 10 நிலைகள் (Levels)
- ஒரு நிலை (Level) - 3 மாதங்கள்
- ஒரு மாதம் - 4 வகுப்புகள்
- ஒரு வகுப்பு - 2 மணிததியாலம்

**புதிய வகுப்புகள் வரைவில் தெடக்கம்**

கிழமை இறுதிநாட்களில் (ரூட்டிங்கில்)
Hill Brook School
Hill Brook Road
Tooting SW17

கிழமை இறுதிநாட்களில் மற்றும் கிழமை மாலை வகுப்புகள் (லூசியத்தில்)
லூசியம் சிவன் கேயில் (தமிழ் பள்ளி)
லூசியம் SE13

மேலும் விபரங்களுக்கு
மதி
**020 8402 3247**
**07801 734 704**

எங்கள் ஆசிரியர்கள் ----- சான்றிதழ்கள் பெற்றுள்ளனர்

# தர்ம அடி

சிறி
ஒரு பேப்பருக்காக

தர்மஅடி என்பது அனேகமாக ஊர்விட்டு வேறை ஊருக்குப் போய் ஏதாவது பிரச்னை வந்தால் தான் கிடைக்க சந்தர்ப்பம் உண்டு.

உங்களிலும் சிலபேர் இந்த தர்ம அடி எங்கையாவது வாங்கியிருக்கலாம் அல்லது தர்மஅடி கிடைக்க இருந்த நேரத்தில் தப்பியிருக் கலாம்.

அதையெல்லாம் வெளியில் சொல்ல மனம் வராது எப்பவாவது மனசுக்குள்ளை நினைத்து சந்தோசப்பட்டு கொள்ளுவிங்கள்.

அதே போல நானும் ஒரு முறை தர்ம அடி வாங்கியிருக்கிறேன் என்பதை பெருமையுடன் சொல்வது மட்டுமல்ல அதை நான் மட்டும் மனதுக்குள்ளேயே நினைத்து நினைத்து பெருமைப்பட்டுக்கொள்ளும் வஞ்சக எண்ணம் எனக்கு இல்லை எனவே உங்களிற்கும் தாராள மனதுடன் சொல்லி பெருமைப்பட்டு கொள் கிறேன்.

இந்த தர்மஅடி விழுகிறது என்றாலே உடனே யே சொல்லி விடலாம் யாராவது பெட்டையுடன் சேட்டை விட்டிருப்பினம் அல்லது ஏதாவது காதல் பிரச்சனையாய் இருக்கும். இவை இரண்டையும் தவிர்த்தால் வேறு காரணங்கள் குறைவாகத்தான் இருக்கும்.

சரி விசயத்துக்கு வாறன் இதுவும் 80 களில் நடந்த கதைதான்.

எங்கள் ஊரில் எங்கள் கோயில் மடத்து நண்பன் ஒருவனிற்கு அளவெட்டி கிராமத்தில் உறவுக்காரர்கள் இருந்தார்கள். அவனும் அந்த உறவுக்காரர்கள் வீட்டிற்கு போய் வந்து கொண்டிருந்த பொழுது அவர்களது அயல் வீட்டு பெண்ணொருவருடன் காதல் ஏற்பட்டு விட்டது. அந்தக் காதல் கதை கொஞ்சம் ஊருக்குள் கசியத் தொடங்கவே எனது நண்பனை அவனது உறவுக் காரர்கள் தங்கள் வீட்டிற்கு வர வேண்டாம் என்று சொல்லி விடவே அவனும் எப்படியோ கஸ்ரப்பட்டு வேறு வழிகளில் அடிக்கடி அந்த பெண்ணை சந்தித்து கதைத்துக் கொண்டுதான் இருந்தான்.

இது இப்பிடி இருக்க அளவெட்டி கும்பிளாவளை பிள்ளையார் கோயில் கொடியேறி திருவிழா தொடங்கியது.

பிறகென்ன ஊரிலை கோயில் கொடி ஏறினாலே இளசுகளிற்கு கொண்டாட்டம் தானே. இவனும் ஏறிய பிள்ளையார் கோயில் கொடியை தன்னுடைய காதல் கொடி ஏறியதா கவே நினைத்துக் கொண்டான். நம்ம நண்பனுக்கு தலைகால் தெரியாத சந்தோசம் ஏனெண்டால் இனி25 நாளும் அவனுடைய ஆள் கோயிலுக்கு தவறாமல் வரும் இவனும் கோயி லுக்கு போகிற சாட்டிலையே கச்சானோ சோழப்பொரியோ வாங்கி தின்றபடி தன்னுடைய ஆளுடன் கடலை போடலாம். அதுதான் அவனது சந்தோசத்துக்கு காரணம். ஆரம்பத்தில் தனியாகவே ஏதோ பக்தி முத்தின வனைப்போல காலையும் மாலையும் போய் அந்த பெண்ணின் தரிசனம் வாங்கி வந்து கொண்டிருக்கவே இவன் போய் வந்தது பெண்ணின் வீட்டு காரருக்கு தெரிந்து பெண்ணை மாலை திருவிழாவிற்கு போக விடாமல் தடுத்து விட்டனர்.

பகல் திருவிழாவிற்கு அதுவும் யாராவது துணையுடன்தான் அனுப்புவினம். இது நம்ம சினேகிதனுக்கும் கொஞ்சம் பயத்தை கொடுக் கவே அவனும் எங்களிற்கு சோடா கச்சான் வாங்கி தருவதாக சொல்லி எங்களையும் கெஞ்சி கூத்தாடி துணைக்கு கூட்டிக்கொண்டு போவான். பிறகென்ன எங்களிற்கும் வீரம் பிறந்துவிடும்

"டேய் நாங்கள் இருக்கிறம் கவலைப்படாதை நீ பயப்பிடாமல் போய் உன்ரை ஆளோடை கதை நாங்கள் பாத்து கொள்ளுறம்"

என்றபடி உள்ளுக்கை உதறல் எடுத் தாலும் அதை காட்டிக்கொள்ளாமல் அவன் வாங்கிதந்த சோடாவை உறுஞ்சியபடி கோயில் வீதியை சுற்றி வந்து கொண்டிருந்தோம்.

அவனும் எப்படியாவது அந்தப்பெண்ணை சந்தித்து ஒரு வசனமாவது பேசி விட்டு வந்து விடுவான். ஆனால் கோயில் திருவிழாவும் முடிந்து தேர்த் திருவிழாவை நெருங்க நெருங்க அந்த பெண்ணிற்கும் பாதுகாப்பு கூடிக் கொண்டே போனது.

அதனால் ஆரம்பத்தில் நண்பனிற்கு உதவி யாய் இரண்டு மூன்று பேர் மட்டுமே போய் கொண்டிருந்த நாங்களும் பாதுகாப்பிற்காக ஆக்களின் எண்ணிக்கையை கூட்டவேண்டி வந்தது.

அதாவது தேர்த்திருவிழா அன்று வழமை போல நாங்கள் ஒரு எட்டுப்பேரளவில் போயிருந்தோம். கும்பிளாவளை பிள்ளையார் கோயில் பிரபலமான ஒரு கோயில் என்பதால் பல ஊர்களிலும் இருந்து வந்திருந்த பக்தர் களால் நிரம்பியிருந்தது.

எனவே அதற்குள் அவனது ஆளை தேடிப் பிடிப்பதென்பது சிரமமாய் இருந்தது .உடனே போனடிச்சு 'கலோ நீ எந்த வீதியிலை நிக்கிறாய்' எண்டு கேப்பதற்கு அந்தக்காலத்தில் என்ன கைதொலைபேசியா இருந்தது.

இப்ப நானும் மனிசியும் இஞ்சை சுப்பர் மாக்கற்றுக்கை போனாலே மனிசியை காணா மல் நான் சில நேரம் போனடிச்சு எங்கையப்பா நிக்கிறாய் எண்ட மனிசி பின்னாலை நிண்டு நுள்ளிப்போட்டு ஏனப்பா கத்துறாய் பின்னாலை தான் நிக்கிறன் எண்டும்.

சரி திரும்ப அளவெட்டிக்கே போவம்.சன நெருக்கம் கூட இருந்ததாலை நாங்கள் இரண்டு பிரிவா பிரிஞ்சு அந்த பெண்ணை தேடுறதெண்டு முடிவெடுத்தம்.

எனக்கு அந்த பெண்ணை தெரியும் எண்ட தாலை என்னோடை ஒரு குறூபும் நண்ப னோடை மற்ற ஒரு குறூப்பும் தேடுறது கடைசியாய் தேரடியிலை சந்திக்கிறது எண்டு முடிவெடுத்து தேடத் தொடங்கினம்.

எனது நண்பனும் ஒரு பக்கற் சோழப் பொரியை வாங்கிக்கொண்டு தனது காதலியை தேடப் போய் விட்டான்.

உள்வீதி வெளிவீதி எண்டு மாறி மாறி சுத்தியும் அவளை கண்டு பிடிக்க முடியவில்லை. பூசை முடிஞ்சு தேரும் இழுத்து முடிஞ்சு அன்னதானமும் தொடங்கி விட்டி ருந்தது. நண்பனின் கையில் இருந்த சோழப் பொரியும் கசிந்த வியர்வையில் நசிந்து போயி ருந்தது. நான் நண்பனிடம் சொன்னன்

" டேய் அவள் வரேல்லை போலை அன்ன தானமும் தொடங்கிட்டு பசிக்கிது அதாலை வா பேசாமல் சாப்பிட்டு போவம்" எண்டவும். நண்பனோ விடுவதா இல்லை

"இல்லையடா கட்டாயம் எப்பிடியும் வருவன் எண்டவள் சனம் கூடவா இருக்கு அதாலைதான் கண்டு பிடிக்க ஏலாமல் இருக்கு கொஞ்சம் பொறுப்பம் சனம் குறைய எப்பிடியும் சந்திக்கலாம்" எண்டான்.

## பி.வாசுவின்ரை படங்களிலை வாற வில்லனின்ரை கையாட்கள் மாதிரி வெள்ளை வேட்டி சட்டையோடை ஒரு பத்து பதினைஞ்சு பேர் எங்களை நோக்கி பாஞ்சினம்.

அவனைப்பாக்கவும் பாவமாய் இருந்தது. அப்பதான் குழந்தையை தவற விட்ட யாரோ ஒருவர் தன்னுடைய பிள்ளையின் வயது போட்டிருந்த சட்டையின் நிறம் எல்லாம் சொல்லி ஸ்பீக்கரில் அறிவித்துக் கொண்டி ருந்தார்கள். அப்பதான் எனக்கு திடீரெண்டு ஒரு யொசினை வந்தது. உடனை நண்பனிட்டை சொன்னன்

"சரி உன்ரை ஆள் கோயிலுக்கு வந்திருந் தால் கட்டாயம் சந்திக்கலாம் அதுக்கு என்ன ட்டை ஒரு ஐடியா இருக்கு வா" எண்டு அவனை இழுத்துக்கொண்டு மைக் செற் இருந்த இடத்துக்கு போய் மைக் காரரிடம் நண்பனைக் காட்டி

"அண்ணை நாங்கள் கோயிலுக்கு வந்த இடத்திலை இவரின்ரை தங்கச்சியை மாற விட்டிட்டம் இப்ப அவசரமா வீட்டை போக வேணும் அதாலை ஒருக்கா மைக்கிலை அறிவிக்க வேணும்" எண்டவும். மைக்காரர் பெயர் வயசு போட்டிருந்த சட்டை நிறம் எண்டு விசாரணையை தொடங்க நான் சொன்னன்

"அண்ணை அவாவுக்கு வயசு 15 நீங்கள் அவாவின்ரை பெயரை மட்டும் சொல்லி இவனி ன்ரை பெயரையும் சொல்லி இவர் தேடுறார் அதாலை உடைனை தேரடிக்கு வரச்சொல்லி விடுங்கோ" எண்டவும். மைக்காரருக்கு கொஞ் சம் சந்தேகம் வந்திருக்க வேணும் எங்களை ஒரு மாதிரியாய் பாத்தபடியே அந்த பெண்ணின் பெயரை சொல்லி அவரது அண்ணன் தேடுகி றார் உடனடியாக தேரடிக்கு வரவும் எண்டு என் நண்பனின் பெயரையும் அறிவித்து விட்டார்.

நாங்கள் உடனடியாக தேரடிக்கு போய் நின்று கொண்டோம். சரி இனித்தான் கிளைமாக்ஸ்.

சனக்கூட்டமும் குறைந்திருந்தது கொஞ்ச நேரத்தில் திடீரெண்டு எங்களுக்கு முன்னாலை அந்த மைக்செற் காரர் எங்களை பாத்து இவங்கள் தான் ஆக்கள் என்டு கையை காட்டி னார்.

அவருக்கு பின்னாலை பி.வாசுவின்ரை படங்களிலை வாற வில்லனின்ரை கையாட்கள் மாதிரி வெள்ளை வேட்டி சட்டையோடை ஒரு பத்து பதினைஞ்சு பேர் எங்களை நோக்கி பாஞ்சினம். என்ன நடக்கபோகுது எண்டு நினைக்கிற அந்த செக்கனிலேயே அடிவிழத் தொடங்கியது.

அளவெட்டி பகுதி பெரும்பாலும் விவசாயம் செய்யிற ஆக்கள் மண்வெட்டி பிடிச்ச கையாலை அடிவாங்கினால் எப்பிடி இருக்கும் எண்டு ஒருக்கால் கற்பனை பண்ணிப் பாருங்கோ.

யாருக்கு எப்பிடியெல்லாம்அடி விழுந்தது எண்டு தெரியாது . காதைப்பொத்தி எனக்கும் ஒரு அடி விழுந்தது. ஏதோ யாழ்தேவி றெயின் இடம் மாறி கும்பிளாவளை பிள்ளையார் கோயில் வீதியாலை ஓடினது மாதிரி எனக்கு ஒரு உணர்வு.

அதே நேரம் பின்னாலை இருந்து யாரோ சேட்டிலை பிடிச்சு இழுக்க நல்ல வேளை நான் போட்டிருந்தது கொஞ்சம் பெரிய சேட்டு அது மட்டுமில்லை கழுத்திலை போட்டி ருந்த சங்கிலி வெளியாலை தெரியட்டும் எண்டு இரண்டு தெறியையும் கழட்டி விட்டிருந்த படியால் சுலபமாய் சேட்டை உருவி கழட்டி விட்டு ஓடிப்போய் சைக்கிளை எடுத்துக்கொண்டு அளவெட்டி தோட்டவெளி வரம்பாலை ஓடி ஒரு மாதிரி வீட்டை வந்து சேந்திட்டன்.

எங்களோடை வந்த ஒரு நண்பன் சைக்கி ளைக்கூட எடுக்கவில்லை ஓடியந்திட்டான். மறுநாள் எனக்கு காதில் இரைச்சல் குறைந்தி ருந்தாலும் ஒரு பக்கத்துகாது சரியாய் கேட்காத மாதிரி ஒரு உணர்வு தலையை சரித்து காதுக் குள் விரலை விட்டு குடைந்தபொழுது காய்ந்து போன இரண்டு சோத்து பருக்கை வெளியில் வந்தது. அப்பதான் விழங்கியது பாவிப்பயல் யாரோ அன்னதானத்திலை சாப்பிட்டிட்டு கையை கழுவாமலேயே சோத்துக்கையாலை அடிச்சிருக்கிறான்.

பசிக்கிறவைக்கு சோறு போட்டால் தர்மம் எண்டிறவை. அதுமாதிரி சோத்து கையாலை அடிக்கிறதைத்தான் தர்மஅடி எண்டு எனக்கு அப்பதான் விழங்கினது.

அடுத்தநாள் வழைமைபோல நாங்கள் எங்கடை கோயில் மடத்திலை சந்திச்சு எவருமே அடிவாங்காத மாதிரி கதைத்து கொண்டோம்.

எனது நண்பனோ பிறகு தன்னுடைய காதலியை காணமுடியாமல் சோகத்தில் சில நாட்கள் திரிந்தான். ஒரு நாள் மாலை வழமையாய் கோயில் மடத்திற்கு வந்தவன் கலகலப்பாய் கதைத்துவிட்டு எங்கள் எல்லோருக்கும் பணிஸ்சும் சோடாவும் வாங்கித் தந்தவன் அன்றிரவு தங்கள் தோட்டத்திற்கு போய் பொலிடோலை(பூச்சிமருந்து) குடித்து தற்கொலை செய்து கொண்டு விட்டான்.




NAG & CO
SOLICITORS

Tel: 020 7737 1211 | Fax: 020 7737 0809
Unit 3 Holles House, Overton Road, Myattsfield Road South, London SW9 7JN
Nearest Underground - Brixton Station on Victoria Line and Oval Station on Northern Line

- CRIME
- CONVEYANCING
- MATRIMONIAL
- IMMIGRATION
- TRAFFIC MATTERS
- LANDLORD & TENANTS
- POLICE STATION MATTERS
- EMPLOYMENT MATTERS
- WORK PERMITS

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ***ஒரு பேப்பர்*** நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பிவையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 416-297-4999
Fax: 416-335-6009

பிரான்ஸ்:
Tel: 01 7289 8165

சுவிஸ்:
Tel: 043 5000 277

email: info@orupaper.com



## மணமகள் தேவை

1) Professional groom, 30 years, 5' 8", on 5- year work visa, looking for a bride, a professional, or an undergraduate; sponsorship available, if needed. Ref: 1160.

2) லண்டனில் 11 வருடங்களாக தொழில் புரியும் மணமகன் 30 வயது 5" 7"இ நிரந்தர வதிவிடமையுள்ள மணமகளை தேடுகின்றார். Ref: 1159.

3) Professional, U.K qualified, 29 years, 5' 11", looking for a suitable bride in the U.K. Ref: 1158.

4) லண்டனில் வதிவுடமையுடன் தொழில் புரியும் A/L படித்த 43 வயது, 5' 2", மணமகனிற்கு தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref: 1157.

5) கைதடியில் வலுவிலந்தோர் பாடசாலையில் படித்த, வாய்பேச முடியாத, 39 வயது, 5'2" 11 வருடங்களாக ஜேர்மனியில் வசிக்கும் மணமகனிற்கு தகுந்த மணமகளை தேடுகின்றனர்.Ref: 1156.

6) Engineer from UK Uni., 27 years, 5'6", on temp.visa, seeking a suitable bride. Ref:1155

7) Qualified Accountant, 36 years, 5'9", permanant stay status, looking for a suitable bride. Ref:1154

8) கொழும்பில் வசிக்கும், 27 வயது, 5'5", படித்த மணமகனுக்கு, கனடாவில் பிரஜாவுரிமையுள்ள தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1153

9) இந்தியாவில் கணனியில் நன்றாக தேர்ச்சி பெற்று தொழில் புரியும், 37 வயது, 5'6', மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றார். Ref:1152

10) பிரான்ஸில் 2 வருடங்களாக வசிக்கும், 4 6வயது, 5'6", மணமகனுக்கு, தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1151

11) A graduate from India, working over there, as the team leader in a private enterprise, 29 years, 5' 7", looking for a bride, a permanent resident, in Europe. Ref. 1150

12) UK citizen, living in Canada, well educated and with long service achievements in high positions, 46 years, 5' 11" tall, a divorcee, looking for a suitable bride. Ref: 1149

13) பிரான்ஸில் வசிக்கும், 31 வயது, 5'11", மணமகனுக்கு, நிரந்தர வதிவிடவுரிமையுள்ள மணமகளை தேடுகின்றனர். Ref:1148

14) An Accountant in Germany since child hood, in the UK since 2004, 28 years, 5'8", looking for a suitable bride. Ref:1147

15) Msc quilalified accountant on working visa, 29 years 5'7", a divorce, looking for a professional bride Ref:1146

16) மட்டக்களப்பை சேர்ந்தவரும், 3 வருடங்களாக பிரான்சில் வசிக்கும், 28 வயது, 5'3", மணமகனுக்கு, பிரஜாவுரிமையுள்ள மணமகளை தேடுகின்றனர். Ref:1145

17) In UK since 2000, on student visa, UK graduate, 29 years, 5'10", looking for a suitable bride with PR Ref:1142

18) In UK since 1998, 35 years, 6'2", O/L educated, in business, looking for a suitable bride.Ref:1141

19) Network Engineer, 7yrs. in the U.K, 29 years, 5'11", seeks a suitable bride.Ref: 998

20) IT பட்டதாரி, 30 வயது, 5'11", Student visaஇல் உள்ள மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1140

21) லண்டனில் 6 வருடங்களாக வசிக்கும், A/L படித்த, 37 வயது, 5'11", மணமகனுக்கு, தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1139

22) லண்டனில் 6 வருடங்களாக வசிக்கும், O/L படித்த, 29 வயது, 5'7", மணமகனுக்கு, தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1138

23) அவுஸ்திரேலியா பிரஜாவுரிமையுள்ள, computer engineer, 27 years, 5'8", மணமகனுக்கு, தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1137

24) கனடா பிரஜாவுரிமை, 28 வயது, 5'6", Engineer மணமகனுக்கு, தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 1136

25) பிரான்ஸில் வசிக்கும், 29 வயது, 5'11", M Sc பட்டதாரி மணமகனுக்கு, தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1135

26) பிரான்ஸில் வசிக்கும், 34 வயது, 5'7", மணமகனுக்கு, தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1134

27) லண்டனில் 6 வருடங்களாக வசிக்கும், 34 வயது, 5'7", A/L படித்த, மணமகனுக்கு, தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1132

28) In the UK since 1998, an honers Graduate, 35 years, 5'6", seeking a bride with a permanant residence from EU, Aus.or Canada. Ref: 1130

29) இந்தியாவில் வசிக்கும், 27 வயது, 5'5", Electronic Technician, மணமகனுக்கு தகுந்த மணமகளை EU, Canadaவில் தேடுகின்றனர். Ref:1127

30) லண்டனில் 7 வருடங்களாக வசிக்கும், 32 வயது, 5'9", பட்டதாரி மணமகனுக்கு, தகுந்த மணமகளை EU வில் தேடுகின்றனர். Ref:1126

31) ஜோர்ஜியாவில் படித்த Doctorம், தற்சமயம் UK ல் student visa வில் இருக்கும், 32 வயது, 5'5", மணமகனுக்கு, தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1125

32) சுவிஸில் 10 வருடமாக வசிக்கும், 36 வயது, 5'6", A/L படித்த, மணமகனுக்கு தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1124

33) யாழ்ப்பாணத்தில் ஆசிரியராக பணிபுரியும், 28 வயது, 5'7", மணமகனுக்கு, தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1122

34) UK ல் நிரந்தரவதிவுடமை உள்ள, 29வயது, 5'9", மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1120

35) Professional 29 years, '6 ' tall,in the U.K since childhood, seeking a suitable bride. Ref: 1117

## மணமகன் தேவை

1) யாழ்ப்பாணத்தில் விஞ்ஞான ஆசிரியையாக வேலை செய்யும் 36 வயது, 5' 3" மணமகளிற்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref: 1499.

2) Brother looking for sister 32 years 5' 3", working in Colombo, a suitable groom. Ref: 1498.

3) யாழ்ப்பாணத்தில் தொழில் புரியும் பட்டதாரி, 35 வயது, 5'6" மணப்பெண்ணிற்கு படித்த வதிவிடமை உரிய வரனை கனடா, EU நாடுகளில் தேடுகின்றனர். Ref: 1497.

4) கொழும்பில் வேலை புரியும் 31 வயது, 5' மணமகளிற்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref: 1496.

5) Civil Engineer, grew up in Germany, presently working in the UK, 28 years, 5'4", looking for a suitable groom. Ref:1495

6) Netherland citizen, and undergraduate, 23 years, 5'5", looking for a suitable groom. Ref: 1494

7) நோர்வேயில் சங்கீத பட்டதாரி, 34 வயது, 5'3", மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1493

8) இலங்கையில் வசிக்கும், 38 வயது, 5'1", A/L படித்த, மணமகளுக்கு தகுந்த மணமகனை கனடாவிலுள்ள பெற்றோர் தேடுகின்றனர். Ref:1492

9) கொழும்பில் வேலை புரியும், O/L படித்த, 23 வயது, 5'5", மணமகளுக்கு தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1491

10) கொழும்பில் பட்டதாரி ஆசிரியை, 38 வயது, 5'4", மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1490

11) கொழும்பில் வேலை புரியும், 32 வயது, 5'2", மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1489

12) A graduate from Jaffna-Uni., doing Special there, 27 Years, 5' 4", looking for a suitable groom. Ref. 1488

13) யாழ் பல்கலைப் பட்டதாரி, 26வயது, 5'2", மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1487

14) A graduate from Sri Jeyewar'pura-Uni, working as an assistant accountant in Colombo, 26 years, 5' 4", looking for a suitable groom in EU or Australia. Ref. 1486

15) லண்டனில் வசிக்கும்,O/L படித்த, 29 வயது, 5'8", தாரமிழந்த மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1485

16) இந்தியாவில் வசிக்கும் பட்டதாரி, 22வயது, 5'உயரம், மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டன், கனடாவில் தேடுகின்றனர். Ref :1484

17) Uk born, 25 years, 5'5", a grauate in accountancy, looking for a professional groom. Ref :1483

18) லண்டன் வதிவிடவுரிமையுள்ள, பட்டதாரி, 29 வயது, 5'3", மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1482

19) யாழ்ப்பாணததில் பணி புரியும், பட்டதாரி, 33வயது, 5'உயரம், மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1481

20) வவுனியாவில் ஆசிரியை, 21 வயது, 5'3",A/L படித்த, மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1480

21) In the UK since 1985, A British citizen, 25 years, 5'2" a grauate and well employed looking for a suitable groom. Ref: 1479

22) கொழும்பில் வசிக்கும், விவாகரத்துப் பெற்ற 32 வயது, 5'2", மணமகளுக்கு தகுந்த மணமகனை EU / canadaவில் தேடுகின்றனர். Ref:1478

23) Qualified Doctor, working in Colombo, 28 years, 5'5", looking for a professional with PR in the UK. Ref:1477

24) கொழும்பில் வேலை செய்யும், 38 வயது, 5'1", மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1476

25) யாழ்ப்பாணத்தில் வசிக்கும் கல்வியற் கல்லூரி ஆசிரியை, 23 வயது, 5'2", மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டனில் தேடுகின்றனர். Ref:1475

26) கொழும்பில் வசிக்கும், O/L படித்த, 29 வயது, 5'2", மணமகளுக்கு தகுந்த கொழும்பில் வேலை பார்க்கும் மணமகனை தேடுகின்றனர். Ref:1474

27) வவுனியாவில் அதிபராக கடமையாற்றும்,43 வயது 5'5", மணமகளுக்கு தகந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1473

28) Born in Britain, a Graduate, 26 years, 5'4", seeking a suitable groom, from EU or USA. Ref:1472

29) Born in Britain, Professional Graduate, 33 years, 5'4", seeking a suitable groom, from EU or USA. Ref:1471

30) சென்னையில் வசிக்கும் பட்டதாரி, 28 வயது, 5'1", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1469

31) யாழ்ப்பாணத்தில் அரசாங்க உத்தியோகராக இருக்கும், 34 வயது 4'8", பட்டதாரி மணமகளுக்கு தகந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1468

32) யாழ்ப்பாணத்தில் அரசாங்க உத்தியோகராக இருக்கும், 37 வயது 4'5", பட்டதாரி மணமகளுக்கு தகந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1467

33) யாழ்ப்பாணத்தில் வசிக்கும், 43 வயது 5'2", மணமகளுக்கு தகந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1466

34) German citizen, 30 years, 5'3", educated & well employed,a divorsee looking for a suitable groom. Ref:1465

35) தாயகத்தில் பட்டதாரியாக வேலை செய்யும், 29 வயது, 5'3", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1464

36) கொழும்பில் கணக்காளராக பணி புரியம், 26 வயது, 5'5", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1463

37) கொழும்பில் வசிக்கும், 24 வயது, 5'5", படித்த மணமகளுக்கு, தகுந்த மணமகனை ஐரோப்பிய நாடுகளில் தேடுகின்றனர். Ref:1462

38) மலேசியாவைச் சேர்ந்தவரும்,40 வயது, 5'5", படித்த, கணவனை இழந்த மணமகளுக்கு, தகுந்த மணமகனை கனடா, ஐரோப்பிய நாடுகளில் தேடுகின்றனர். Ref:1461

39) கொழும்பில் வங்கியில் முகாமையாளராக வேலை செய்யும், 41 வயது, 5'1", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1460

40) பிரான்ஸ் பிரஜாவுரிமை, 33 வயது, 5'4", படித்த மணமகளுக்கு, தகுந்த மணமகனை பிரான்ஸில் தேடுகின்றனர். Ref:1458

41) கொழும்பில் வசிக்கும், 47 வயது, 5'6", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1456

42) Educated bride, working in Colombo, 24 years, 5'2", seeks a suitable groom in the U.K. Ref:1453

43) கொழும்பில் வேலை செய்யும், பட்டதாரி மணமகள், 32 வயது, 4'10", தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1452

44) Professional bride, 34 years, 5'8", a U.K citizen, looking for a suitable groom. Ref:1451

45) Working in Colombo, 36 years, 5'1", A/L quarlified, seeks a suitable groom in the E.U or Canada . Ref:1450

46) In the U.K, on student visa, doing Ph.D, 34 years, 5'1", looking for a qualified groom in Europe with PR Ref:1449

47) லண்டனில் வசிக்கும், விவாகரத்துப் பெற்ற, 34 வயது, 5'6", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1448

48) Teacher in Jaffna, 34 years, 5'2", looking for a suitable groom. Ref:1447

49) கனடாவில் வசிக்கும், 30 வயது, 5'2", விவாகரத்துப் பெற்ற மணமகளுக்கு, தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1446

50) கனடா பிரஜாவுரிமையுள்ள, 46 வயது, 5'5",Hotel Management படித்த மணமகளுக்கு, தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1445

51) Govt. servant in Jaffna, 29 years, 5'3", a graduate, seeks a groom in Sri Lanka or abroad. Ref:1444

52) Jaffna born, in the U.K on student visa, 35years, 5'4", A/L qualified seeks a suitable groom. Ref:1443

53) மட்டக்களப்பில் பிறந்து A/L படித்து ஆசிரியையாக கடமை புரியும் 26 வயது 5'1" தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1442

54) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 28 வயது 5'2" கொழும்பில் வேலை செய்யும் மணமகளுக்கு தகந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1440

55) Professional 27 years, 5'5",Ten years in the UK, looking for a Professional groom.Ref:1437

56) கொழும்பில் தொழில் புரியும் பட்டதாரி, 38 வயது, 5'4", தகுந்த மண மணமகனை Canadaவில்/ இலங்கையில் தேடுகின்றார். Ref: 1433

57) பல்கலைக்கழக மாணவன், 21 வயது, 5'4", மணமகளுக்கு தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றார். Ref:1432

58) இந்தியாவில் Docterஆக பணிபுரியும், 38 வயது, 5'3", மணமகளுக்கு தகுந்த மணமகனை India/ Sri Lankaவில் தேடுகின்றார். Ref:1430

59) Professional bride, a Canadian citizen 31 years,5'3',with traditional values seeking a suitable groom Ref: 1427

60) இந்திய மருத்துவ கல்லூரியில் பட்டம் பெற்ற 29 வயது, 5'8', கொழும்பில் வசிக்கும், மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றார். Ref:1426

61) Professional bride, born in France, 24 years, 5'4', seeking a suitable groom. Ref:1425

62) டென்மார்க்கில் வசிக்கும், 24 வயது, 5'5', இறுதியாண்டு பல்கலைக்கழக மணமகளுக்கு தகுந்த மணமகனை ஐரோப்பாவில்/ இலங்கையில் தேடுகின்றார்.Ref: 1424

63) Canadian Citizen, 35 வயது, 5', விவாகரத்துப் பெற்ற மணமகளுக்கு, தகுந்த மணமகனை லண்டனில் தேடுகின்றார். Ref: 1422

# கவிதை

## அப்துல் ரவூப்

குமுறிக்கொண்டிருந்தபோது
புலப்படவில்லை—
அனல் விளாசியபோதுதான்
எரிமலையொன்று அடங்கிக் கிடந்ததை
அறிந்தோம்.
அவன் கரும்புலியாக வெடிக்கவில்லை
முகவரி சொல்லாது
எங்கள் வாழ்வோடு அவிந்து போனான்.
இன்றும் கூட,
எஞ்சியிருக்கும் அனைவர்
முகத்திலும் உமிழ்ந்துதான் போனானோ
என்றதோர் ஐயத்தில்
குறுகிப்போகிறது எம் ஆத்மா!

அவனது மௌனத்துக்கு யார்
அர்த்தம் சொன்னார்?
அவன் எழுதாத வரிகளை
எவர் எடுத்து வாசித்தார்?

விண்ணில் எழுந்து
உலகாளும் வேட்கையாலே
மண்ணுலகம் சகதியாய் கிடக்கிறது.
இருந்தும்,
வாய்நிறைந்த
சனநாயக பாராயணமே
வல்லாதிக்கரின் வாழ்வை ஓட்டுகிறது!
அந்த மென்மை இதயம்
வெந்து கருகுமுன்னர்
அத்தனை போலிகளுக்கும்
வாய் விலங்கு பூட்டியதை
யாரேனும் மறப்பீரோ?

இன்னுமா உங்கள் இதிகாசத்தில்
தர்மமும் கருணையும்
அன்பும் அகிம்சையும்
கொட்டிக் கிடப்பதாய்
கொடி பிடித்து ஊளுகிறீர்
தர்ம சீலரே!
நேர்மைத் திறன் இருப்பின்
பேர் எழுதிப் போகாத
பிள்ளையின் நோன்புக்கு
இன்றேனும் உங்களிடம்
ஏதும் பதிலுண்டோ சொல்!

— ந. ஹேமராஜ்

## குடுகுடு

நல்ல காலம்
வருகுது
நல்ல காலம்
வருகுது
தெருவிலேயே நிற்கிறான்
குடுகுடுப்பைக்காரன்.

- *கவிஞர் காசி ஆனந்தன்*

## இதுதான் காதல்

தென்றலுக்கோ மலர்மீது தீராக் காதல்
தேன்சுரக்கும் மலருக்கோ வண்டில் காதல்
தென்றலோ காதலால் பூமீது மோதும்
தெரிந்தாலும் வண்டந்த வண்டோடு போகும்!

சலசலக்கும் அருவிக்கோ நதியில் காதல்
சஞ்சரிக்கும் நதியதற்கோ கடலில் காதல்
அருவிதினம் ஊற்றெடுத்து நதியில் பாயும்
அலைகடலில் தலைவைத்து நதியும் சாயும்!

பஞ்சுநிகர் முகிலதற்கோ நிலவில் காதல்
பனிபடர்ந்த மலைமீதே நிலவின் காதல்
கெஞ்சிமுகில் சிலவேளை நிலவைப் பார்க்கும்
கொஞ்சிவிட நிலவந்த மலையை நோக்கும்!

இமைகளுக்கோ கண்மீது இருக்கும் காதல்
இருவிழிக்கும் அதைமீறி அப்பால் காதல்
இமைமூடித் தனையந்த விழிக்குக் காட்டும்
இருவிழியும் அதைவிட்டு வெளியே நோக்கும்!

வான்மழைக்கு நிலன்மீது வளரும் காதல்
வன்நிலமோ நெருஞ்சிக்கே மார்பு காட்டும்
வான்மழையின் மென்துளியை விரும்பா மண்ணோ
வளர்நெருஞ்சி முட்கீறும் நோவுக்கு ஏங்கும்!

தனையடக்கித் திசைவகுக்கும் துடுப்பைக் காவிக்
காதலித்து மகிழ்ந்திருக்கும் ஓடம் என்றும்
அலையெனும்கை மெதுவாக எடுத்து ஏந்தும்
ஆறுகளைப் பார்க்காது இதுதான் காதல்!

- *இரா. சம்பந்தன்*

## கோபம்

உன்னை நானும்
என்னை நீயும்
விழுங்கிவிடுவதாய்க் கருதிய
எச்சரிக்கையின் இறுக்கங்களை
நம் முகங்களில் படரவிட்டு
ஒருவரையொருவர் நம்பாமலேயே
ஒரு நீண்ட பயணம் முடித்து
விரோதத்திற்கும் நட்பிற்கும் இடையே
நாம் விலகி நின்று
பரஸ்பரம் சிரித்துக் கொள்கையில்
கூடவே நம்மைப் பார்த்து
கைதட்டி சிரித்துப் போகும்
நாம் நழுவ விட்ட காலங்கள்!

- *சிறீ*

## சிரித்த சூரியனே!

சிரித்தபடியே
மறைந்து போனது
இந்த இளஞ் சூரியன்...!

பூவுடல் மீதும் கலையாத புன்னகை ....!
கற்றவரோடு பேசினால் என்ன
கனிமண்ணை மூளைக்குள்ளே பெற்றவரோடு
பேசினால் என்ன
அனைவரையும் ஆட்கொள்ளுவான்.

தமிழ் செல்வா
உன் வழியையும்
நீ பேசிய மொழியையும்
அறிந்து, இருந்தால் நிச்சயம்
மகிழ்ந்திருப்பார் தந்தை செல்வா.

உலகம் சொல்லியது!
தீர்வுக்குவழி அழிந்தான் என்று
உன் இழப்பு வந்து சொல்கிறது
தீர்வுக்குரிய வழி
மறந்தான் என்று.

உன் உறக்கம் முழுதையும்
விடுதலைக்காய் மறந்தான்.
எம்மை மீட்க கையில் எடுக்கும் ஒரு வழியும்
இனி மறந்தான்.

புன் நகையே உன் சிரிப்பு
போட்டானே பாவி அதை அழிக்க
வானிலிருந்து வெடிகுண்டு நெருப்பு.

தமிழ் செல்வா
உலகெங்கும் பேச்சு செல்வான்
தமிழனின் வேதனைகளை
உரக்கச் சொல்வான்
உறுதியாக எழுந்த வெலவான்
சாய்ந்தெனவரியதே
விழுங்கியதே
சிங்களத்தின் ஊளித் தீ.

சிங்களத் தோடு பேசும்
மேசையிலே
பால சிங்கத்தோடு அருகிருந்த
புலி நீ
போனாயே பாலசிங்கத்தின் வழியிலே

கலையவில்லையே தோழனே
பூவுடல் மீதும் உன்
புன்னகை.....

- *மட்டுவில் ஞானக்குமரன்*

"வாயப்பாத்துக் கொண்டு நிக்காதையுங்கோ
வாருங்கோ வந்து சேருங்கோ"

புதிதாக யாரும் இணையலாம்
www.orudirectory.com

# அறுவைப் பக்கம்

## இது ஓகேயா?

தாங்க முடியலை சாமி. நாட்டுல ஏன் இப்படி கொடுமை எல்லாம் நடக்குது.

பெண்கள் புகுந்த வீட்டுக்கு போய்த்தான் தீர வேண்டுமா. பெண்கள் மாமியாரோடு வாழ்ந்துதான் தீர வேண்டுமா.

கணவனுக்காக தியாகம் செய்து பெண் வாழவேண்டுமா. உப்புமாவை பெண்தான் கிண்ட வேண்டுமா. இது என்ன பெண் அடிமைத்தனம். ஆண் கிண்டினால் உப்புமா வராதா.

குடும்பம் என்ற அமைப்பிற்காக பெண் ஓடாய்த் தேய வேண்டுமா. மாமியார் என்ற ராட்சசியிடம் பெண் ஏன் கஸ்டப்படவேணும். (மாமியார் கூட பெண்தான் எண்ணுறதை வசதியா மறந்துடுங்க. ப்ளீஸ்.)

ஒரு ஆணுக்கு மாமியார் வீட்டுக்கு போவது மானப் பிரச்சனை என்றால் பொண்ணுக்கும் அது மானப்பிரச்சனைதான் இல்லையா.

ரொம்ப கரெக்ட். ஏ்ன்ன பண்ணலாம்?

கல்யாணம் பண்ணின கையோட ஆண் மானத்தோட தன்னோட வீட்ல மட்டும் வாழணும். அதே மாதிரி பெண்ணும் மானத்தோட தன்னோட வீட்ல வாழணும்.

இவங்க எதுக்கு ஒருத்தர் மானத்தை ஒருத்தர் விட்டுக் கொடுத்துட்டு அடுத்தவங்க வீட்ல போய் வாழணும் என்று கேட்கிறேன். கல்யாணம் பண்ண கையோட ஆணும் பெண்ணும் மானத்தோட தனித்தனியா வாழ்ந்துட்டா பிரச்சனை தீர்ந்திடும் இல்லையா?

இல்லை சேர்ந்துதான் வாழணுமா. என்ன பண்ணலாம். ம்ம்ம்....

இந்த 'மாமியார்.. மாமனார் கொடுமை எல்லாம் பொண்ணுக்கு வரக்கூடாது இல்லையா அதாலை பையன் கல்யாணம் ஆன கையோட 'இந்தாப்பா இந்தாம்மா. எதோ பெத்தீங்க. வளர்த்தீங்க. உங்க கடமை முடிஞ்சி போச்சுது. செத்தீங்கன்னா செய்தி சொல்லுங்க. வந்து கொள்ளி போடுறேன்' என்று சொல்லிட்டு கிளம்பி வந்துடணும்.

அதே மாதிரி பொண்ணும் அவங்க அப்பா அம்மா கிட்ட சொல்லிட்டு வந்துடணும். பிறகு மானப் பிரச்சனை இல்லாம இரண்டு பேரும் வாழலாம்.

அடுத்ததா டேர்ம்ஸ் அண்டு கண்டிசன்ஸ்

ஆண் இருபதாயிரம் வாங்கி பொண்ணு பத்தாயிரம் வாங்கினா ஆண் ஒரு வேளை சமைக்க வேண்டியது. பொண்ணு இரண்டு வேளை சமைக்க வேண்டியது.

பொண்ணு இருபதாயிரம் வாங்குது. பையன் பத்தாயிரம் வாங்குறானா. பையன் இரண்டு வேளை சமைக்க வேண்டியது. பொண்ணு ஒரு வேளை சமைக்க வேண்டியது.

பையன் மட்டும்தான் வேலைக்கு போறான்னா பொண்ணு சமைக்க வேண்டியது.

பொண்ணு மட்டும்தான் வேலைக்கு போகுதுன்னா பையன் சமைக்க வேண்டியது.

ரிஜிஸ்டர் ஆஃபீசுல கையெழுத்து போடறதுக்கு மின்னாடியே இந்த அக்ரிமெண்டை சரியா எழுதிடணும். சமத்துவத்தை சரியா நிலை நாட்டியாச்சு.

என்னாமோ சொல்றாங்களேப்பா. அன்பு, பாசம் அப்படின்னு இன்னான்னாமோ. அதெல்லாம் என்னத்துக்கு சொல்லுங்க பாப்பம். அன்பும் பாசமும் மட்டுமே இருந்துச்சின்னா அடுத்தவேளை சோறு வந்துடுமா?

குழந்தைங்களுக்கு கதைசொல்றதுக்காவது தாத்தா பாட்டி வோணும் எண்டு கதையா விடுறீங்க. டிவியை திருப்புனா நூறு சானல் வருது. இதுல சொல்லாத கதையா அவங்க சொல்ல போறாங்க.

உலகம் எங்கையோ போய்க் கொண்டு இருக்குது. இன்னமும் 'கூட்டு' குடும்பம் 'பொரியல்' குடும்பம் எண்டு சொல்லிக் கொண்டு. சீ சுத்த வேஸ்ட்பா.

சின்ன குடும்பமா இருந்தா வசதியான 'பீட்சா' குடும்பமா 'கோக்' குடும்பமா இருக்கலாம் இல்லை. புள்ள எல்லாம் பொறுமையா பெத்து போர்டிங் ஸ்கூல்ல சேர்த்து விட்டுட்டா போச்சு. வசதிதான் முக்கியம். நம்ம வாழ்க்கை நம்ம சந்தோசந்தான் முக்கியம்.அதைவிட பெண்ணுரிமை ரொம்ப ரொம்ப முக்கியம்.

பொண்ணுக்கு வாழ்க்கையில வரக்கூடாத பெரிய கஷ்டம் மாமியார் கஷ்டம். அதை அவங்களுக்கு கொடுத்துடாதீங்க. யோசிங்க ஆண்களே. யோசிங்க. பெண்ணுரிமைய கட்டிக் காப்பாத்த கிளம்பி வாங்க.

பொண்ணு மாமியார் வீட்டுக்கு போகக் கூடாதுன்னு எழுதிதறது தான் பெண்ணுரிமையாம். அப்படியென்றால் நானும் ஒரு பெண்ணுரிமைக் கட்டுரை எழுதிட்டேன். அப்படித்தானே?

*- அரைபிளேடு*

## பதில் தாறீங்களா பிளீஸ்

பெண்களால் பாதிக்கப்பட்ட ஆண்கள் எல்லாரும் சேர்ந்து அமைத்திருக்கிற 'ஆண் விடுதலைச் சங்கத்தின் ஆரம்பக் கூட்டத்தில் பெண்களை நோக்கி சில கேள்விகளைத் தொடுத்திருக்கிறோம். அதை பகிரங்கமாக இங்கே வெளியிடுவதில் பெருமையடைகிறோம். (கூட்டத்திலை தொண்டைத் தண்ணி வத்தும் மட்டும் கத்திக் கத்திப் பேசி அதே ஸ்ரைல் நிரந்தரமாத் தொத்தி விட்டது)

* சீலை கட்டினா இடுப்புத் தெரியுது வயிறு தெரியுது எண்டு சுடிதாருக்கு மாறினீங்களே, இப்ப அந்த சுடிதாரிலயும் மிடி சுடி எண்டு இடுப்புக்கு ஒரு சாண் மேல இருந்து கிழிச்சு விட்டுப் போட்டு என்ன மாதிரி அப்பாவிகளின்ர கண்களை கன்னா பின்னா எண்டு அலைபாய விடுறியளே, இது சரியோ
* நீங்கள் தான் சாறி பஞ்சாபி ஸ்கேட் மிடி கிடி எண்டு எக்கச் சக்கமான உடுப்பு வச்சிருக்கிறியளே. எங்களுக்கெண்டு இருக்கிறது இந்த ஒரே யொரு ஜீன்ஸ் தானே. நீங்கள் அதையும் விடாமல் கைப்பற்றினால் நாங்கள் என்ன கோவணத்தோடையோ திரியிறது?
* கல்லூரியின்ர முதல் வருசத்தில இருந்து பின்னாலயே நாய் மாதிரி சுத்திக் கொண்டு உங்களுக்காக வாலிப வயசுச் சந்தோசம் எண்டு சொல்லுற புகை மது எண்டு எல்லாத்தையும் தியாகம் பண்ணிப் போட்டு கலியுக முனிவர்களா சடாமுடி இல்லாத குறையோட தெய்வீக காதலோட உங்களையே அம்மாளா நினைச்சு சுத்திக் கொண்டு இருக்கிற எங்களை விட்டுப் போட்டு யாராவது BMWல விலாசம் காட்டிக் கொண்டு மட்டையும் போட்டுக் கொண்டு ஒரு நாளைக்கு 75 சிகரட்டை ஊதிக் கரியாக்கிற உதவாப் பெடியளோட அலட்டிக் கொண்டு அவயளின்ர BMWல திரியிறியளே இது ஞாயமா? அதெப்பிடி நீங்க மட்டும் சரியாத் தேடிப் பிழையான ஆக்களை தெரிஞ்சு எடுக்கிறியள் ஒருக்காச் சொல்லுங்கோ.
* தும்படிச்சு தும்படிச்சு அவன்தாற அரைச் சம்பளத்திலை உங்களைக் கூட்டிக் கொண்டு போய் பேர்கரும் கோலாவும் வாங்கித் தந்து போட்டு நாங்கள் வெறும் பாணைக் கடிக்கிறது உங்களுக்கேன் விளங்க மாட்டன் எண்ணுது.
* நாங்க எல்லாம் தனிக் 'கோக்'கை இழுத்து இழுத்துக் குடிச்சாலும் இரண்டு நிமிசத்தில அது முடிஞ்சு போடும், சிலவேளை லைட்டா அதில கொஞ்சம் அப்பிடி இப்பிடி எண்டு இருந்திட்டு ஏதாவது கலந்தால் ஒரு பத்து நிமிசத்துக்கு இழுத்தடிக்கலாம்! ஆனால் 300 மில்லி கோக்கை வாங்கி வச்சிக்கொண்டு எப்பிடித்தான் நீங்க 3 மணித்தியாலத்துக்கு இழுத்துக் குடிக்கிறீங்களே. எப்படிங்க உங்களாலை இது முடியுது?
* எங்களுக்குக் கொட்டாவி விடவே வாயத் திறக்க ஏலாமல் இருக்கு ஆனால் எப்பவும் தொடந்து FM றேடியோ மாதிரி 24 மணி நேரமும் கதைச்சுக் கொண்டே இருக்கிறீங்களே உங்களுக்கெல்லாம் வாயே நோகாதா? அது வாய்தானா? அடுத்தவன் எப்பவாவது கதைக்க வேணும் எண்டு நினைச்சுப் பாத்து இருக்கிறீங்களா?
* ஏதோ பிறக்கேக்கயே கவசகுண்டலத்தோட பிறந்த மாதிரி எந்தநேரமும் மொபைல் போனும் காதுமா சுத்துறீங்களே, உண்மையிலேயே கதைக்கிறீங்களா? அல்லது வெறும் பம்மாத்தா? அதெப்பிடி நாங்க அதால வாற நேரம் பாத்து உதவாக்கரை போனவன் எண்டு குருட்டுத்தனமாப் கதைக்கிறியளே ஏன்?

இப்போதைக்கு இவ்வளவு சந்தேகங்கள்தான் வந்தது. ஆனால் எல்லாம் ஞாயமான சந்தேகங்கள்தான் எண்டு நினைக்கிறன். நல்லாப் படியுங்கோ. படிச்சுப் போட்டு தாய்க்குலங்கள் எல்லாம், இல்லை... குமர்க் குலங்கள் எல்லாம் ஒரு மூலையில இருந்து உங்கட சிந்தனைக் குதிரையின்ர வாலைத் திருகி விடுங்கோ. ஏதாவது பதில் வருதா பாப்பம்.

*- குழைக்காட்டான்*

## எனக்கு விளங்கினது இதுதான்!

*சினிமாப் பாட்டுகளை கேக்கிற போது சில கருத்துகள் என்ரை மூளையிலை உதிச்சது. அது என்னோடை மழுங்கிப் போகாமல் நாலு பேருக்குப் பயன்படவேணும் எண்ட தூதூதூதூர நோக்கிலை உங்களுக்காக*

*பாட்டு 1 : நான் பாடும் மவுன ராகம் கேட்க வில்லையா?*
சந்தேகம் :மவுனராகம் எப்படிடா கேக்கும் புண்ணாக்கு.

❖ ❖ ❖

*பாட்டு 2 :உங்க பொன்னான கைகள் புண்ணாகலாமா உதவிக்கு வரலாமா?*
சந்தேகம்: உன் கறுப்பான கன்னம் சிவப்பாகலாமா செருப்படி படலாமா சம்மதம் தானா?

❖ ❖ ❖

*பாட்டு 3 : வானத்த பாத்தேன் பூமிய பாத்தேன்*
சந்தேகம்: முதல் ரோட்டை பார்த்து போடா டேய்.. போய் சேந்திடப் போற!!!

❖ ❖ ❖

*பாட்டு 4 : இஞ்சி இடுப்பழகி மஞ்சச் செவப்பழகி*
சந்தேகம்: இஞ்ச எல்லாம் டிறம், பறல் சைசில இருக்குதுகள் இஞ்சி இடுப்பழகியோ...

❖ ❖ ❖

*பாட்டு 5 : அதாண்டா இதாண்டா அருணாச்சலம் நாதாண்டா*
சந்தேகம் :சேர், கொஞ்சம் மரியாதையா கதைங்க சரியா!!!

❖ ❖ ❖

*பாட்டு 6 : ஒரு வார்த்தை பேச ஒரு வருசம் காத்திருந்தேன்*
சந்தேகம் :ஒரு வார்த்தைக்கே ஒரு வருசமெண்டா மிச்சத்துக்கு?

❖ ❖ ❖

*பாட்டு 7 : காதல் கடிதம் தீட்டவே மேகம் எல்லாம் காகிதம்*
சந்தேகம்: அறிவில்லையே? தலை கீழா இருந்தே எழுதப் போறாய்?

❖ ❖ ❖

*பாட்டு 8 : ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு*
சந்தேகம் : அட்றா எவ்வளவு பெரிய கோப்பை

❖ ❖ ❖

*பாட்டு 9 : ராக தீபம் ஏற்றும் நேரம் புயல் மழையோ*
சந்தேகம் : இந்த வானிலை அறிக்கையை நம்பினாலே இப்படித்தான்!!!

❖ ❖ ❖

*பாட்டு 10 : அவள் பறந்து போனாளே. என்னை மறந்து போனாளே*
சந்தேகம் : அதுக்கென்ன செய்யிறது வந்தவன் வெளிநாட்டு மாப்பிள்ளை எல்லே!!

*- கார்த்திக் பிரபு*



*'அரசி' முடிஞ்சாப் பிறகு தான் அம்மா வந்து கழுவி விடுவா. அது மட்டும் சாடையாக் கண்ணயருவம் எண்டால் விடுறியளே?*

சினிமா



விமர்சனம்

# ராமேஸ்வரம்

உலகமே கவனிக்கிறது நம் ஈழத்தமிழர் பிரச்சனையை! அவர்களில் ஒருவருக்கு நடக்கிற காதல் பிரச்சனையை கவனித்திருக்கிறார் இயக்குனர் செல்வம்.

கூட்டம் கூட்டமாக வந்திறங்கும் ஈழத்தமிழர்களுக்கு அடைக்கலம் கொடுக்கும் ராமேஸ்வரத்தில் நடக்கிறது கதை. யாழ்பாணத்திற்கும் ஈழத்தமிழர்கள் பரவிக் கிடக்கும் பிற நாடுகளுக்கும் இடையே உள்ள தூரங் களை அளக்கும் டைரக்டர், 'ராமேஸ்வரம் யாழ்பாணத் திலிருந்து 36 மைல்' என்று போடுகிறாரே, அங்கேதான் புதைந்து கிடக்கிறது எண்ணிலடங்கா அர்த்தங்களும், வெளிப்படுத்த முடியாத ஏக்கங்களும்!

தன் ஒரே சொந்தமான தாத்தாவுடன் ராமேஸ்வரத்திற்கு வரும் ஜீவாவிற்கு, மறுபடியும் ஈழத்திற்கே போய்விட வேண்டும் என்ற தவிப்பு. இங்கே முதல் பார்வையிலேயே இவர் மேல் காதல் வயப்படும் பாவனாவுக்கோ ஜீவனை கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்ற ஆசை.

ராமேஸ்வரத்திற்கு வந்திறங்கும் எல்லா ஈழத்தமி ழர்களுக்கும் உதவிக்கரம் நீட்டும் பணக்கார லால், தன் மகளை ஈழத்திலிருந்து வந்த ஒருவனுக்கு தர சம்மதிப்பாரா? ஆரம்பிக்கிறது காதல் யுத்தம்!

ஒரு சதத்துக்கு வழியில்லாத அகதி நீ என்று இவரும், ஒரு சதத்துக்கு வழியில்லாத அகதிதான் நான். என்ன வேணா லும் செய்வேன் என்று ஜீவாவும் முட்டிக் கொள்ள, தவியாய் தவிக்கிறது பாவனாவின் காதல். இடையில் பாவனா வின் முறைமாமன் இன்ஸ்பெக்டர் போஸ் வெங்கட்டும் சேர்ந்து கொள்ள, திரையில் கலவர சுனாமி. பாவனா காதல் என்னாச்சு என்பது கடைசி வரை விறுவிறுப்பு

கண்களில் ஏக்கமும் கோபமும் தெறிக்க, மூடி வைத்த கங்கு போல் கொதித்திருக்கிறார் ஜீவன். திரும்ப திரும்ப தொல்லை தரும் பாவனாவின் கன்னத்தில் பளார் என்று அறைந்துவிட்டு யதார்த்தத்தை எடுத்துச் சொல்கிறாரே.. ஒவ்வொரு வார்த்தைகளும் கன்னத்தில் அறையும் நிஜங்கள்.

குழந்தைகளுக்கு சட்டை துணிகள் வாங்கிவரும் லால், அதை தன் கையால் கொடுக்க நினைக்க, வேண்டாம் என்று மறுத்துவிடும் ஜீவன், அதற்கு சொல்லும் காரணம் நெகிழ்வு. நீ அகதிதானே என்று கேட்கும் பாவனாவிடம், ஆமாம். அகதிதான் என்று எரிந்து விழுந்துவிட்டு, முகாமிற்கு வந்து அகதிகள் முகாம் என்பதை, புலம் பெயர்ந்த தமிழர்கள் முகாம் என்று மாற்றி எழுதும்போது தமிழனுக்கான சுயமரியாதை தலை நிமிர்ந்து நிற்கிறது. படம் முழுக்க யுத்த பூமியிலிருந்து எழுந்து வந்தவர்போல் நிஜத்தை அப்படியே வெளிப்படுத்தியிருக்கிறார் ஜீவா.

ஏன் காதலிக்கிறார் என்பதற்கு அழுத்தமான காரணங் கள் இல்லையென்றாலும், பாவனாவின் துரத்தல்கள் கவிதை. யுத்தத்திற்கு பிறகு உங்க ஊரிலே காதலே நடக்க லையா? குழந்தையே பிறக்கலையா? என்று ஜீவனை மடக்குவது அழகு.

வழக்கமான சினிமா காதலிகள் போல, முறை மாமன் அடிவாங்குவதை ரசிப்பது கொடுமை. கன்று குட்டிக்கு தன் புடவை தலைப்பால் ஈரம் துடைத்துவிட்டு, விலகிய மாராப்பை ஜீவா பார்த்திருப்பாரோ என்று பதறி தவிப்பது சுவாரஸ்யம்.

'வசந்தியை நான் உனக்கு கொடுக்கலை, நீ எனக்கு கொடுத்திட்டே' என்று சரண்டர் ஆகும் லால், வழக்கம் போல் கம்பீரம்! சின்ன சின்ன பாத்திரங்கள் கூட கவிதையாக செதுக்கப்பட்டிருக்கின்றன.

நாம என்ன பிக்னிக்கா வந்திருக்கோம், காதலிக்க என்று காதலில் விழுந்த ஜீவனின் மனசை மாற்றும் சாந்தி, ஒரு காலை இழந்த சம்பத், தன் ஊரில் வசிக்கும் குருவிக்காக கவலைப்படும் அந்த சிறுமி என்று எல்லா பாத்திரங்களும் மனசுக்குள் ஒரு கீறலையாவது ஏற்படுத்துகிறார்கள்.

இவ்வளவு பெரிய தழும்பா? என்று கலவரப்படும் அதிகாரியிடம், இதுதான் எங்க ஊர்ல சின்ன தழும்பு என்று அலட்சியம் காட்டும் மணிவண்ணன் சில காட்சிகளே வந் தாலும் தழும்பாக அல்ல, அடையாளமாக பதிகிறார்.

இசையை கருவியிலிருந்து உருவாக்காமல், உணர்வின் கருவறைக்குள்ளிருந்து உருவாக்கியிருக்கிறார் இசைய மைப்பாளர் நிரு. 'எல்லாரையும் ஏத்திப்போக கப்பல் வருமா...' இசையும், வரிகளும் மனசை பிசைந் திருக்கிறது. ஆர்.பி.குருதேவின் ஒளிப்பதிவு ஓவியம்!

கலையா? கமர்ஷியலா? தடுமாறியிருக்கிறார் இயக்குனர். இன்னும் கொஞ்சம் சிரத்தை எடுத்திருந்தால் வரமாக வந்திருக்கும் இந்த ராமேஸ்வரம்!

*: நன்றி :தமிழ் சினிமா*

சினித்துளி

## இரட்டை வேடத்தில் விவேக்



இது நகைச்சுவை நடிகர்களின் காலம் போல் இருக்கிறது. ஒரு பக்கம் வடிவேல் கலக்கிக் கொண்டிருக்க விவேக்கும் இரட்டை வேடத் டதுடன் களமிறங்குகிறார்.

சுந்தர் சி. நடிக்கும் 'பெருமாள்' படத்திலேயே விவேக்கிற்கு இரண்டு வேடங்கள். அதனால், சிரிப்பும் இரட்டிப்பாக இருக்கும் என்றார் விவேக்.

'பெருமாள்' படத்தில் வில்லனாக நடிக்கிறார், தெலுங்கு நடிகர் கோட்டா சீனிவாசராவ். இவரது கைத்தடி விவேக்.

ஒரு வேடத்தில் பார்வை போனவராக வரும் விவேக் கறுப்பு கண்ணாடி மாட்டி, பார்வை தெரியாது என்பதை வெளியில் சொல்லாமல் இவர் அடிக்கும் லூட்டி, 'பெருமாளுக்கு' முதுகெலும்பு என்கிறார்கள்.

*ம்ம்ம் எல்லாம் சொல்லுவினம் வந்தால் தான் தெரியும்*

## களமிறங்குகிறார் கவுதமி



கமல், ரஜினி போன்ற முன்னணி நடிகர்களுடன் நடித்தவர் கவுதமி. திருமணம், குழந்தை, மார்புப் புற்றுநோய் என சினிமாவிலிருந்து விலகியிருந்தவர் மீண்டும் நடிக்க வருகிறார்.

திருமணம் முடிந்து ஒரு குழந்தைக்கு தாயான பின், கணவரிடமிருந்து விவாகரத்து பெற்றார் கவுதமி. பிறகு, கமலின் தோழியாக அவரது வீட்டில் வசித்து வந்தார். இடையில் மார்பகப் புற்றுநோயால் அவதிப்பட்டவருக்கு கமலே உதவியாக இருந்து கவனித்துக் கொண்டார்.

சினிமாவிலிருந்து ஒதுங்கியிருந்த கவுதமி, தனியார் தொலைக்காட்சியில் நிகழ்ச்சி ஒன்றை நடத்தினார். அது வெற்றிகரமாக அமையவில்லை.

தற்போது கமலுக்கு சினிமாவில் உதவியாக இருப்பவர், மீண்டும் நடிக்க வருகிறார். வெங்கட் பிரபு இயக்கும் 'சரோஜா' படத்தில் கவுதமி முக்கியமான வேடத்தில் நடிப்பதாக கூறப்பட்டது.

*களத்தில் நின்று பிடிப்பாரா கவுதமி?*

## கிழவனாகிறார் வடிவேல்



இம்சை அரசன் 23ம் புலிகேசி படத்தைப் போல முழுநீள காமெடிப் படமான இந்திரலோகத்தில் நா.அழகப்பன் படத்திலும் வடிவேல் வெழுத்து வாங்குகிறாராம்.

இந்தப் படத்தில் 90 வயது கிழவனாக வந்து எல்லாரையும் நெகிழ வைக்கப் போகிறாராம் வடிவேல்.

முனிவர் ஒருவரின் சாபத்தால் கிழவனாகிறார் என்பதுபோல் காட்சி. சீர்காழி கோவிந்த ராஜனின் பழைய பாடல் ஒன்று பின்னணியில் ஒலிக்க...சோகத்தோடு நடந்து வருகிற காட்சி...மிகப்பெரிய அளவில் பேசப்படுமாம்!

*மக்களை நெகிழ வைக்குமா நெருட வைக்குமா என்பது திரைக்கு வந்தால் தான் தெரியும்*

உங்கள் வருங்கால வீட்டின்
திறவுகோலைப் பெற்றிட அழையுங்கள்



THALAM PROPERTY & FINANCIAL SERVICES

t: 020 8689 1533 m: 07766 337 927 f: 020 8689 1533
www.thalam.co.uk
554 Mitcham Road, Croydon, Surrey, CR0 3AA

இலவச Mortgage சேவைகள்

- Property Sales / Lettings
- Mortgage / Re- Mortgage
- Commercial Loans / Bridging Loans
- Building Insurance
- Life / Critical Illness
- Accident / Sickness
- Planning Permission
- Autocad Design / Drafting

# சினிமா

## லண்டனில் ஒரு வங்காளி நகரம்

# Brick lane திரைப்படம் மீதான ஒரு பார்வை



**தேவபுத்திரன்**
*ஒரு பேப்பருக்காக*

புலம்பெயர்ந்து ஆண்டுகள் பல கடந்து விட்டாலும், இந்த வாழ்க்கைக்கு நாங்கள் பழக் கப்பட்டு இங்கு காலூன்றி விட்டது போன்று மற்ற வர்களுக்குத் தெரிந்தாலும், உள்ளத்தில் எங் கள் சொந்த ஊருக்கு திரும்பிப் போகவேண்டும் என்ற தவிப்பு இருக்கத்தான் செய்கிறது.

அடுத்தவருடம் போவோம், தப்பினால் அதற்கு அடுத்த வருடம் போவோம் என்ற எதிர்பார்ப்புடன் ஆண்டுகள் பல கழிந்து விடுகிறது. ஒன்றில் பொருளாதாரம் இடம் கொடுக்காது அல்லது எமது தேசத்தின் நிலவரம் அதற்கு தோதாக அமையாது. இந்த அங்கலாய்ப்புடன், எதிர்பார்ப்புகள் நிறை வேறாமல் நரைப்பருவம் எய்திய பலரை நாம் சந்தித்திருக்கிறோம்.

இந்தப் பின்னணியில் எழுதப்பட்ட புனை கதைதான் Brick Lane. பங்களாதேசத்தின் தலைநகர் டாக்காவில் பிறந்து இளவயதில் லண்டனுக்கு குடிபெயர்ந்த மொனிக்கா அலி எழுதிய இந்த நெடுங்கதை 2004ல் புத்தகமாக வெளிவந்த போது விற்பனையில் முன்னணி வகித்த புத்தகங்களில் ஒன்றாக இருந்தது. Booker Prize உட்பட பல விருதுகளுக்கு பரிந் துரை செய்யப்பட்டிருந்த இக்கதை இப்போது திரைப்படமாக தயாரித்து வெளியிடப் பட்டுள்ளது.

கிழக்கு லண்டனில் Tower Hamlets பகுதியில் பங்களாதேஸ் நாட்டிலிருந்து வந்து குடியேறி யவர்கள் செறிந்து வாழ்கிறார்கள். அங்குள்ள பிரதான கடைத்தெருதான் Brick Lane. இங்கு பங்களாதேசி குடியேறிகளால் நடாத்தப்படும் Curry House என அழைக்கப்படும் மலிவான இந்திய உணவுச்சாலைகள் நிரம்ப இருக்கின்றன.

பெரும்பாலும் பங்களாதேசத்தின் மலைப் பிரதேசமான சிலெற் (Sylhet) பிராந்தியத் திலிருந்து வந்த தொழிலாளர்களே இங்கு வசிக்கிறார்கள். இவர்களை சிலெற்றிகள் என்று அழைத்து தங்களை இவர்களிடமிருந்து வேறுப டுத்திக் கொள்கிறார்கள் படித்த பங்களா தேசிகள்.

சிலெற்றி என விளிக்கப்படும் பங்களா தேஸ் தொழிலாளிக்கும் சிலெற் பிரதேசத் திற்கும் எவ்வித தொடர்பும் இல்லாவிடினும் 'சிலெற்றி' என்பது படிக்காத பங்களாதேஸ் தொழிலாளர்களை குறிக்கும் சொல்லாக இப்போது உருவாகி விட்டது.

இந்த வர்க்க முரண்பாடுகளையும், புலம் பெயர்வாழ்வியலின் அன்றாடப் பிரச்சனை களையும், கலாச்சார சிக்கல்களையும் மையப் படுத்தி இத்திரைப்படத்தின் கதை நகர்கிறது.

படத்தின் நாயகி நஸ்னீன் (ரனிஸ்ரா சட்டர்ஜி) பங்களாதேஸ் கிராமமொன்றில் பிறந்தவள். தனது பதினேழு வயதில் தந்தை பார்த்த வரனான, அவளிலும் இருபது வயது மூத்த லண்டன் வாசியாய் மாறிவிட்ட படித்த மாப்பிள்ளை சானுவை (சத்திஸ் கௌசிக்) திருமணம் செய்து லண்டனுக்கு வருகிறாள்.

கட்டிடக் காடாய் இருக்கும் Tower Hamlets உள்ளூராட்சிச் சபை தொடர்மாடி வீடொன்றில் வெளித் தொடர்புகள் அதிகமில்லாமல், தனது உணர்வுகளை புரிந்து கொள்ளாத கணவனுடனும், அவளது இரண்டு பெண் பிள்ளைகளுடனும் அவளது வாழ்க்கை நகர்கிறது.

மேலைத்தேய நாகரீகத்தில் வாழும் பிள்ளை கள் தங்கள் தந்தையான சானுவுடன் அடிக்கடி முரண்படுகிறார்கள். தான் புரியும் தொழிலில் உயர்வு அடையமுடியாமல் தவிக்கும் சானு தனது பிரச்சனைகளுக்கான தீர்வு குடும்பத்து டன் நாடு திரும்புவதில் இருப்பதாக நம்பி அதற் கான நாளை எதிர்பார்த்துக் காத்திருக்கிறான்.

பங்களாதேசில் வசிக்கும் நஸ்னின் ஒரே யொரு சகோதரி ஹசினா அங்கு தனது வாழ்க்கையைப் பற்றி வர்ணித்து அடிக்கடி எழுதும் கடிதங்கள் நஸ்னினுக்கு பெரும் ஆறுதலாக இருக்கின்றன.

தான் சிறுவயதில் வாழ்ந்த வாழ்க்கையை, இழந்து போன இளமைப்பருவம் பற்றிய ஏக்கத்தை அவளுக்கு வரவழைக்கின்றன.

இருதடவைகள் துணையை மாற்றும் ஹசினா தனது கணவர்கள் பற்றி எழுதும் காதல் விடய ங்கள் நஸ்னினுக்கு ஒருபுறம் தனது தங்கையை யிட்டான குறும்புத்தனமாகவும், அதேசமயம் தான் இழந்துகொண்டிருப்பவை பற்றிய வருத்தத்தையும் அவளுக்கு கொடுக்கின்றது.

நஸ்னின் வருவாயைப் பெறுவதற்காக வீட்டி லிருந்து உடை தைத்துத்துக் கொடுக்கிறாள். துணிகளை வழங்கி நஸ்னின் மூலம் உடைகள் தைத்து விற்கும் சிலெற்றி இளைஞன் கரீம் (கிறிஸ்தோபர் சிம்சன்) நஸ்னினுடன் நெருங்கிப் பழகுகிறான்.

அவர்களது உறவு படுக்கையறை வரை நீள்கிறது. தன்னை மணந்து கொள்ளுமாறு அவளை வற்புறுத்துகிறான் கரீம்.

புலம்பெயர் தேசத்துக் குடிகளுடன் சேர முடியாத கலாச்சார வேறுபாடுகளையும் தனி மனிதரிடையே உள்ள மனக்குழப்பங்களையும் வெளிப்படுத்தும் உணர்வுச்சிக்கலை இத் திரைப்படம் வெளிப்படுத்துகிறது.

பிரித்தானியாவில் குடியேறியுள்ள வெளி நாட்டு சமூகங்களிடையே காணப்படும் உப கலாச்சாரத்தை (sub culture) தனக்கு பரீட்ச யமான பங்களாதேஸ் சமூகத்தினர் ஊடாக வெளிக்கொணர்ந்திருக்கிறார். படத்தின் மூலக் கதையை எழுதிய மொனிக்கா அலி. அதனை எவ்வித்திலும் சிதைக்காமல் படமாக்கியிரு க்கிறார் படத்தின் இயக்குனர் சாரா கவ்ரன்.

முஸ்லிம் தீவிரவாத இளைஞர்கள் கூட்டும் கூட்டமொன்றிற்கு வழமைக்கு மாறாக நஸ்னினை அழைத்துச் செல்கிறான் அவளது கணவன் சானு.

அந்த கூட்டத்தினை ஏற்பாடு செய்பவர்களில் ஒருவனாக அவளது காதலன் இருப்பது அவளு க்கு தெரிந்திருந்தது. சானுவின் உள்நோக்கம் எதுவென அறியாமல் தனது தவிப்பை வெளிப்படுத்துவதில் ரனிஸ்ரா சட்டர்ஜி தனது நடிப்புத்திறமையை வெளிப்படுத் தியுள்ளார்.

கூட்டத்தில் கலந்துகொள்ளும் இளைஞர்கள் தங்களை (முஸ்லீம்களை) சகோதரர்களா கவும் வெள்ளையர்களை எதிரிகளாகவும் கூறும் போது சானு இடைமறித்து, 'நான் எப்படி உனது சகோதரனாக இருக்கமுடியும்? முஸ்லிம்கள் எல்லோரும் சகோதரர்களாக இருப்பின் மேற்கு பாக்கிஸ்தான் - கிழக்கு பாக்கிஸ்தான் (பங்களாதேஸ்) யுத்தத்தில் மூன்று மில்லியன் மக்கள் கொல்லப்பட்டது எப்படி எனக் கேள்வியெழுப்புகிறான்.



இங்கு சானு தன்னை புத்திஜீவியாகக் காட்டி, கூட்டத்தில் உள்ள சிலேற்றிகளிலிருந்து தனக் குள்ள வர்க்க வேறுபாட்டை காட்டுகிறானா? அல்லது தனது மனைவியின் காதலனை (இந்த காதல் விவகாரத்தை அவன் தெரிந்து கொண் டானோ இல்லையோ என்பது படத்தில் வெளிப் படுத்தப்படவில்லை) பழிவாங்குகிறானா என்ற குழப்பத்தில் நஸ்னின் இருப்பது போலவே பார்வையாளர்களையும் குழப்பத்தில் ஆழ்த்து வது நல்ல சஸ்பென்ஸ்.

வெறுப்பை ஏற்படுத்தக்கூடிய கதாபாத் திரமான சானுவாக நடிக்கும் சத்திஸ் கௌசிக் தனது அபாரமான நடிப்பாற்றலால் அந்த பாத்திரத்தினை மெருகேற்றியிருக்கிறார்.

தவளை முகத்தையொத்தவன் எனவர்ணிக் கப்படும், பருத்த சரீரத்தைக் கொண்ட அழகற்ற, எவ்விதத்திலும் பொருத்தமற்ற கணவனிட மிருந்து, அதிகம் அன்பைப் பெறாத நஸ்னீன் சிலேட்டி இளைஞன் கரீம் உடன் கொள்ளும் உறவு அவளது திருமண பந்தத்திற்கு புறம் பானது என்கின்ற போதும் விரசமில்லாமல் காட்டப்படுவது நஸ்னின் மீது அனுதாபத்தை வரவழைக்கிறது.

மொனிக்கா அலியின் கதையில் காணப் பட்டதுபோல் அவர்களுக்கிடையிலான வெறி யற்ற காமத்தை இயக்குனர் மிக அவதானத் துடன் படமாக்கியுள்ளார்.

Brick Lane பகுதியில் வாழும் பங்களா தேசிகளின் எதிர்ப்பை படத் தயாரிப்பாளர்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தமை இந்த பாலியல் விவகாரம் தொடர்பானது என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....



seven | zero
graphic designers
020 7043 4319
45B Crusoe Road | Mitcham | Surrey CR4 3LJ

creative artwork from concept to design


e-TOURS LTD.
Talbot House
204/226 Imperial Drive
Rayners Lane
Harrow,
Midlesex HA2 7HH
T: 020 8429 5200
T: 020 8429 5201
F: 020 8429 5203
E: info@e2ours.co.uk
W: www.e2ours.co.uk
ATOL PROTECTED
• flights worldwide • hotel booking • travel insurance
• package holidays • visa services • worldwide money transfer
Sri Lanka
five star hotel 7 nights
including flights & transfer
from £510
Bangkok / Hong Kong
£300+TAX
Bombay, Delhi
£210+TAX
Singapore/ Malaysia
£300+TAX
All Major Credit Cards Accepted
Colombo
£225+TAX
Kerala Holiday
Very Special Offer By E-Tours Only
2 Nights Houseboat
3 Nights Kovalam Beach
2 Nights Munar Kerala
inc Flights, Transfer, Meals and Travel Insurance
All These Just For £499 per person
Dubai
from
£109+TAX
Canada
from
£99
Chennai
£210+TAX
SriLankan
QATAR AIRWAYS
Emirates
ETIHAD
Special Family Fare to Colombo buy 3 get 1 free
Your Magical Gateway Into The World
020 8429 5200
mobile Ragu:
07771 788 598


இலக்கியா
ELAKKIA
Authentic Sri Lankan Snacks & Savouries
Tease your taste bud with our exotics fiery & crunchy snacks....!
Crackling... Pakoda
Curly... Murukku
Nibbly... Mixture
Pukky... Payatham-Urroooondai
to Fill Your Snack Tin..! • to Please Your Guest..! • to Get You Party Swing..!
For the full List call us on......! 020 8799 7180
Ruby's Food Products Ltd


15 years
Fancy a feast without the fuss?
Sri Lankan & South Indian catering at its best
From sumptuous buffets to elegant silver service...
From lavish wedding receptions to family celebrations, arangetrams to garden dinner parties we can bring our experienced team to cater to the high standards you expect.
We create themes for any event...
adapting menus and presentations accordingly, tailoring each package to suit your unique needs.
Order Hotline: 020 8799 7180
RUBY'S
Acclaimed Sri Lankan Caterers to
Marriott
Hilton
Unit 4, Walmgate Road
Perivale, Middx UB6 7LH
Tel. 020 8799 7180
Fax. 020 8799 7181

# ANGEL SUPERMARKET



**English And Asian Groceries, fresh food, fruit & vegetable**
**Drinks and Frozen Sea foods**

சகல விதமான மளிகைப் பொருட்கள்
இலங்கை, இந்திய மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
உள்நாட்டு, வெளிநாட்டு மதுபானங்கள்,
குளிர்பானங்கள்
என்பவற்றை நியாய விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.

PayPoint

273-275 ILFORD LANE, ILFORD, ESSEX IG1 2SD

**0208 514 2356**

OPENING HOURS
**MONDAY TO SATURDAY 8.00 AM TO 1.00 AM**
**SUNDAY 8.30 AM TO 1.00 AM**

நாளைய நாகரீகத்தை
இன்றே தரும்
நகை மாளிகை...

# SARATHA JEWELLERS



**Exclusive Jewellery Showroom**

**ALL THE LATEST DESIGNS**
தங்க நகைச்சீட்டு

105 ILFORD LANE,
ILFORD, ESSEX,
IG1 2RJ

Tel: **020 8514 3072**

Angel ஸ்தாபனத்தாரின் இன்னுமோர் புதிய சேவை

# Grand Opening...

**MASALA KING**....... The NEW RESTAURANT
on **Monday**, the 10th of **December** at **12** 'o' clock

Fantastic Opening Day Offer..

**Buffet**
**12 course-meal**
**for only**
**£4.99**



AUM

# MASALA KING

8

**INDIAN & SRILANKAN RESTAURANT**

CAR PARK AT REAR
www.masalaking.co.uk

Fully licensed & air-conditioned

020 8514 2446

***Indian and Sri Lankan Cuisine of high class.***

***Come and enjoy with your family and friends the unique Indo-Sri Lankan Flavour***

***Courteous Service and Good Food***

***"If you happy tell OTHERS, if not tell US"***

**Opening Hours:**
Sunday to Thursday 12.00 to 10.00pm
Friday & Saturday 12.00 to 12.00pm

கார் பார்க் வசதி உண்டு

***Catering Orders for Occasions, Small or Big, MOST WELCOME!***

8 Chapel Road, Ilford, Essex, IG1 2AG.
Tel: **020 8514 2446**
email: *info@masalaking.co.uk*